# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32+4

சுடர் 32 | கதிர் 46 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 27, புதன்கிழமை 11.01.2017


## மண்ணெண்ணெய் ஐந்து ரூபாவால் விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 11
வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு மண்ணெண்ணெயின் விலை நேற்று நள்ளிரவு முதல் 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்தது. இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விற்பனை விலை 44 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## முச்சந்தி முரளி



ஒரு காலத்தில உவர்தான் உன்னத தேசப் பற்றாளர் பாருங்கோ! எல்லாம் காலம்!

# வீரவன்ச நேற்று அதிரடிக் கைது

### கொழும்பில் பதற்றம்

கொழும்பு, ஜன. 11
மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினரால் (எவ்.சி.ஐ.டி) நேற்றுக் கைது செய்யப்பட்டார். இதனால் எவ்.சி.ஐ.டி முன்பாகப் பதற்றமும் - பரபரப்பும் ஏற்பட்டது.



கைதுசெய்யப்பட்ட விமல் கொழும்பு கோட்டைத் தலைமை நீதிவான் மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை 24ஆம் திகதிவரை >> 29

## என்னைப் பிடிக்கச் சொல்லிவிட்டு ரணில் வெளிநாடு ஓடினார்

### விசாரணைக்கு முன்னர் கூறினார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஜன. 11
என்னைக் கைதுசெய்யச் சொல்லிவிட்டே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றுள்ளார். இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் >> 29

### ஊழல் குற்றச்சாட்டு விசாரணை

# வடக்கு அமைச்சர்களுக்கு எதிராக 14 பேர் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜனவரி 11
வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் நேற்று 14 பேர் சாட்சியமளித்தனர். ஏற்கனவே அதிகளவு சிக்கலில் மாட்டியுள்ள அமைச்சருக்கு எதிராகவே அதிகளவில் முறைப்பாடுகள் கிடைத்ததாக அறிய முடிந்தது. >> 04

## சந்திரிகாவின் திட்டமே வருகிறது தீர்வாக



### முன்னர் எதிர்த்தவர்கள் இப்போது ஆதரவளிப்பு என அவரே கூறுகிறார்

கொழும்பு, ஜன. 11
எனது ஆட்சிக் காலத்தில் முன்மொழியப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டத்தையே, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இப்போது கொண்டுவரவுள்ளார்.
அன்று அந்தத் தீர்வுத் திட்டத்தை எதிர்த்தவர்கள் இப்போது அதற்கு ஆதரவளிக்கின்றனர்.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.
கொழும்பிலுள்ள தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற >> 29

## மதில் பாய்ந்தார் கல்விச் செயலர்

### ஆசிரியர்களின் போராட்டத்தை அடுத்து

யாழ்ப்பாணம், ஜன. 11
வெளிமாவட்டங்களில் பணிபுரியும் யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்கள் முதன்மை வாயிலைப் பூட்டி நேற்றுப் போராடியதால், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் >> 29

### காலபோகம் பொய்த்ததால்

# விவசாயிகளுக்கு இழப்பீடு வேண்டும்

### கொழும்பு அரசிடம் வலியுறுத்தி வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன.11
வடக்கு மாகாணம் வறட்சியால் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. நெல் வயல்கள் கருகியுள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கொழும்பு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு கொழும்பு அரசிடம் கோரும் பிரேரணை வடக்கு மாகாண சபையில் >> 29

## 2017 நடுப் பகுதியில் ஆட்சி கவிழ்ப்பு

### பெட்டி படுக்கையுடன் அரசைத் தயாராகுமாறு மகிந்தானந்த எச்சரிக்கை

இந்த ஆண்டின் நடுப் பகுதியில் ஆட்சி கவிழ்க்கப் படும். நடையைக் கட்டு வதற்குப் பெட்டி, படுக்கைகளை இப்போதே >> 29

## யாழ்.பஸ் நிலையக் காணி போதனா வைத்தியசாலைக்காக சுவீகரிக்கப்படப் போகிறது

### ஜனாதிபதியின் செயலாளர் யாழ். மாவட்டச் செயலருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜன. 11
யாழ். போதனா வைத்தியசாலையின் விரிவாக்கத்துக்கு, யாழ். மையப் பேருந்து நிலையக் காணியைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதியின் செயலரினால் மாவட்டச் செயலகத்துக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் விரிவாக்கத்துக்கு, யாழ். மையப் பேருந்து நிலையம் மற்றும் வைத்தியசாலைக்கும் >> 29

## திருட்டு மணல் ஏற்றிச் சென்ற ஹன்டர் ஹைஏஸுடன் விபத்து

### சூட்டுச் சத்தத்தால் பரபரப்பு பொலிஸார் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11
பருத்தித்துறையில் திருட்டு மணல் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் ஹன்டர் எதிரே பயணித்த ஹைஏஸ் வாகனத்தை மோதித் தள்ளியதில் சாரதிகள் உள்ளிட்ட 3 பேர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து >> 04

## அரசியல் கைதிகள் விடுதலைக்கு அரசு முட்டுக்கட்டை

### வழக்குகளை இடம் மாற்ற முயற்சியென நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 11
கொழும்பில் சிறப்பு நீதிமன்றில் நடைபெறும் தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை, கோமாகம நீதிமன்றுக்கு மாற்றம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசியல் கைதிகளின் >> 29

### யாழ். போதனா வைத்தியசாலைக்குள்

## பிளாஸ்ரிக், பொலித்தீன் கொண்டு செல்லத் தடா

### அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஜன. 11
யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகள் மற்றும் உணவு பொதியிடப் பயன்படும் பொலித்தீன் வகை (லஞ்சீற்) என்பன எதிர்வரும் 16 ஆம் திகதியில் இருந்து கொண்டு வரப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்தார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: >> 29

### கடமை நிறைவேற்று அதிபர்கள் எச்சரிக்கை

## நஞ்சருந்தி சாவார்களாம்

யாழ்ப்பாணம், ஜன. 11
ஆசிரியர் ஆலோசகர் பதவியோ , பிரதி அதிபர் பதவியோ வேண்டாம். அதிபர் பதவிதான் எங்களுக்கு வேண்டும். அது வழங்கப்படாவிட்டால், நஞ்சருந்திச் சாவோம் என்று, கடமை நிறைவேற்று அதிபர்கள் தெரிவித்தனர்.
வடக்கு மாகாண சபை முன்பாக நேற்றுப் போராட்டம் நடத்திய >> 04

## பொலிஸாருக்கு எதிரான சித்திரவதைக் குற்றச்சாட்டு விசாரணை பெப்ரவரியில்

### யாழ். மேல் நீதிமன்றம் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11
சுன்னாகம் பொலிஸ் தடுப்பிலிருந்த சந்தேகநபர் சித்திரவதையின் பின்னர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்கு >> 04

## ரவிராஜ் கொலை வழக்கு நேற்று மேன்முறையீடு

கொழும்பு, ஜன. 11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், கடற்படைப் புலனாய்வாளர்கள் உள்ளிட்டோர் குற்றமற்றவர்கள் என்று >> 29





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டு வலயத்துக்கு எதிர்ப்பு

# மகிந்தவிடம் விளக்கம் கேட்டது சீனா

அம்பாந்தோட்டைத் துறை முக விவகாரத்தில் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்து வரும் எதிர்ப்புத் தொடர்பாகச் சீனா அவரிடம் நேரடியாக விளக்கம் கோரியுள் ளது. இலங்கைக்கான சீனத் தூதுவர் யி சியான் லியாங், மகிந்த ராஜபக்சவை அவரது அதிகாரபூர்வ வதிவிடத்தில் நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது அம்பாந்தோட்டைத் துறை முகம் மற்றும் காணிகள் ஒதுக்கீட்டுக்கு மகிந்த ராஜபக்ச எதிர்ப்புத் தெரிவித்து வருவதற்கான காரணங்கள் குறித்து அவரிடம் சீனத் தூதுவர் விளக்கம் கோரினார்.

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை வெளிநாடு ஒன்றுக்கு வழங்கும் திட்டத்தைக் கூட்டு எதிரணியினால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார் என, அவரது செயலகம் தெரிவித்துள்ளது. (த-5)

# 50 ஆண்டு குத்தகைக்கு அம்பாந்தோட்டையை வழங்கவே விருப்பம்

*கூறுகிறார் அர்ஜுன ரணதுங்க*

கொழும்பு, ஜன. 11

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 198 ஆண்டுகள் குத்தகைக்குத் தருமாறு சீன முதலீட்டாளர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு வழங்



குவதற்கே இணக்கம் காணப்பட்டுள்ளது. எனினும் அதனை 50 ஆண்டுகளுக்குத்தான் குத்தகைக்கு வழங்கவேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். பல்கலைக்கழகத்துக்குத் தேர்வு பெற்ற துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு மாபொல பயிற்சி நிறுவனத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்புத் துறைமுகம் ஈட்டிக்கொள்ளும் இலாபத்தின் பெரும்பங்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தச் செலவிடப்படுகின்றது. கடன் மற்றும் வட்டித் தொகையைச் செலுத்துவதற்குக் கொழும்பு துறைமுகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் போதுமானதாக இல்லையாயின் நாம் நிதி அமைச்சிடமிருந்து நிதியை பெற்றுக்கொள்ள நேரிடும். அப்பொழுது உங்கள் மீது பெருந்தொகை வரிச்சுமையைத் திணிக்கவேண்டும். எங்கிருந்தாவது நாம் இந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இதன் காரணமாகவே நாம் முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்கின்றோம்.

இன்று முதலீட்டாளர் மிகவும் கலவரமடைந்துள்ளார். மிக விரைவாக ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட முயல்கின்றார். நாம் கலவரமடையவில்லை. ஒப்பந்தத்தைச் சரியான முறையில் கைச்சாத்திடுவதே எங்களுடைய தேவையாகும். ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட முன்னர் பணத்தை முதலீடு செய்வதற்கு எந்த முதலீட்டாளர் முன்வருவார். நாம் என்ன சொன்னாலும் அம்பாந்தோட்டைத் துறைமுகமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும் - என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். (த-5)

# இடமாற்றம் கோரி நேற்று ஆசிரியர்கள் போராட்டம்

## வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்தை முற்றுகையிட்டனர்



யாழ்ப்பாணம், ஜன.11

வன்னிப் பகுதிகளில் 5 ஆண்டுகள் பணிபுரிந்த ஆசிரியர்கள் தமக்கான இடமாற்றத்தை வழங்கக் கோரி கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வன்னிப் பகுதியில் 5 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்துள்ளமையால் இடமாற்றம் வழங்கப்படவேண்டும் எனக் கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரின் அலுவலகத்துக்கான பாதையை மூடி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து அவர்களுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் உரையாடினார். இதன்போது ஆசிரியர்கள் தமது சேவையைத் தரக் குறைவாகப் பேசியதாகக் கூறித் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலம் 6 ஆண்டுகள் என்பது மாகாண சபையின் தீர்மானமும், இடமாற்றக் குழுவின் தீர்மானமும் ஆகும். எனவே இதனை நாம் தனித்து மாற்றம் செய்யமுடியாது. அதன் பிரகாரம் ஆறு ஆண்டுகள் முடிந்ததும் உங்களுக்கான இடமாற்றம் வழங்கப்படும். 2018 ஜனவரி முதல் இடமாற்றம் வழங்கப்படும் எனக் கடிதம் தரலாம். ஏனெனில் அந்தக் காலப் பகுதியிலேயே அங்கு பதிலீட்டு ஆசிரியர்களை அனுப்ப முடியும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

முன்னர் இருந்த செயலாளர் 5 ஆண்டுகளில் இடமாற்றம் கிடைக்கும் என்று எதற்குக் கடிதம் வழங்கினார் எனக் கேட்ட ஆசிரியர்கள், கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை வீசி எறிந்தனர். செயலாளர் பதில் எதுவும் அளிக்காது விலகிச் சென்றார். (த-ஐ-101)



# யாழ். பல்கலையில் நேற்று 32ஆவது பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். பல்கலைக்கழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு விழா தமிழர் பாரம்பரிய முறையிலான மேளதாள வரவேற்புடன் நேற்றுக் காலை 9 மணிக்கு கைலாசபதி அரங்கில் வேந்தர் பத்மநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

பட்டமளிப்பு விழா நேற்றுக் காலை முதல் மாலை வரை ஐந்து அமர்வுகளாக இடம்பெற்றது. இரண்டாவது நாளான இன்றும் மாணவர்கள் பட்டங்களைப் பெற உள்ளனர். இன்று நான்கு அமர்வுகள் இடம்பெறவுள்ளன. பட்டமளிப்பு நிகழ்வில் 2ஆயிரத்து 151 மாணவர்கள் பட்டம் பெறுகின்றனர். (த-21)

# ஈழத்துச் சிதம்பரத்தில் நேற்று பஞ்சரத பவனி

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவப் பெருவிழாவின் பஞ்சரத பவனி நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோசமும் பெருந்திரளான தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் நாதகான மழையும் முழங்கப் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும்



தொடர்ந்து திருவெம்பாவை ஓதலும் இடம் பெற்று காலை 9 மணிக்கு நடேஸ்வரப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சி கொடுத்தார். (த-250)




## மாதா சொரூபம் உடைத்துச் சேதம்

வவுனியா, செட்டிகுளம் அன்னை வேளாங் கண்ணி ஆலயத்தின் மாதா சொரூபம் விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளதாகச் செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிகுளம், கங்கன்குளம் பகுதியில் உள்ள குறித்த ஆலயத்தின் முன்றிலில் இருந்த மாதா சொரூபம் நேற்று முன்தினம் மாலை விசமிகளால் உடைக்கப்பட்டுள்ளதாக அந்த ஆலயத்தின் குரு அருட்திரு ஜெயபாலன் குரூஸ் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இடத்தைச் சென்று பார்வையிட்ட செட்டிகுளம் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-21)



# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் நினைவு

## நேற்று யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 43ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் இதில் பங்கேற்றனர். மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூர்ந்து ஒருநிமிட அஞ்சலியும் செலுத்தப்பட்டது.



இந்த நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தத்தால் எழுதப்பட்ட 'தமிழாராய்ச்சிப் படுகொலைகள்' எனும் நூலை வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் வெளியிட்டு வைக்க பதில் முதலமைச்சர் ஐங்கரநேசன் பெற்றுக் கொண்டார்.

"உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட ஒன்பது வீரமறவர்களின் தியாகங்கள் என்றுமே எமது மண்ணில் நிலைத்திருக்கும். இலங்கை அரசின் கைக்கூலிகளான பொலிஸாரால் வேண்டுமென்றே மாநாடு குழப்பப்பட்டு, அவர்களால் படுகொலை செய்யப்பட்ட இந்த மக்களின் வீரத்தியாகத்துக்கு விரைவில் விடுதலை கிடைக்கும்" என்று வடக்கு மாகாணப் பதில் முதலமைச்சரும் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

"அகிம்சை வழி முதல் ஆயுதவழிப் போராட்ட காலங்களில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை" என்று வடக்கு மாகாண சபை உறுப் பினர் அனந்தி சசிதரன் தெரிவித்தார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தமிழீழ உணர்வுடன் உள்ள மக்களை ஒன் றிணைத்துப் புதிய யுக்திகளுடன் மாற்று வழிகளில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கே.கரிகாலன் தெரிவித்தார். (ஐ-21-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு பல்கலைகளில் அதிக முரண்பாடு

## சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 11

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர்களுக்கு இடையில் பாடசாலை செல்லும் காலத்தில் இணைப்புக் காணப்படவில்லை. இதனால் வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களில் அதிகமான முரண்பாடுகள் ஏற்படுவதாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

உயர்கல்வி ஊடாகத் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது என்ற தொனிப்பொருளில் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தில் இது தொடர் பாகத் தெளிவுபடுத்தும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.



தேசிய ஒருமைப்பாட்டுக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க, தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர்களுக்கு இடையில் பாடசாலை செல்லும் காலத்தில் இணைப்புக் காணப்படவில்லை. பல்கலைக் கழகங்களில் மாணவர்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களில் இவ்வாறான முரண்பாடுகள் அதிகமாக உருவாகின்றன. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவில்லை என்றார். (து-5)

# நிறைவேற்று அதிகாரம் தொடர ஆதரவளியோம்

*கூறுகின்றார் சந்திரிகா*

கொழும்பு, ஜன. 11

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடரவேண்டும் என்பதில் சுதந்திரக் கட்சி ஆர்வம் காட்டுவதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் சிறப்பு ஆலோசகர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைத் தொடர்வதற்கு ஆதரவளிக்கும் தீர்மானம் எதனையும் சுதந்திரக் கட்சி மேற்கொள்ளவில்லை. சிலர் இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். நான் கட்சியின் மூத்த உறுப்பினர். எமது கட்சியால் அவ்வாறான தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக கூறப்பட்டுள்ளது. அதன்படியே செயற்பாடுகள் அமையும் - என்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் குழுக் கூட்டம் நடைபெற்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைத் தொடர்வது என்று இதன்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-5)

# நடைமுறைக்கு வந்த ஆடைக் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.11

வடக்கு மாகாண சபையில் அமர்வு இடம்பெறும் நாள்களிலாவது ஆடைக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டும் எனக் கடந்த ஆண்டு நடைபெற்ற அமர்வின்போது சில உறுப்பினர்களால் அவைத் தலைவரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

நடப்பு ஆண்டின் முதலாவது அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண சபையில் பணிபுரியும் ஊழியர்கள் ஆடைக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றினார்கள். பெண் ஊழியர்கள் ரோஸ் நிறச் சாறிகளை அணிந்திருந்தனர். ஆண் ஊழியர்கள் வெள்ளைநிற ஆடைகளை அணிந்தனர்.

வடக்கு மாகாண உத்தியோகத்தர்களுக்கான ஆடை ஒழுங்குகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவைத்தலைவர் அறிவித்தமைக்கு இணங்க குறித்த ஆடை ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. (து-8)

# சிறந்த நிதியமைச்சராக ரவி கருணாநாயக்க தெரிவு

கொழும்பு, ஜன. 11

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் இந்த ஆண்டுக்கான சிறந்த நிதியமைச்சராக, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



லண்டனில் இருந்து வெளியாகும் 'தி பேங்கர்' என்ற சஞ்சிகை இந்தத் தெரிவை அறிவித்துள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்திடம் இருந்து 1.5 பில்லியன் நிதியைப் பெற்றமை, நிலுவைக் கொடுப்பனவு பிரச்சினைக்குத் தீர்வு கண்டமை மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியமை, சிறந்த முறையில் வரி அறவிட்டதன் மூலம் மக்களுக்குச் சுமையைக் கொடுக்காமை, கடன் முகாமைத்துவம் உள்ளிட்ட விடயங்களை ஆராய்ந்து இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-5)

# பெண்கள் மீதான வன்முறைகள் கட்டுக்குள் வரும்

*யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். நகரப் பகுதி மற்றும் கோட்டையை அண்மித்த பகுதிகளில் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துர்நடத்தைச் சம்பவங்கள், சேட்டைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

யாழ். நகரில் அமைந்துள்ள கோட்டைப் பகுதியில் மறைவான இடங்கள் காணப்படுகின்றன. அவை சமூக சீரழிவுகளுக்கு வகை செய்கின்றன. இளம் பெண்கள் பலர் இந்தப் பகுதிக்கு அழைத்து வரப்படுகின்றனர். அவர்கள் துர்நடத்தைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இது தொடர்பில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள் ளன.

யாழ். மையப் பேருந்து நிலையப் பகுதி, யாழ். நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் முன்பாக, கூடும் இளைஞர்கள் பெண்கள் மீது பாலியல் சேட்டைகளைப் புரிகின்றனர். இந்த விடயங்கள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ். மாவட்டச் செயலகத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தப் பொலிஸாரால் உரிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும். இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் குழுக்கள், அவர்களின் பின்னணி என்ன என்பது தொடர்பாக ஆரா யப்பட்டுச் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்படும். குற்றச்செயல்கள் நடைபெறும் இடங்க ளைப் பொலிஸார் சிவில் உடையில் கண்காணிப்பர் என்று மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் பதிலளித்தார். (து-5-ரி-106)

# டெங்கு பரவும் சூழல் 4 பேருக்குத் தண்டம்

மன்னாரில் டெங்கு நுளம்பு பரவும் வகையில் தமது வீட்டுச் சூழலை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் 4 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா நேற்றுச் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்குச் சோதனைகளை மேற்கொண்டு வந்தனர். இதன்போது மன்னார் பனங்கட்டிக்கொட்டு மற்றும் சின்னக் கடை ஆகிய இடங்களைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர்கள் 4 பேர் மீது மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தனர். வழக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ் ராஜா ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (து-21-56)

*வவுனியா பேருந்து நிலையத் திறப்புக்கு*

# கொழும்பு அழைக்கவில்லை வடக்கு மா.ச.உக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

கொழும்பு அரசின் ஏற்பாட்டில் வவுனியாவில் திறந்து வைக்கப்படவுள்ள பேருந்து நிலையக் கட்டடத் திறப்பு விழாவுக்கு தங்களை அழைக்கவில்லை என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் கவலைப்பட்டுக் கொண்டனர். சுமார் 15 நிமிடங்கள் இது தொடர்பில் விவாதித்தனர்.

வடக்கு மாகாண சபையின் 82ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின், வவுனியாவில் பேருந்து நிலையக் கட்டடத்திறப்பு விழாவுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்படவில்லை. இதனை அவைத் தலைவரும் இந்தச் சபையும் கவனத்தில் எடுக்க யேவண்டும் - என்றார்.

போக்குவரத்துக்குப் பொறுப்பான வடக்கு மாகாண அமை[illegible] வரனுக்கே இதற்காக [illegible] கப்படவில்லை என்று சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் சுட்டிக் காட்டினார்.

'சில தினங்களுக்கு முன்னர் தேசிய போக்குவரத்துச் சபையின் தலைவர் என்னுடன் பேசினார். வவுனியா பேருந்து நிலையக் கட்டடம் திறக்கும் நிகழ்வு சம்பந்தமான அழைப்பிதழ் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று சபையின் தலைவர் தெரிவித்தார்' என்று டெனீஸ்வரன் சபையில் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் க. சர்வேஸ்வரன், தென்னிலங்கை அரசு முதலமைச்சரையோ, எங்களையோ மதிக்கவில்லை. நாங்கள் இந்த நிகழ்வைப் புறக்கணிக்கவேண்டும் - என்றார். இதே கருத்தையே வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர் மயூரனும் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படாமை தொடர்பில், மீளாய்வு செய்யுமாறு கொழும்பு அரசின் போக்குவரத்து அமைச்[illegible]வைக் க[illegible]லைவர் சி.வி. கே.சிவஞானம் தெரிவித்தார்.(து-5-8-ரி)

# தென்மராட்சிப் பிரதேச செயலராக தேவந்தினி பாபு

தென்மராட்சி, ஜன.11

இதுவரை காரைநகர் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி தேவந்தினி பாபு தென்மராட்சிப் பிரதேச செயலராக உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன் கடந்த 2ஆம் திகதி முதல் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திருமதி தேவந்தினி பாபு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று தென்மராட்சி பிரதேச செயலராகப் பதவியேற்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (து-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குத் தொற்று கிளிநொச்சியில் திடீர் அதிகரிப்பு

கிளிநொச்சியில், ஜன. 11
கிளிநொச்சியில் டெங்கு காச்சல் வேகமாக பரவிவரு
கிறது. கடந்த சில நாள்களில் மட்டும் 14 பேர் டெங்கு
காச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியாலையில் சேர்க்கப்பட்
டுள்ளனர். ஒவ்வொருவரும் மிக அவதாகமாக இருக்கு
மாறு மாவட்ட சுகாதார பிரிவினர் எச்சரித்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு மிகத் தீவிரமாகப்
பரவக்கூடிய அபாயநிலை அவதானிக்கப்பட்டுள்ளது.
பொதுமக்கள் அவதானமாக இருக்கவும். உயிர்கொல்லி
டெங்கு நோய் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்
ளுங்கள். அதற்கான பாதுகாப்புடன் இருங்கள். காய்ச்
சல் இரண்டு நாள்களுக்கு மேல் நீடித்தால் உடனடியாக
அருகிலுள்ள அரச வைத்தியசாலைகளில் உரிய
பரிசோதனைகளை மேற்கொள்ளுங்கள்.
மாவட்டத்திலுள்ள கர்ப்பவதிகள், ஐந்து வயதுக்குட்பட்ட
குழந்தைகள், முதியவர்கள் காய்ச்சல் ஏற்பட்டவுடன்
அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்குச் சென்று
சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
கடந்த வருடம் வரை டெங்கு நோய் தொற்று அற்ற
மாவட்ட மாகக் கிளிநொச்சி காணப்பட்டது. இந்த
வருடத்தின் முதல் ஏழு நாள்களில் கிராஞ்சி, சிவபுரம்,
மலையாளபுரம், அம்பாள்குளம், கணேசபுரம், வலைப்
பாடு, கல்மடு, செல்வாநகர் மற்றும் விசுவமடு ஆகிய,
இடங்களிலிருந்து பதினான்கு பேர் டெங்குக்காய்ச்சலால்
பீடிக்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில்
சேர்க்கப்பட்டுள்ளனர். என்று சுகாதாரப் பிரிவினர்
மேலும் தெரிவித்தனர். (வ-4,35)

## ஆசிரியர் சேவை நேர்முகத் தேர்வு

# வாக்காளர் பதிவுக்கு ஜி.எஸ்ஸின் படிவத்தை முன்வைக்க முடியும்

## வடக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11
இலங்கை ஆசிரியர் சேவைக்
கான நேர்முகத் தேர்வின்போது,
தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்
பட்டுள்ள வாக்காளரின் விவரங்
களை குறிப்பிட்டுக் கொள்வதற்
காக கிராம அலுவலரால் வழங்
கப்படும் படிவத்தையும் முன்
வைக்க முடியும் என்று வடக்கு
மாகாணக்கல்வி அமைச்சின் செய
லர் இ.இரவீந்திரன் அறிவித்தார்.
வடக்கு மாகாண கல்வி அமைச்
சால் எதிர்வரும் 16ஆம் திகதி
தொடக்கம் 19ஆம் திகதிவரை
இலங்கை ஆசிரியர் சேவைக்கு
பட்டதாரிகளை இணைத்துக்
கொள்வதற்கான நேர்முகத்
தேர்வு நடைபெறுகிறது.
இதில் பரீட்சாத்திகள் தமது பெயர்
வாக்காளர் இடாப்பில் உள்ள
மைக்கான அத்தாட்சியை உறு
திப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பி
தழை முன்வைக்கவேண்டும்
என்று கேட்கப்பட்டுள்ளது. எனி
னும் பிரதேச செயலாளரின்
மேலொப்பத்துடன் கிராம அலு
வலரால் வழங்கப்படும் தேருநர்
இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள
வாக்காளரின் விவரங்கள் அடங்
கிய படிவத்தையும் நேர்முகத்
தேர்வில் முன்வைக்க முடியும்
என்று வடக்கு மாகாண கல்வி
அமைச்சின் செயலாளர் தெரி
வித்தார். (வ)

# மகேஸ்வரன் மண்டபத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல்

காரைநகர் சிவன் கோயில் மகேஸ்
வரன் மண்டபம் சுகாதாரச் சீர்கேட்டு
டன் இயங்குவதாகத் தெரிவித்து ஊர்
காவற்றுறை நீதிவான் மன்றில்
பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழக்
குத் தாக்கல் செய்துள்ளார்.
காரைநகர் சிவன் கோயில் திருவிழா
நடைபெற்று வருகின்றது. "துர்நாற்
றம் வீசுதல், கழிவு நீர் ஒழுங்காக
வெளியேற்றப்படாமை, மண்ணெண்
ணையுடன் உணவுப் பொருள் கள்
காணப்பட்டமை, இலையான் -
பூச்சி காணப்பட்டமை, சமையல் செய்
யும் பணியாளர்கள் வாயில் வெற்
றிலை போட்டிருந்தமை உள்ளிட்ட
9 குற்றச்சாட்டுக்கள் மேற்படி மண்ட
பத்துக்கு எதிராகச் சுமத்தப்பட்டு ஊர்
காவற்றுறை நீதிவான் மன்றில்
வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்
ளது. (வ-5)

# கால்கோள் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 11
கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் கால்கோள்
விழா பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் இன்று
காலை 9 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்
டது. அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும்
நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு
மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,
நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எவ்.எக்ஸ்.
அன்டன் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்
கப்பட்டது. (வ-8)

++++++++++++++++++++

தென்மராட்சி, ஜன. 11
கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் தரம் 1 மாண
வர்களைப் பாடசாலையில் இணைக்கும் கால் கோள்
விழாவும் பாடசாலையின் பழைய மாணவனின் நிதிப்
பங் களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட குடி தண்ணீர் விநி
யோக அங்குராப் பண நிகழ்வும் இன்று மு.ப.10.30
மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில்
நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக ஓய்வு
நிலை அதிபர் க.அருந்தவபாலன், கொழும்பு பல்
கலைக்கழக விரிவுரையாளர் திருமதி அருண்ஜா
கங்கேஸ்வரன், பழைய மாணவர் பொன்.கந்தையா
ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்
டது. (வ - 9)

++++++++++++++++++++

தென்மராட்சி, ஜன. 11
மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன்
வித்தியாலயத் தில் தரம் 1 வகுப்பு மாணவர்களை
பாடசாலையில் இணைக்கும் கால் கோள் விழா இன்று
மு.ப.8.30 மணிக்கு நடைபெறும்.
வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில்
நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக
தென்மராட்சி பிர தேச செயலக சிறுவர் பாதுகாப்பு
அலுவலர் செல்வி சி.நடராசா கலந்துகொள்ள
வுள்ளார். (ற-9)

## வடக்கு...

வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக
முன்வைக்கப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுக்கள்
தொடர்பான விசாரணைகள் நேற்றைய
தினம் யாழ். பொது நூலகத்தின் மாகாண சபைக்
குச் சொந்தமான மண்டபத்தில் இடம்பெற்றது.
அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்
களை முன்வைத்தவர்களை விசாரணைக்
குழுவின் முன் சாட்சியம் வழங்க வருமாறு குழு
வின் செயலாளர் கு.காஞ்சனா எழுத்து மூலம்
அழைப்புவிடுத்திருந்தார். சாட்சியமளித்த
அனைவரிடமும் நீதிமன்றம் போன்று சத்தி
யம் பெறப்பட்ட பின்னரே சாட்சியமளிக்க
அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.
ஊழல் குற்றச்சாட்டுக்கள் ஒரு அமைச்சருக்கு
எதிராகவே அதிகளவில் முன்வைக்கப்பட்டன.
வடக்கு மாகாண சபை அமர்வு ஒன்றில் அந்த
ஒரு அமைச்சருக்கு எதிராக மட்டுமல்ல ஏனைய
அமைச்சர்களுக்கு எதிராகவும் ஊழல் குற்றச்
சாட்டு உள்ளதாக முதலமைச்சர் க.வி.விக்
னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.
அந்த ஊழல்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக
ஓய்வுநிலை 2 நீதிபதிகள் இருவரும் ஓய்வு
பெற்ற மாவட்டச் செயலர் ஒருவருமாக 3 பேர்
கொண்ட குழு முதலமைச்சரால் நியமிக்கப்
பட்டது. அந்தக் குழு நேற்று சாட்சிகளிடமிருந்து
சாட்சியங்களைப் பதிவு செய்தது. இன்றும்
சாட்சியப் பதிவுகள் இடம்பெறவுள்ளன.
(வ-4,101)

## திருட்டு...

இடம்பெற்ற போது துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்
கேட்டதாக அந்தப் பகுதியிலுள்ளவர்கள் தெரி
வித்தனர். எனினும் அதனைப் பொலிஸார்
மறுத்தனர்.
பருத்தித்துறை சாரையடியில் நேற்று முன்
தினம் இரவு 11 மணியளவில் கோர விபத்து
இடம்பெற்றது. ஹன்ரரும் ஹைஏஸ் வானும்
நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.
ஹைஎஸ் வாகன முன்பகுதி மோசமாகச் சேத
மடைந்தது.
பருத்தித்துறைப் பகுதியில் சட்டவிரோத மண்
அகழ்வு இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கும்
நிலையில் நேற்று 4 ஹண்டர் வாகனங்களில்
சட்டவிரோதமாக மணல் ஏற்றுவதாகத் தக
வல் கிடைத்தது. அதன்படி களத்தில் குதித்த
தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
'பருத்தித்துறையில் உள்ள கட்டட நிர்மாணத்
துக்காகவே ஹண்டரில் மணல் ஏற்றியதாக
ஆரம்ப விசாரணையில் தெரியவந்தது. எம்
மைக் கண்டதும் சட்டவிரோதமாக மணல் ஏற்
றிச் சென்ற கன்டர்கள் தப்பி ஓட முற்பட்டன.
நாங்கள் துரத்திச் சென்றோம். ஒரு கன்டர்
பொலிஸாருக்குப் பயந்து வேகமாக ஓடிச்
சென்று முதன்மைச் சாலையில் ஏறியதும்
எதிரே வந்துகொண்டிருந்த ஹைஏஸூடன்
மோதியது. தப்பிச் சென்ற ஹன்டர் வாகனங்
களைத் தேடுகிறோம். சம்பவங்கள் தொடர்பில்
மேலதிக விசாரணை முன்னெடுக்கப்படுகிறது'
என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்
தனர்.
விபத்து நடந்த பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச்
சத்தம் கேட்டதாகப் பிரதேச மக்கள் கூறுகின்
றனர். ஆனால் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை
என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஹைஏஸ் வாகன சாரதியும் அதில் பயணித்த
மற்றொருவரும் படுகாயமடைந்தனர். திருட்டு
மணல் ஏற்றிச் சென்றதாகப் பொலிஸார்
கூறும் ஹன்டர் சாரதியான சதீஸ்குமாரும்
(வயது – 27) படுகாயமடைந்தார். 3 பேரும்
மந்திகை வைத்தியசாலையிலும் சிகிச்சைக்
காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு
மாற்றப்பட்டனர். அவர்களில் சந்தேக நபரா
கக் குறிப்பிடப்படும் ஹன்டர் சாரதியை நீதி
வான் பார்வையிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி
வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்
டார். சந்தேகநபர் சிகிச்சை முடிந்து அவர்
வெளியேறும்போது சிறைச்சாலைக்கு மாற்றப்
படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,26)

## நஞ்சருந்தி...

யபோதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்
பிட்டனர்.
வடக்கு மாகாணத்தில் உள்ள கடமை நிறை
வேற்று அதிபர்கள் தமக்கு அதிபர் நியமனம்
வழங்கப்படவேண்டும் எனக் கோரிப் போராட்
டம் நடத்தினர். வடக்கு மாகாண முதலமைச்
சர் சி.வி.விக்னேஸ்வரன், தங்களது நியமனங்
களைக் குழப்பியடிக்கும் வகையில் செயற்படு
கின்றார் என்று அவர்கள் குற்றம் சுமத்தினர்.
இலங்கையின் ஏனைய மாகாணங்களில்
நடைபெறாத விடயங்கள் வடக்கு மாகாணத்
தில் மாத்திரம் ஏன் நடைபெறுகின்றன என்
றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.
போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வடக்கு
மாகாண சபை உறுப்பினர்கள் சென்றனர்.
கடமை நிறைவேற்று அதிபர்களைச் சந்தித்த
னர். உங்களுக்கு [illegible] அதிபர்
ளும் பாதிப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்
போம் என்று கடமை நிறைவேற்று அதிபர்
களிடம் மாகாண சபை உறுப்பினர்கள்
தெரிவித்தனர்.
'எங்களுக்கு ஆசிரியர் ஆலோசகர் பதவி,
பிரதி அதிபர் பதவி வேண்டாம். அதிபர் பதவி
தான் வேண்டும். அந்தப் பதவி கிடைக்கும்
வரை எங்கள் போராட்டங்கள் தொடரும். எங்
கள் போராட்டங்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை
என்றால், நீங்களே நஞ்சுப் போத்தலை
வேண்டித் தாருங்கள். நாங்கள் குடித்துவிட்டுச்
சாகின்றோம்' என்று கடமை நிறைவேற்ற அதி
பர்கள் தெரிவித்தனர்.
இதன் பின்னர் கடமை நிறைவேற்று அதிபர்
களுக்கும், வடக்கு மாகாண பதில் முதலமைச்
சர் ஐங்கரநேசனுக்கும் இடையில் முதலமைச்
சர் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.
அதில் முடிவு எட்டப்படவில்லை.
முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற
சந்திப்புத் தொடர்பில் கடமை நிறைவேற்று
அதிபர்களிடம் கேட்டபோது, ஊடகங்களுக்கு
கருத்துத் தெரிவிக்க முடியாது. எங்களுக்கு
ஊடகங்கள் தேவையில்லை - என்றனர்.
(த-5-8)

## பொலிஸாருக்கு...

எதிரான சித்திரவதைக் குற்றச்சாட்டு வழக்கு
விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல்நீதி
மன்றில் 4 நாள்கள் இடம்பெறவுள்ளன.
அதற்கான திகதிகளும் நேற்று அறிவிக்கப்
பட்டன.
கொலை வழக்கில் விளக்கமறியலில் உள்ள
வர்களுக்குப் பிணை கோரும் மனுவும் யாழ்ப்
பாணம் மேல் நீதிமன்றில் நேற்றுத் தாக்கல்
செய்யப்பட்டது.
இந்த வழக்கு மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்
செழியன் முன்னிலையில் நேற்று விசார
ணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட 7
பொலிஸாரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.
கோபி என்றழைக்கப்படும் பொலிஸ் உத்தி
யோகத்தர் வெளிநாட்டிலுள்ளதாகத் தெரி
விக்கப்பட்டது. அவருக்குப் பிடியாணை ஏற்
கனவே பிறப்பிக்கப்பட்ட நிலையில் நேற்றும்
அது நினைவூட்டப்பட்டது.
பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர், வழக்கி
லுள்ள 8 பொலிஸ் உத்தியோகத்தர்களில் 7
ஆவது சந்தேகநபர். அவர் இன்றி வழக்கு
விசாரணையை ஆரம்பிப்பதற்கு சான்று
ஆவணங்கள் தேவை. அந்தச் சந்தேகநபரது
தாயார் சுகயீனமுற்றுள்ளார். அவரைப் பெண்
ஒருவர் பராமரிக்கிறார். அந்தப் பெண்ணின்
வாக்குமூலம் மேல் நீதிமன்றில் நேற்றுப்
பெறப்பட்டது.
அதன்பின்னர் சித்திரவதை வழக்கை எதிர்
வரும் பெப்ரவரி 21ஆம் திகதி, மார்ச் 14 ஆம்
15ஆம் திகதிகள் மற்றும் ஏப்ரல் 4ஆம் திகதி
ஆகிய தினங்களில் விசாரிக்கப்படும் என்று
நீதிபதி அறிவித்தார்.
இதே சம்பவத்தில் கொலை வழக்கு கிளி
நொச்சி நீதிவான் மன்றில் விசாரணை நிறை
வடைந்துள்ளது. அந்த வழக்கில் சுன்னாகம்
பொலிஸ் நிலையத்தில் சம்பவம் இடம்பெறும்
போது கடமையாற்றிய பொலிஸ் நிலையப்
பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட
5 பேர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். அவர்
களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி
யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நேற்று எதிரி
களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி
யால் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.
அது பற்றிய அறிவித்தல் சட்டமா அதிபர்
திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுப்
பிரிவு ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டது. பிணை
மனு தொடர்பான விசாரணை எதிர்வரும் 21
ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக சட்ட மா
அதிபர் திணைக்கள பிரதி மன்றாடியார் குமார்
ரட்ணம் மன்றில் நேற்று முன்னிலையானார்.
எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலை
யாகினர்.

*பின்னணி*

2011 ஆம் ஆண்டு திருட்டுக் குற்றச்சாட்டில்
சுன்னாகம் பொலிஸாரால் 5 பேர் கைது
செய்யப்பட்டனர். 5 சந்தேகநபர்களில் ஒருவர்
சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து
சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டதாக
அவருடன் கைது செய்யப்பட்டிருந்த கண்
கண்ட சாட்சிகள் மல்லாகம் நீதிவான் மன்றில்
கடந்த வருடம் தெரிவித்திருந்தனர். அது
தொடர்பாக அப்போதைய சுன்னாகம் பொலிஸ்
நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 8 பேர் மீது
குற்றஞ்சாட்டப்பட்டது. அதில் கொலைக் குற்
றச்சாட்டில் 5 பேருக்கு எதிராக கிளிநொச்சி
நீதிவான் மன்றத்திலும் சித்திரவதை தொடர்
பாக அந்த 5 பேர் உள்ளிட்ட 8 பொலிஸ் உத்தி
யோகத்தர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்
கல் செய்யப்பட்டது. சந்தேக நபர்களில் ஒருவ
ரான கோபி வெளிநாட்டில் உள்ளார். அவருக்
குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.
ஏனைய 7 பேரும் விளக்கமறியலில் வைக்
கப்பட்டுள்ளனர். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. உயர்தர மாணவருக்கு கருத்தரங்கு

2017 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கு கலை மற்றும் தொழில்நுட்பவியல் பிரிவு பாடங்களுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்குகள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் இன்று தொடக்கம் பிரதி மாதத்தின் முழு நிலா நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிப.3 மணி வரை மீசாலை உயர் கலைக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. இன்று தமிழ் பொறியியல் தொழில்நுட்பவியல் பாடங்கள் நடத்தப்படவுள்ளன. கருத்தரங்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இலவசமாகப் பங்குபற்ற முடியும் என்று லயன்ஸ் கழக கல்வி அபிவிருத்தி திட்ட இணைப்பாளர் சு.வீரசுதாகரன் தெரிவித்தார்.(ு-9)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று
நடைபெறும் பொதுபட்டமளிப்பு விழாவில்
**கல்வி முது தத்துவமாணி** பட்டத்தைப்
பெறும் எமது பாடசாலை அதிபர்

**திருமதி றிசா தனஞ்சயன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்களைப்
பெற்றுப் பல்லாண்டு காலம்
வாழ வேண்டும் என
வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்.சுன்னாகம். (J.7552) (22.18)

## சேவைநலன் பாராட்டு



11.01.2017 இல்
மணிவிழாக் காணும் எமது
கல்லூரி பிரதி அதிபர்
**திரு. சீனியர் அமரசிங்கம்**
(B.Com, Dip.in.Ed, SLPS 2)
அவர்களின் சேவைநலன்
பாராட்டு


**சேவை விவரம்**

**05.08.1984 - 11.09.1989** - மன்/அரிப்பு.றோ.க.த.க.பாடசாலை
**12.09.1989 - 31.05.1997** - யா/அச்சுவேலி மகாவித்தியாலயம்
**01.06.1997 - 27.01.2007** - யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்
**28.01.2007 - 06.01.2011** - யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்.
**07.01.2011 - 22.11.2012** - யா/ குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை
**23.11.2012 - 02.02.2014** -யா/ கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை, சூராவத்தை, சுன்னாகம். (அதிபர்)
**03.02.2014 - இன்றுவரை** - யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி (பிரதி அதிபர்)

சேவையிலிருந்து ஓய்வுபெறும் இவ்வேளை அவரது சேவையை மனதாரப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




இன்று (11.01.2017) புதன்கிழமை
நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக
32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
கல்வியியல் முதுமாணி
(MEd.Hons) பட்டம் பெறும்
எமது பாடசாலையின்
பெருமதிப்புக்குரிய அதிபர்

**திரு.நாகராஜா மகேந்திரராஜா**

அவர்களுக்கு உள்ளம் நிறைந்த
பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு
மேலும் பல பட்டங்கள்,
பதவிகள் பெற்று உயர்வடைய
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பாடசாலைச் சமூகம் -
யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (11.01.2017)
புதன்கிழமை நடைபெறும்
யாழ் பல்கலைக்கழக
32 ஆவது பட்டமளிப்பு விழாவில்
**கல்வியியல் முதுமாணி**
(MEd.Hons)
பட்டம் பெறும் எமது பாடசாலையின்
ஆசிரியை

**திருமதி சுமேதா ஜெயரூபன்**

அவர்களுக்கு உள்ளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச்சமூகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சிவசொரூபினி சிவநேசசர்மா**
**(BBA(Hons) 1 st Class)**
இன்றைய தினம் (11.01.2017)
யாழ். பல்கலைக்கழகத்தில்
நடைபெறும் 32 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
முகாமைத்துவப்பீடத்தில்
சந்தைப்படுத்தல்
துறையில் முதல்தர
சித்தியை பெற்று
தொழில் நிர்வாகமாணிப்
பட்டத்தினைப்
பெறுகின்ற
**சிவசொரூபினி சிவநேசசர்மா**
அவர்களைப் பாராட்டி
மேன் மேலும் பல துறைகளில்
பல பட்டங்கள் பெற எல்லாம்
வல்ல இறைவனின் ஆசியை
வேண்டுவதோடு

மேலும் பட்டம் பெறும் அனைத்து
மாணவர்களையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்,
உறவினர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்
இன்று (11.01.2017) புதன்கிழமை
நடைபெறும்
32 ஆவது பட்டமளிப்பு விழாவின்
7 ஆவது அமர்வில்
கல்வியில் முதுமாணிப்
பட்டம் பெறும் எமது அதிபரைப்
பாராட்டி மகிழ்கின்றோம்

**உயர்திரு யோகராசா ஜெயகாந்தன்**

(B.A (Hons), Dip.in,Edu,
M.Ed (Hons) SLPS - II

ஆரவாரமின்றி அன்புவழி நின்று
எம் சிறார்களின் கல்வியறிவுயர உழைக்கும்
உத்தமனே வாழ்க ! வளம் பெறுக!!

**பழைய மாணவர் சங்கம்**
**யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் சாவகச்சேரி.**




அடங்குபவை: ஆடாதோடை, பனங்கற்கண்டு, கண்டாங்கத்தரி, அதிமதுரம், திப்பலி, இஞ்சி, கற்பூரவள்ளி, முந்திரி ஆகிய ஆயுர்வேத ஔடதங்கள் அடங்கிய 400 வருட பழமை வாய்ந்த பாரம்பரிய பாணியாகும்.

**ஆடாதோடை அதிமதுரம் இருமல் பாணி**




- சகல விதமான இருமல், தடிமல், பீனிசம் , தொண்டை கற கறப்பு மற்றும் சுவாசப்பை நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.
- சிறுகுழந்தைகள், வளர்ந்தோர் மற்றும் வயது வந்தோரும் பாவிக்கக் கூடிய ஆயுர்வேத பாணி
- ரத்தல்கொட ஆயுர்வேத வைத்தியரின் பாரம்பரிய புராதன தயாரிப்பு முறைக்கமைய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- 100% இயற்கை மூலிகைகள் மட்டுமே அடங்கியது
- பக்க விளைவுகள் இல்லை
- மதுசாரம் சேர்க்கப்படவில்லை
- மனித உடலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் எவ்வித ஔடதமும் சேர்க்கப்படவில்லை

தமிழில் தொடர்புக்கு:- ஸ்ரீதரன் 076 824 0023

Sole Agent
சிவா நறுமணப் பூங்கா,
228 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
Arpico Super Market, அனைத்து ஆயுர்வேத பாமசிகளிலும் கிடைக்கும்.

Pasyale Ayurveda Osu (Pvt) Ltd.
Galupitiya, Kadawatha, Sri Lanka
Tel: 011 4818196 / 011 5636470
Email: pasyalaayurveda_product@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணசேவை

கந்தரோடை, மடத்தடி, சுன்னாகம் ஸ்ரீ நாகபுவனேஸ்வரி அம்பாள் ஆலய வளவில் இலவச திருமணசேவை நடைபெற்று வருகின்றன. அதாவது தரகர் (புறோக்கர்) கூலிகள் அல்லாது திருமண சேவை. எம்மிடம் போதிய மணமகன், மணமகள் குறிப்புகள் நிறைய இருக்கின்றன. மணமகன், மணமகள் குறிப்பு, இரண்டு படங்களுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி, போக்குவரத்து செலவுகளுக்காக ரூபா இரண்டாயிரம் வாங்கப்படும். நேரில் தொடர்புகொள்ளவும்.

இடம்:- கந்தரோடை நாகவிகாரையிலிருந்து 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. ஒரே பாதையில் உள்ளது.

தொலைபேசி இலக்கம்:- 077 516 8481

சீதனம் பேசித்தீர்க்கப்படும்.

காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை. (J.7573) (22.18.17) க.சந்திரராசன்

## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

## Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமியாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

## முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ/து)
## அறிவித்தல்
## பகிரங்க மூடிய கூறுவிலை விற்பனை

மு/க.தொ.கூ.சங்க சமாசத்துக்குச் சொந்தமான பார ஊர்தி, உழவு இயந்திரம், உழவு இயந்திர இழுவைப் பெட்டி விற்பனை செய்யப்படவுள்ளது.

| வாகன இலக்கம் | இனம் |
|---|---|
| 47 - 0539 | அசோக் லேலண்ட் லொறி |
| NPRB - 6202 | மகேந்திர உழவு இயந்திரம் |
| NPRW - 0239 | உழவு இயந்திர இழுவைப்பெட்டி. |

மூடிய கூறுவிலைகள் மூலம் விற்பனைக்கு விடப்படும். ஒவ்வொரு வாகனத்துக்கும் தனித்தனியான விண்ணப்பப் படிவத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் 500/= செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

ஆரம்ப வைப்புத் தொகையாக ரூபா 2000.00 வைப்பாக செலுத்தப்படல் வேண்டும். இத்தொகை மீளளிக்கக் கூடியது.

மேற்கூறிய வாகனங்களில் பாரஊர்தி லொறியைப் பார்வையிட **முன்னாள் சமாச காரியாலயம், கடற்கரைவீதி, முல்லைத்தீவு** என்ற முகவரியிலும், உழவு இயந்திரம், உழவு இயந்திர இழுவைப் பெட்டியை **சமாச தலைமைக் காரியாலயம், மாங்குளம் வீதி, முல்லைத்தீவு** என்னும் முகவரியிலும் கிழமை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பார்வையிட முடியும்.

விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் சமாச காரியாலயத்தில் நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இம் மூடிய கூறுவிலை விண்ணப்பங்கள் 2017.01.11 ஆம் திகதி தொடக்கம் 2017.01.25 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். வாகனங்களுக்கான மூடிய கூறுவிலைகள் அன்றைய தினம் 2 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.

மூடிய கூறுவிலைகள் சங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதிக்குக் குறைவாக இருக்கும் இடத்து 2017.01.25 ஆம் திகதி அன்றைய தினமே பிற்பகல் 4 மணிக்கு மதிப்பீட்டு பெறுமதிகளிலிருந்து பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும். (நிபந்தனைகள் உண்டு. )


**தலைவர் / பொதுமுகாமையாளர்,**
**முல்/மாவட்ட கடற்றொழிலாளர் கூ.ச.சமாசம்,**
**முல்லைத்தீவு.**

# உணவூட்டல் நிகழ்ச்சித் திட்ட ஆரம்ப விழா வவுனியாவில்

வவுனியா, ஜன.11

வடக்கு மாகாணத்தின் பாடசாலை உணவூட்டல் நிகழ்ச் சித்திட்டம் 2017 இன் ஆரம்ப விழா நேற்று முன்தினம் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரதிப்பிரதம செயலாளர் திருமதி ச.மேகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களுக்கு காலை உணவு அதிதிகளால் வழங் கப்பட்டது.



நிகழ்வில் உலக உணவுத் திட்டத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் இயக்குநர் டேவிட் கற்குட், உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி பிரண்டா பேட்டன் ஆகியோருக்கு நினைவுப் பரிசில்களை பாடசாலை மாணவர்கள் வழங்கினர்.

உலக உணவுதிட்ட நிறுவனத்தின் வதிவிடப்பிரதிநிதி பிறன்டா வற்றொன், ஆசிய, பசுபிக் பிராந்திய நிர்வாகி டேவிட் கட்ரூன், வவுனியா மாவட்டச் செயலாளர் றோ.புஸ்பகுமார, வவுனியா மேலதிக மாவட்ட செயலாளர் திரேஸ்குமார், வவுனியா மாவட்டச் செயலக உலக உண வுத்திட்ட கண்காணிப்பு பிரிவு பொறுப்பதிகாரி திருமதி கிருபாசுதன், வடக்கு மகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாணக் கல்வியமைச்சர் குருகுலராஜா, வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலய அதிபர் திருமதி நந்தகோபாலன், வவுனியா நகரகோட்டக்கல்வி அதிகாரி எம்.பி. நடராஜ், உலக உணவு திட்ட வடக்கு பொறுப்பதிகாரி றொய்ஸ், வடக்கு மாகாண கல்வித்திணைக்கள உலக உணவுத்திட்ட இணைப்பாளர் பீரிஸ், கோட்டமட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கோட்டக்கல்விப்பணிப்பாளர் கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-21,402)

## University of Jaffna

**Sir Pon Ramanathan Memorial Lecture -2017**
**on**

Can 'Adam's Peak' be a symbol of Peace and Reconciliation in post war Sri Lanka? : An ethno - historical Inquiry

**Speaker :** Professor Premakumara de Silva,Ph.D
Professor in Sociology and Anthropology
Department of Sociology
University of Colombo.

**Place:** Kailasapathy Auditorium,
University of Jaffna

**Date :** 12.01.2017

**Time :** 4.00p.m

*All are Cordially invited.*

Registrar

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
சீமாட்டி லீலாவதி இராமநாதன்
நினைவுப் பேருரை

## ஈழத்தில் 'சைவமும், தமிழும்' என்னும் கருத்துநிலை உருவாக்கம்

| | | |
|---|---|---|
| பேருரை வழங்குநர் | : | பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஸ் தலைவர், மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை. கலைப்பீடம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| இடம் | : | கைலாசபதி கலையரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| திகதி | : | 13.01.2017 வெள்ளிக்கிழமை |
| நேரம் | : | பி.ப.3.00மணி |

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி.27678) (13.18.17) பதிவாளர்

## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்கு பல்கலைக்கழகம், கல்லடி, மட்டக்களப்பு 2015/2016 கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளல்

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2015/2016 கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் கல்வி நிகழ்ச்சித்திட்டம் 16.01.2017 (திங்கட்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு நிறுவகத்தின் இராஜதுரை அரங்கில் ஆரம்பமாகும்.

சகல கற்கைத்துறைகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட 2015/2016 கல்வியாண்டுக்கான சகல மாணவர்களும் தவறாது சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.

**சிரேஷ்ட உதவிப்பதிவாளர் 065 222 2663**
**உதவிப்பதிவாளர் 065 205 0702**

**பணிப்பாளர்,**
**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,**
**கிழக்கு பல்கலைக்கழகம், கல்லடி, மட்டக்களப்பு.**
06.01.2017

## காணவில்லை

NPXC(xxxx) என்னும் இலக்கமுடைய வாகனத்தின் (இன்சூரன்ஸ். Tax ) பா. கபிலன் என்பவருடைய லைசன்ஸ் என்பவற்றைக் காணவில்லை. இதைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 461 8377**

## காணி விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதி, நாவாந்துறைச் சந்தியில் இருந்து 200m தூரத்தில் முத்தமிழ் வீதி, 7 ஆவது ஒழுங்கையில் 3 பரப்பு (நெற்பரப்பு) உறுதிக் காணி விற்பனைக்கு உண்டு. இருவராக சேர்ந்தால் பிரித்தும் கொடுக்கப்படும்.

076 833 1234

## விற்பனைக்கு

சுண்டுக்குளியிலிருந்து 1/2Km தூரத்தில் விதானையார் வீதிக்கு முன்பாக உள்ள மொறிஸ் லேன் 107/13, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற மூன்று பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 076 309 7769**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் அலுவலகப் பயன்பாட்டுக்கு வீடு தேவை.

**076 842 4914/ 077 822 4221**

## SUPER LUXURY BUS FOR HIRE

Call
076 822 7522
076 822 7515
076 822 7523



29 Seats / Fully Adjustable Seats / Fully Air Conditioned
TV+DVD System / Free Wi-fi
581, K.K.S ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை இடமாற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

## நற்பிட்டிமுனை மக்கள் நேற்று முன்னெடுப்பு



அம்பாறை, ஜன. 11

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நற்பிட்டிமுனை ஆயுள் வேத வைத்தியசாலையை தற்காலிகக் கட்டடமொன்றுக்கு இடமாற்றியுள்ளமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும், உரிய வைத்தியசாலையின் நிரந்தர கட்டடத்தில் வைத்தியசாலையை இயங்கச்செய்யு மாறு கோரியும் முறைப்பாடு செய்ததோடு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

நற்பிட்டிமுனை அல்-கரீம் நெசவாளர் மற்றும் கைத்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பினரால் கல்முனைப் பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளரிடம்நேற்று முன்தினம் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த பிராந் திய அலுவலகம் முன்பாக நேற்றுக் கவன வீர்ப்பும் நடத்தப்பட்டது.

முறைப்பாட்டைப் பிராந்திய ஆணையாளரிடம்சமர்ப்பித்தநற்பிட்டிமுனை அல் - கரீம் நெசவாளர் மற்றும் கைத்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பினர் கவன வீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

நற்பிட்டிமுனை மற்றும் அயல் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக் களுக்கு அளப்பரிய சேவை யாற்றி வரும் ஆயுள்வேத வைத்திய சாலையைத் தற் காலிகக் கட்டடத்துக்கு மாற்றியுள்ளதுடன், வைத்திய சாலை இயங்கிவந்த அதன் நிரந்தரக் கட்டடத்தை வேறு தேவைக்குப் பயன்படுத் துவதற்கு மறைமுக நட வடிக்கைகள் முன்னெடுக் கப்படுவதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. (த-4,30)

# திருமலையில் 130 பேருக்கு காணி உறுதிகள்

மட்டக்களப்பு, ஜன.11

திருகோணமலை, பட்டினமும் சூழலும் பிரதேசசபை, தம்பலகாமம் பிரதேசசபை ஆகிய எல்லைகளுக்குட்பட்ட குடியிருப்பாளர்கள் 130 பேருக்கு நேற்றுமுன்தினம் முதலமைச்சரினால் காணி உறுதிகள் வழங்கப்பட்டன.

சுமார் 30 வருடங்கள் கடந்தும் குடியிருப்புக் காணிகளுக்கான உறுதி ப்பத்திரங்கள் கிடைக்காமல் இருந்தவர்களுக்கே காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாகாண வீதி அபிவிருத்தி, காணி அமைச்சர் ஆரிய வதிகலப்பதிதலைமையில் திருகோணமலை குளக்கோட்டன்நூலக கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (த-ய-46)

# சிறையில் இருக்கும் சுங்க அதிகாரிக்கு பதவியுயர்வு

## விசாரணை செய்கிறது ஜனாதிபதி செயலகம்

கொழும்பு, ஜன 11

தனது உத்தியோகபூர்வ பிஸ்டலால் சுட்டு நபரொருவருக்குக் காயத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டு தொடர்பில் சிறையிலிருக்கும் பிரதிச் சுங்கப் பணிப்பாளர் ஒருவருக்குச் சுங்கத் திணைக்களத்தில் பதவியுயர்வு வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை சுதந்திர அரச சேவையாளர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு எழுத்துமூல முறைப்பாடொன்றை சமர்ப்பித்ததையடுத்து ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இந்தப் பதவியுயர்வு தவறுதலாக ஏற்பட்டதா அல்லது விசமத்தனமாகச் செய்யப்பட்டதா என்பதைப் பற்றி விசாரணை நடத்தப்படுமெனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

கிரிமினல் குற்றமொன்றில் சிறை வைக்கப்பட்டிருக்கும் அரச ஊழியர் ஒருவருக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டமை குறித்து அரச சேவை ஆணைக்குழு நிதியமைச்சின் செயலாளரிடம் விளக்கம் கோரியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள சுங்கப் பிரதிப் பணிப்பாளரைக் கட்டாய விடுமுறையில் அனுப்புமாறு நிதியமைச்சின் செயலாளர் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தபோதிலும் பணிப்பாளர் நாயகம் அந்த நடவடிக்கையை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாக அரச சேவையாளர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. (தி)

# தீர்வு முயற்சிக்கு சமாந்தரமாக அபிவிருத்தியும் நடக்கவேண்டும்

## சிறிநேசன் எம்.பி. கோரிக்கை

செங்கலடி, ஜன.11

நாட்டில் இனப்பிரச்சினைக்கு நிரந்தமான தீர்வைநோக்கி நகரும் அதேவேளை, அதற்குச் சமாந்தரமாக அபிவிருத்திப் பணிகளும் முன்னகர்த்தப்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

நாட்டின் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அரசினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசுடன் ஒப்பிடும்போது நல்லாட்சி அரசில் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் முன்னேற்றகரமான பல செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

படையினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த பொதுமக்களது காணிகளில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

தமிழ் அரசியல் கைதிகளில் சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலங்களில் தமிழ்ப் பிரதேசங்கள் பல அபிவிருத்தியில் பின்னோக்கிக் காணப்பட்டன. அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாயப்புகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

இந்த நாட்டிலுள்ள அனைவரும் இலங்கையர் என்ற மகுடத்தின்கீழ் சமத்துவத்துவம் சமவுரிமையுடன் ஐக்கியமாக வாழக்கூடிய தீர்வொன்றையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தற்போதைய நல்லாட்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்,

இந்த அரசு பெரும்பான்மை சிங்கள மக்களின் நம்பிக்கையை மாத்திரமின்றிச் சிறுபான்மை இனங்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றக்கூடிய தீர்வொன்றை வழங்க வேண்டும் - என்றார். (த-ய-47)

# தென்கிழக்குப் பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

எருவில், ஜன.11

அம்பாறை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து ஆறு நாள்களாக வர்த்தக முகாமைத்துவபீட மாணவர்கள் வகுப் புகளைப் புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது மாணவர்கள் 10 பேரை எந்தவித காரணமும் இன்றி வெளியேற்றியதைக் கண்டித்தே தாம் ஆர்ப்பாட்டம் நடத்தி வருவதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பல்கலைக் கழக பதிவாளர் கூறுகையில்,

கடந்த டிசெம்பர் மாதம் தொழிநுட்ப பீடத்தில் பகிடிவதை காரணமாக 10 மாணவர்கள் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் 4 பேரை ஆரம்பக்கட்ட விசாரணைகளின் பின்னர் வகுப்புகளுக்கு அனுமதித்துள்ளோம்.

ஏனைய 6 பேருக்கும் தொடர்ந்து வகுப்புத் தடை உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றோம்.

எதிர்வரும் 18ஆம் திகதியே எமது செனட் சபை கூடவுள்ளது. அந்தக் கூட்டத்திலே அவர்கள் ஆறு பேரினதும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (த-ய)

### முன்னைய அரசு இறக்குமதி செய்த

# அரிசியால் ஏற்பட்ட நட்டம் 1,500 கோடி



கொழும்பு, ஜன 11

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட பாவனைக்கு உதவாத அரிசியின் மொத்தப் பெறுமதி சுமார் 1,500 கோடி ரூபாவுக்கும் அதிகமானதென மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது.

பங்களாதேஷிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த அரிசி அவ்வப்போது கால்நடைத் தீவனத்துக்கு விடுவிக்கப்பட்டபோதும் இன்னும் சுமார் நாலாயிரம் மெற்றிக் தொன் அரிசி உணவுத்திணைக்களத்தின் களஞ்சியசாலைகளில் தேங்கிக் கிடப்பதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அரிசியை இறக்குமதி செய்வதற்கான கடன் அரச வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டது எனவும், எனினும், இதுவரை அந்தக் கடன் திருப்பிச்செலுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஜோன்ஸ் டன் பெர்ணாண்டோ உள் நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்தபோதே இந்த இறக்குமதி நடந்திருப்பதாக வும் தெரியவருகின்றது. (தி)

# எட்டு எம்.பிக்களுக்கு தேசப்பிரிய எச்சரிக்கை

## சொத்து விவரங்கள் சமர்ப்பிக்க ஒருமாத கால இறுதி அவகாசம்

கொழும்பு, ஜன 11

இதுவரை தங்களது சொத்து விவரங்களை சமர்ப்பிக்காத எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேர்தல் ஆணையகத்தின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இறுதி எச்சரிக்கையை விடுத்திருக்கிறார் என ஆணையக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை தங்களது சொத்து விவரங்களைத் தேர்தல் ஆணையகத்துக்கோ அல்லது நாடாளுமன்றச் சபாநாயகருக்கோ சமர்ப்பிக்கத் தவறியுள்ளதால் அவர்களுக்கு இந்த இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களின் சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க ஒருமாத கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

அவர்கள் தமது சொத்து விவரங்களை சபாநாயகருக்கு சமர்ப்பித்திருந்தால் அது பற்றித் தமக்கு அறிவிக்குமாறும் மகிந்த தேசப்பிரிய அவர்களுக்கு அனுப்பியுள்ள எச்சரிக்கைக் கடிதத்தில் தெரிவித்திருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஒருமாத காலத்தில் அந்த விவரங்களை சமர்ப்பிக் கத்தவறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணையகத் தலைவர் தனது எச்சரிக்கைக் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (தி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீதியோரங்களில் மாமிசக் கழிவுகள் கொட்டப்படுவதால் சுகாதாரக்கேடு

களுவாஞ்சிகுடி,ஜன.11

மட்டக்களப்பு - மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்குட்டபட்ட துறைநீலாவணை பிரதான வீதியின் இரு மருங்கிலும் கோழிக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் வீதியைப் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் துர்நாற்றத்தைச் சகித்துக் கொண்டு பயணிக்க வேண்டியுள்ளது.

மருதமுனைப் பிரதேசத்திலுள்ள கடைகளிலிருந்தே கழிவுகள் மூடை மூடையாக இரவு வேளைகளில் வீதியருகில்கொட்டப்பட்டுவருகின்றன. கழிவுகளைக் காவிச்செல்லும் காகங்கள் அவற்றை கோயில் மற்றும் குடி தண்ணீர்க் கிணறுகளுக்குள்ளும் போடுகின்றன.

இதுதொடர்பில் கல்முனை மாநகர ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறிதுகாலம் கழிவுகள் கொட்டப்படவில்லை. ஆனால் தற்போது மீண்டும் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து கல்முனை மாநகர ஆணையாளருக்கும், சுற்றுச் சூழல் பிரிவுக்கும் அறிவித்து உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் செயலாளர் எஸ்.குபேரன் தெரிவித்தார். (ஐ-ய)

## 50 அபிவிருத்திப் பணிகள் இந்த வருடத்தில்

கொழும்பு, ஜன 11

இந்த வருடத்தில் நாடு முழுவதும் ஐம்பது அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேல் மாகாணத்தை மட்டும் மையப்படுத்தாமல் நாட்டின் ஏனைய பாகங்களிலும் மேற்கொள்ளப்படும் எனவும், இந்தத் திட்டங்களில் நகர அபிவிருத்திகள், ரயில் போக்குவரத்து அபிவிருத்திகள் தொழில் சார் நிபுணர்களுக்கான வீட்டுத் திட்டங்கள், வர்த்தக நகரங்களின் அபிவிருத்திகள் ஆகியவை உள்ளடங்குமெனவும் அவர் கூறினார். (த)

# வைத்தியசாலை உணவகங்களில் ஆரோக்கியமான உணவு கட்டாயம்

## இதனைத் தினமும் உறுதி செய்யுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம் ஜன. 11

வைத்தியசாலைகளில் இயங்கும் சிற்றுண்டி நிலையங்களில் ஆரோக்கியமான உணவுகள் வழங்கப்படுவதைத் தினமும் உறுதி செய்யுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி பி.ஜி. மகிபால சகல சுகாதாரத் திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

அதிகரித்துவரும் தொற்றா நோய்கள் சுகாதாரத் துறைக்குப் பெரும் சவாலாக உள்ளன.

தொற்றா நோய்கள் எதிர்பாராத அளவு அதிகரித்துள்ளதுடன் சுமார் 70 சதவீதத்துக்கு மேலான சாவுகளுக்கும் காரணமாக விளங்குகின்றன.

ஆரோக்கியமற்றஉணவுப்பழக்கங்களே இந்த உலகளாவிய சவாலுக்குக் காரணமாக விளங்குகின்றன.

2016 ஆம் ஆண்டில் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை மேம்படுத்த வேலைத்தளங்கள் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களுடன் நாளாந்தச் செயற்பாடுகளை ஆற்றவேண்டுமென்ற கோட்பாட்டைப் பன்னாட்டு சுகாதார நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆரோக்கியமான உணவு மற்றும் குடிபானங்களைச் சுகாதார சேவை ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள் பெறக்கூடிய வகையில் வைத்தியசாலைச் சிற்றுண்டி நிலையங்களை அமைக்கவேண்டும் என திட்டம் வகுத்துள்ளது. இந்தத் திட்டம் முன்னுதாரணமாகத் திகழவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

வைத்தியசாலை சிற்றுண்டி நிலையங்களில் அதிகளவு சீனியிடப்பட்ட மற்றும் காபனேற்றப்பட்ட பானங்களைப் பாவனையாளர்களுக்கு ஊக்கப்படுத்தி வழங்கி வருகின்றனர்.

வைத்தியசாலை சிற்றுண்டி நிலையங்கள் வைத்தியசாலை ஊழியர்களினதும் நோயாளர்களினதும் சுகாதார மற்றும் போசாக்கு நிலையை மேம்படுத்தும் குறிக்கோளைக் கொண்டு செயற்படல்வேண்டும். மாறாக இலாப மீட்டும் இடமாக மட்டும் அமைந்து விடக்கூடாது. ஆரோக்கியமான பாதுகாப்பான உணவுகள் இங்கு நியாயமான விலையில் கிடைத்தலானது திணைக்களத் தலைவர்களால் உறுதி செய்யப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வைத்தியசாலைச் சிற்றுண்டி நிலையமும் பல்வேறு வகையான ஆரோக்கியமான-பாதுகாப்பான உணவுகளைச் சுகாதார சேவை ஊழியர்களுக்கும் வழங்கவேண்டும். உணவு தயாரிக்கும் சேமிக்கும் சுற்றாடல் மற்றும் பாத்திரங்கள் அனைத்திலும் சுத்தம் பேணப்படல் வேண்டும். உணவுச் சட்டத்திற்கு அமைய உணவானது ஆரோக்கியமானதாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டும். ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை ஊக்கப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ஆரோக்கியமற்ற போசாக்கற்ற உணவு மற்றும் குடிபானங்களை விற்பனை செய்வதையும் தவிர்க்கவேண்டும். சுத்தமான குடிதண்ணீரை இலவசமாக வழங்கவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட சேமிப்பு முறைகளைக் கையாளுதல் வேண்டும். குளிரூட்டப்பட்ட உணவுகளில் உரிய வெப்பநிலை பேணப்படல்வேண்டும் போன்ற விதிமுறைகளைவைத்தியசாலைசிற்றுண்டிநிலையங்கள் கடைப் பிடிக்கவேண்டும்.

சிற்றுண்டி நிலையங்களில் ஆரோக்கியமான உணவுகளான மாச்சத்துள்ள உணவுகள், மரக்கறி வகைகள், பழங்கள், புரதச் சத்துள்ள உணவுகள், குடிபானங்கள் போன்றவையும் அதிகளவு சீனி, கொழுப்பு, உப்புக் கொண்ட கோதுமை மாவில் தயாரிக்கப்பட்ட உணவுகள் விற்பனை செய்யப் பரிந்துரை செய்யப்படுகின்றன.

அதேவேளை தரமற்ற சீனி அதிக அளவு சேர்க்கப்பட்ட காபனேற்றப்பட்ட பானங்கள் விற்பனை செய்வதைத் தவிர்க்கவேண்டும்- என்றுள்ளது. (த-9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஜன.11

இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான ஒன்று கூடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் தி.தேவதயாளன் கேட்டுள்ளார். (வ)

# பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சியான ஆரம்பம் புற்றளையில் இன்று

பருத்தித்துறை கோட்ட மட்ட 'பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சியான ஆரம்பம் - 2017' இன்று காலை 8 மணிக்கு புற்றளை மகா வித்தியாலயத்தின் முதன்மை மண்டபத்தில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி அபிராமி பாலமுரளி கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப் பட்டது. (வ)

# மின் வெட்டு

யாழ்ப்பாணம், ஜன.11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் யாழ். பிரதேசத்தில் காங்கேசன்துறை கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம் மற்றும் மன்னார் பிரதேசத்தில் ஒல்லி மோட்டை ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

## மரண அறிவித்தல்

திருமதி **தங்கதேவி விஜயதெய்வேந்திரம்**



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் மூளாய் அராலி மத்தியை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி தங்கதேவி விஜயதெய்வேந்திரம் 10.01.2017 செவ்வாய்க் கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற விஜயதெய்வேந்திரம் (அப்புக் காத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சுந்தரவல்லி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பவளம் தம்பதியரின் அன்பு மருமகளும் கௌரி, திருஅருள்சோதி ஆகியோரின் அன்புத் தாயாரும் வி.செல்வரத்தினம்(J.P) அவர்களின் அன்பு மாமியாரும் இளையதம்பி-தங்கம்மா தம்பதியரின் பெறாமகளும் காலஞ்சென்ற விசாலாட்சிதேவி, தனலட்சுமி, இரத்தினதேவி, விஜயேந்திரன், விக்கிரமாசிங்கன், நிற்சிங்கசேனாதி ராசா மற்றும் பரநிருபசிங்கன், பரமேஸ்வரிதேவி, மகேஸ்வரி தேவி, அதிகாரசிங்கன், பூமாதேவி, நரசிங்கன், மரகதநாச்சிதேவி, இளையசிங்கன், இராசசூரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2017) புதன்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூணாவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி மத்தி**
**077 110 7249**

**தகவல்:**
**வி. செல்வரத்தினம் J.P**

## மரண அறிவித்தல்



**தோற்றம்** **02.06.1924**
**மறைவு** **10.01.2017**

**இசபேலம்மா ஜோசப்**


வசாவிளான், உத்தரிய மாதா கோயிலடியை பிறப்பிடமாகவும் இல.74, 8ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட இசபேலம்மா ஜோசப் நேற்று (10.01.2017) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் அந்திரேஸ்பிள்ளை-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை-ஜேர்மேணம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜோசப் அவர்களின் அன்பு மனைவியும் யேசுராசா,மரியதாஸ், நீற்றா இமலராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார் .

அன்னாரின் இறுதி ஆராதனை ஜெயத்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை மாலை 4 மணியளவில் ஆனந்தநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தல உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அமுதக்கடல் பல்பொருள் வாணிபம், கிளிநொச்சி**
**077 3517 842**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



**இ.சாருஜன்**

எமது குடும்ப நண்பர் இராஜகோபால் அவர்களுடைய மகனும் எனது இனிய மாணவனும் நண்பனுமான அமரர் இ.சாருஜன் அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் வெளிப்படுத்துகின்றோம். அவருக்கு அஞ்சலியை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவனுடன் இரண்டறக்கலக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**Dr.ஜெ. ஜெயலன், Dr. திருமதி ச. ஜெயலன்**
**சுஜீவா வைத்தியசாலை ,கலட்டி அம்மன் கோயில் மக்கள்**
**சீனியர் வீதி மக்கள்,நாச்சிமார் கோயிலடி மக்கள்.**

## விழிநீர் சொரிகின்றோம்

# Lion இராஜகோபால் சாருஜன்

**(தலைவர்- கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் இளைஞர் கழகம்,**
**உறுப்பினர் - தீவக அரிமாக்கழகம், பிராந்திய முகாமையாளர் - பிறீமா)**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.07.1987 | 08.01.2017 |

அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

**இளைஞர் கழகம்,**
**கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் கோயில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சேவை ஆள்சேர்ப்பு

## பட்டதாரிகளின் தகைமையை மீறி போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது

*வடக்கு மாகாண சபையில் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜன. 11

ஆசிரியர் சேவைக்குப் பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் கேட்கப்பட்ட வினாக்கள், பட்டதாரிகளின் தகைமையை மீறி அமைந்துள்ளன. இனிமேல் இவ்வாறான போட்டிப் பரீட்சையில் பட்டதாரிகளின் பாடவிதானத்துடன் தொடர்புடையதாக கேள்விகள் அமைய வேண்டும்

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. இதன் போதே மேற்படி கோரிக்கையை, மாகாண சபை உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் இந்த விடயத்தை சபையில் முதலில் முன்வைத்தார். ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்காக பட்டதாரிகளுக்குப் போட்டி பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சை வினாத்தாளில் குழப்பம் இருந்தாகவும், வினாக்களின் தன்மை தமது தகுதியை மீறியளவில் இருந்தாகவும் பரீட்சார்த்திகள் எம்மிடம் தெரிவித்தனர். இந்தப் பரீட்சைப் பெறுபேற்றை நீக்கம் செய்துவிட்டு மீண்டும் பரீட்சை நடத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

'எங்களுடைய மாணவர்களுக்குச் சரியான பதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். பல்கலைக் கழகத்தில் 3 அல்லது 4 வருடங்கள் பணத்தைச் செலவு செய்து படித்து பட்டம் பெற்று வெளியில் வந்து 4 வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவர்களுக்கு அவ்வப்போதுதான் போட்டிப் பரீட்சை நடத்தப்படுகின்றது. அதன் மூலமாக தெரிவு செய்யப்பட்டு தகமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படுகின்றது. இது இவ்வாறிருக்க பரீட்சை வினாத்தாள்கள் இப்படியான வினாக்களைக் கொண்டிருப்பது அவர்களைக் குழப்புவதாக அமைகிறது. இப்பொழுது 500 ரூபா பணம் செலுத்தியே பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தை முழுமை செய்து அனுப்புகின்றார்கள். வேலையும் இல்லை. அனைத்துக்கும் பெற்றோரிடம் பணம் கேட்க வேண்டிய நிலைவேறு. இப்படியிருக்க பணம் செலுத்தி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்புகிறார்கள். பரீட்சார்த்திகளின் நிலையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்' என்று ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன், இந்தக் கோரிக்கைகள் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. பட்டதாரிகளுக்கான பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியாகி நேர்முகத் தேர்வுக்கான நாள்களும் குறிக்கப்பட்ட நிலையில் வினாத்தாள்கள் பற்றிய விவாதங்கள் மற்றும் நேர்முகத் தேர்வை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் தேவையற்ற ஒன்றாகவே எண்ணுகின்றேன். இப்பொழுது விட்ட இந்தப்பிழைகளை இனி வருங்காலங்களில் விடக்கூடாது என்பதன் அடிப்படையில் கோரிக்கைகளை விடுவது ஆரோக்கியமாக எண்ணுகின்றேன் - என்றார். (வ-5-ரி)

# பொலிஸார் பறித்த 3000 மதுப் போத்தல்களை திரும்பக் கொடுத்தது மது வரித் திணைக்களம்

## வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ். தீவகப்பகுதியில் அனுமதியின்றி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட மது பான சாலையைக் கடந்த மாதம் முற்றுகையிட்ட பொலிஸார், அங்கு கைப்பற்றிய 3 ஆயிரம் மதுபானப் போத்தல்கள் என்ன அடிப்படையில் மீளக் கையளிக்கப்பட்டன என்ற கேள்விக்குப் பதிலளிக்க முடியாது மதுவரித் திணைக்கள அதிகாரி தடுமாறினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் இடல்பெற்ற சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா எழுப்பிய கேள்விக்கே பதிலளிக்க முடியாது மதுவரித் திணைக்கள அதிகாரி இவ்வாறு தடுமாறினார்.

"யாழ். தீவகத்தில் மதுபான சாலையின் அனுமதி முடிந்த பின்னரும் அங்கு மது விற்பனையில் ஈடுபட்டிருந்தவரிடமிருந்து ஊர்காவற்றுறைப் பொலிஸார் 3 ஆயிரம் மதுப் போத்தல்களைக் கைப்பற்றியிருந்தனர். மதுபானப் போத்தல்கள் ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு மாற்றிய பின்பு மது வரித் திணைக்களம் அவற்றைப் பொறுப்பேற்றது. குறித்த மதுபானப் போத்தல்கள் என்ன அடிப்படையில் மது பான சாலையிடம் மீள வழங்கப்பட்டன" என்று வினவினார் வடக்கு எதிர்க் கட்சித் தலைவர்.

இதற்குப் பதிலளித்த மதுவரி அதிகாரி, அந்த மதுபான சாலை நடத்தியவரிடம் முன்பு அனுமதியிருந்தது எனப் பதிலளித்தார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் முன்பு அனுமதி இருந்திருக்கலாம் தற்போது அனுமதி உண்டா என்பதே எனது வினா என்றார். அதற்கு மதுவரி அதிகாரி பதிலளிக்க முடியாது தடுமாறினார். இதன்போது குறுக்கிட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர், மது வரித் திணைக்களம் நடவ டிக்கை மேற்கொள்ளும் என நம்பியே கையளித்தோம். இது தொடர்பில் மிகுதி நடவடிக்கையை நாம் பார்த்துக் கொள்கின்றோம் எனப் பதிலளித்தார். (வ-101)

## கால்கோள் விழாக்கள்

வரணி, ஜன. 11

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் தரம் ஒன்றுக்கான மாணவர்களை வரவேற் கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சி.நவநீதனின் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் திருமதி ப.இராசரத்தினமும், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை தபால் அதிபர் சி. அருணாசலமும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-122)

++++++++++++

யாழ்ப்பாணம், ஜன.11

மானிப்பாய் மெமோறியல் ஆங் கில பாடசாலையின் கால்கோள் விழா இன்று மு.ப 9 மணிக்கு காராளசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## குளத்து நீரைத் திறக்கும் கோரிக்கை மாயவனூர் மக்களால் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

கிளிநொச்சி வட்டக்கச்சி மாயவனூர் புழுதியாற்று குளத்தில் இருந்து நெற்செய்கைக்காக தண்ணீரை 3 அடி திறந்து விடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையைக் கிராம மக்கள் நேற்று மறுத்தனர்.

தற்போதைய வறட்சியால் வயல் நிலங்கள் அழிவடைந்து வருகின்றன. இதனை கருத்தில் கொண்டு குளத்து நீரைத் தருமாறு நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சறீதரன் ஆகியோர் கோரிக்கை விடுத்தனர். பிரதேச மக்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்ததனர்.

தற்போது குளத்தில் உள்ள நீரால் தான் கிணறுகளில் நீர் உள்ளது, குளத்து நீரைத் திறந்து விட்டால் குடி தண்ணீர்ப் பிரச்சினை ஏற்படும், குறித்த குளத்தின் கதவு திறந்துவிட்டால் அதனைத் திரும்ப மூடமுடியாது போன்ற பிரச்சினைக்ள் காணப்படுவதனால் குளத்து நீரைத் திறக்க அனுமதிக்கமுடியாது என்று கிராமத்தவர்கள் தெரிவித்தனர்.

நேற்று மாலை 3 மணியளவில் இடம் பெற்ற இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் செந்தூரன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுதாகரன், கிராம சேவகர், விவசாயிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-4,6)

## பண்டாரவன்னியனின் சிலைக்கு பதிலாக 23ஆம் புலிகேசியின் சிலை

*சபையில் சிவாஜி கிண்டல்*

யாழ்ப்பாணம், ஜன. 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்டாரவன்னியனின் சிலையை வைப்பதற்குப் பதிலாக 23 ஆம் புலிகேசியின் சிலையை வைத்துள்ளனர் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரனால், சிறப்புரிமை தொடர்பான அவசர பிரேரணை கொண்டு வரப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில், மல்லாவியில் திறந்து வைக்கப்பட்ட பண்டார வன்னியனின் சிலை தொடர்பிலேயே, அவசர பிரேரணை அமைந்திருந்தது. தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள சிலை, பண்டாரவன்னியனின் தோற்றத்தை இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. அதனைத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை முன்வைத்தார்.

வழிமொழிந்து கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன், பண்டாரவன்னியன் சிலை எனது நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அது விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கிடையில் விசமத்தனமான செயற்பாடாக இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்துக்கு சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள், வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் என்று பலர் வருகின்றனர். வீரம் பொருந்திய எங்கள் தமிழ் மன்னனின் உருவச் சிலையை வலிந்த உடல் கட்டமைப்புடன் செதுக்காது நோயாளியைப்போல வைத்துள்ளனர். இந்தச் சிலை தொடர்பில் பல முறைப்பாட்டுக் கடிதங்கள் எனக்கு வந்தன. அதில் ஒரு பிள்ளை தனது தந்தையிடம் பண்டாரவன்னியனின் சிலையைப் பார்த்து இந்த மன்னன் போலியோ நோய்வந்தா இறந்தார் என்று கேட்டுள்ளார். இவ்வாறான நிலைக்கு எங்கள் தமிழ் மன்னனின் வீரம் பொருந்திய உடலை கொச்சைப்படுத்தியுள்ளனர் - என்றார்.

அதன் பின்னர் உரையாற்றிய சிவாஜிலிங்கம் பண்டாரவன்னியன் சிலையை பார்க்கும் போது 23 ஆம் புலிகேசியைப் போல் காணப்படுகின்றது - என்றார். (வ-5-8)

# கசிப்புக் குடித்துச் சாவதைவிட கள்ளுக் குடித்து மகிழ்வது சிறப்பு

## இப்படிக் கூறுகிறார் சிவாஜிலிங்கம்

கசிப்புக் குடித்துச் சாவதைவிடக் கள்ளுக் குடித்து மகிழ்வது சிறந்தது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் பதில் முதலமைச்சர் பொ.ஐங்கரநேசனால் பனை வளத்தை பாதுகாப்பதற்காக, நடப்பு ஆண்டை பனைவள அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனப் படுத்தக் கோரும் பிரேரணை முன்வைக்கப்பட்டது. இந்தப் பிரேரணை மீதான விவாதத்திலேயே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் ஐங்கரநேசனால் முன்மொழியப்பட்டபிரேரணையை ஆளும் கட்சி உறுப்பினர் க.விந்தன் வழிமொழிந்தார்.

"வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக ஏராளமான மரங்கள் அழிவடைந்துள்ளன. வடக்கு மாகாணத்தின் மழை வீழ்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக எமது பிரதேச விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன"என்றுவிந்தன்தெரிவித்தார்.

தீபாவளிக்கு முன்னர் ரின்னில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கு விடப்பட வேண்டும் என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி, தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்குப் பதவி வழங்க வேண்டும் என்பதற்காக பனைவள அபிவிருத்தித் திணைக்களம் பயன்படுத்தப்படு கின்றது என்று குற்றம் சுமத்தினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழிப்பு நடைபெறுகின்றது. இதனால். பல பயன்தரு மரங்கள் அழிக்கப்படுகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

இறுதியில் அமைச்சர் ஐங்கரநேசனால் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஏற்றுக் கொள்ளப் படுவதாகப் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் அறிவித்தார். (வ-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு கைகலப்பாகி இருவர் காயம்

வவுனியா, ஜன.11

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இரு கழகங்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் காய மடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

15 ஆவது வருடமாக நடைபெறும் சாந்தன் யூட் ஞாபகார்த்த மின்னொளியிலான கால்பந்தாட்ட வெற்றிக்கிண்ண போட்டி வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அதில் சூடுவெந்தபுலவு வளர்மதி விளையாட்டுக் கழகத்துக்கும், பட்டானிச்சூர் ஏ.பி.சி. விளையாட்டுக்கழகத் துக்கும் இடையே போட்டி நடைபெற்றது. போட்டியின் போது இரு அணி வீரர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியது. ஆதரவாளர்களும் கைகலப்பில் ஈடுபட்டனர். அதில் இருவர் காயமடைந் தனர். போட்டியைத் தொடர்ச்சியாக நடத்த முடியாமையால் போட்டி இடைநிறுத் தப்பட்டது என்று தெரி விக்கப்பட்டது. (ற-21)

# உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கு வற்றாளை, மரவள்ளி

## புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த விவசாயத் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, ஜன.11

கடுமையான வறட்சி கால மாற்றத் துக்கு ஏற்ப எதிர்காலத்தில் உணவு உற்பத்திக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரசி உறையிலே வற் றாளைக் கிழங்கு உற்பத்தி செய்யும் முறையில் புதிய திட்டங்கள் அறிமுகப் படுத்தப்படவுள்ளன.

இவ்வாறுவிவசாயத்திணைக்களப்பணிப் பாளர் நாயகம் பேராசிரியர் ரொஹான்வ விஜயகோன் தெரிவித்தார்.

கண்டி ஒக்ரே ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை விவசாய சூழலுக்கு பயன் படுத்துகின்ற பாரம்பரியம் விளக்க மளித்தல் தொடர்பான செயலமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசி உறையில் வற்றாளைக் கிழங்கு செய்கை பண்ணுவதன் மூலம் வாரத் திற்கு $2\frac{1}{2}$ கிலோகிராம் பெற்றுக்கொள்ள முடியும். கால நிலைக்கு ஏற்ற வகை யில் வற்றாளைக் கிழங்கு கொடி வீட்டில் செய்கை பண்ணுவதற்காக விவசாயத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

கால நிலை மாற்றத்தால் நெற் செய்கை உட்பட மரக்கறி மற்றும் பழ வகைச் செய்கைகள் பாதிக்கப்பட் டுள்ளன. உணவுத் தட்டுப்பாடு ஏற்பட் டாலும், அதற்கு முகம் கொடுக்கும் வகையில் வற்றாளை மற்றும் மர வள்ளி ஆகியற்றை செய்கை பண் ணுவது மிகவும் அவசியமானதாகும். இந்தப் பெரும் போகத்தில் செய்கை பண்ணப்பட்ட 8 இலட்சம் ஹெக்ரேயர் வேளாண்மையில் 50 வீதமானவை கைவிடப்பட்டுள்ளன. காலநிலை மாற்றத்தால் எதிர்வரும் போகத்தில் 4 அல்லது 2 இலட்சம் ஹெக்ரேயர் களிலேயே ஜூன் மாதமளவில் நெல் அறுவடை செய்ய முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது - என்றார். (ற-21)



முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட, விசேட தேவையுடையவர்களைப் பரா மரிக்கும் நிறுவனத்துக்கு ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் வெளிச்சம் அறக்கட்டளையால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. லண்டனில் வசிக்கும் ஒருவரின் நன்கொடை நிதி மூலம் அவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)

## தேவாலயம் உடைத்து பொருள்கள் திருட்டு

முல்லைத்தீவு-மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி தென்னிந்திய திருச்சபை தேவாலயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உடைக்கப்பட்டு, பெறுமதி மிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒலிபெருக்கி, ஒலிபெட்டி, ஒலிவாங்கி போன்றன திருடப்பட்டுள்ளன. இது தொடர்பாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டது. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ற-6)

## கடவுளுக்கே கஞ்சா ரொட்டியோடு ஒருவர் கைது





கிளிநொச்சி, ஜன.11

கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் நீதின்ற விசாரணைகளின்போது ஆல யம் ஒன்றுக்கு கஞ்சாவில் ரொட்டி சுட்டுப் படைத்தேன் என்று வாக்குமூலம் அளித்தார். நீதிமன்று அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 2.275 கிராம் கஞ்சா வைத்தி ருந்த குற்றச்சாட்டில் நீர் கொழும்பைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் கிளிநொச்சி, செல்வாநகரில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் நேற்றுமுன்தினம் கிளி நொச்சிப் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்றில் வாக்குமூலம் வழங்கிய சந்தேகநபர், கிளிநொச்சி நீதிவான்மன்றுக்கு முன்பாக உள்ள துர்க்கை அம்மன் ஆலயத்தில் வேலை செய்தேன். சில பிதிர்க்கடன்களைச் செய்வதற்கு கஞ்சாவில் ரொட்டி சுட்டு அம்மனுக்குப் படைத்தேன் என்று தெரிவித்தார்.

அதையடுத்து ஆலயத்தின் பதிவையும், ஆலயத்தையும் சோதனையிட வேண்டும் என்று மன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

கிளிநொச்சிப் பொலிஸார், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கலாசார உத்தியோ கத்தர், கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர் இணைந்து சோதனை நடத்தினர். சந்தேகத்துக்குரிய பொருள்களும் எவையும் ஆலயத்தில் இருந்து மீட்கப் படவில்லை.

ஆலயம் பதிவற்ற ஆலயம் என்பதுடன், தனியார் காணி ஒன்றில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ளதுஎன்றும்-ஒருபகுதி வீதிக்காக ஒதுக்கப்பட்ட நிலம் என தெரிவிக்கப்பட்டது. புதிதாக கட்டப்படும் ஆலயத்தில் பிதிர்க்கடன் நிறைவேற் றம் இடம்பெற்றது. அதில் படைக்க கஞ்சாவையே குறித்த சந்தேகநபர் எடுத்து வந்தார் என்று ஆலயத் தின் பூசகர் தெரிவித்தார். அதையடுத்து கைது செய்யப் பட்டவருக்கு தண்டம் விதிக்கப்பட்டது. (ற-21,35)

## கதை அறிமுகமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். திருமறைக் கலாமன்ற இலக்கிய அவையும், யாழ். இலக்கியக் குவியமும் இணைந்து நடத்திய தகவம் தமிழ் கதைஞர் வட்டத்தின் பரிசுக் கதைகள் மூன்றுக்கான அறிமுகமும், கலந்துரையா டலும் நடைபெற்றன. கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு கலைத்தூது அழகியல் கல்லூரியில் கவிஞர் சாந்தன் தலைமையில் நடந்த நிகழ்வில் வரவேற்புரையை செல்வர் எமிலும், தமிழ் கதைஞர் வட்டம் தொடர்பாக அறிமுக உரையை செயலாளர் திருமதி வசந்தி தயாபரனும் வழங்கினர். பரிசுக் கதைகள் தொகுதி மூன்று தொடர்பாக யாழ். பல் கலைக்கழக சமூகவியல் துறைப் பேராசிரியர் இ.ராஜேஸ்கண் ணனும், சமகால இலக்கியச் செயற்பாடுகள் குறித்து கவிஞர் கருணாகரனும் உரையாற் றினர். (ற-ரி)

# சாரதி அனுமதிப் பத்திரம் மூலம் அதிக வருமானம்

## வவு. மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.11

கடந்த ஆண்டு வவுனியா மாவட் டத்துக்கான அபிவிருத்தித் திட் டங்கள், பொது மக்களுக்கு மேற் கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு போன்றவற்றுக்காக 211 கோடி ரூபா நிதி செலவு செய்யப்பட்டுள் ளது.

இவ்வாறு வவுனியா மாவட்டச் செயலாளர் எம். பி. றோஹன புஸ்பகுமார தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டச் செயலகத்தால் மேற் கொள்ளப்பட்ட வேலைத் திட்டங் கள், அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரை யாடல் நேற்றுமுன்தினம் வவு னியா மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப் பட்டது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண் ணப்பித்தவர்கள் ஊடாக 4 மில் லியன் ரூபா வருமானம் பெறப்பட் டது. கடந்த ஆண்டுக்கான திறை சேரி நிதியிலிருந்து 186 கோடி ரூபா வவுனியா மாவட்டச் செயல கத்துக்கு அனுப்பப்பட்டது. கடந்த ஆண்டு வவுனியா மாவட்டச் செய லகத்தால் 24 கோடி ரூபா வரும ானமாகப் பெறப்பட்டது.

திறைசேரி நிதி மற்றும் வவுனியா மாவட்டச் செயலகத்தால் மொத்தம் 211 கோடி ரூபா நிதி பெறப்பட்டது. வவுனியா மாவட் டத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், பொதுமக்களுக்கு மேற்கொள் ளப்பட்ட உட்கட்டமைப்பு போன்ற தேவைகளுக்காக கிட்டத்தட்ட முழு நிதியும் செலவு செய்யப்பட்டது.

கடந்த வருட இறுதியில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் மிகுதி யாக நிலுவையிலிருந்த 5.7 லட்சம் ரூபா திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

கடந்த வருடங்களுடன் ஒப் பிடுகையில் 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சாரத்திய அனு மதிப்பத்திரம் விண்ணப்பித் தவர்கள் ஊடாக பெற்றுக்கொள் ளப்பட்ட வருமானமாக நான்கு மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. இதுவே கடந்த வருடம் அதிக வரு மானத்தைப் பெற்றுத் தந்தது.

வவுனியா மாவட்டத்தில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு நிவாரணங்கள் வழங்கு வதற்கான நடவடிக்கை முன்மொழி யப்பட்டுள்ளது. எரிபொருள்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரம் போன்றவற்றை வழங்க முன் மொழியப்பட்டுள்ளது - என்றார்.

கலந்துரையாடலில் வவுனியா, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர்கள், திட்டப்பணிப்பாளர், விவசாயப் பணிப்பாளர் [illegible] கலந்து கொண்டனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குளம் ம.வி. மாணவர்கள் 16 பேர் பல்கலைக்கு

வவுனியா, ஜன.11
வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 16 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் ச.சுபாஸ் கரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அண்மையில் வெளியான க.பொ.த. (உயர் தர) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப் படையில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவன் வர்த்தக பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட நிலையில் முதலாமிடதைப் பெற்றுள்ளார்.
கணிதப் பிரிவில் செல்வதேவன் ஹனுஷ்யன் 2ஏ,பி சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் நான்காம் இடத்தையும், வர்த்தகப் பிரிவில் ராங்கநாதன் யதுகுலன் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.
பாடசாலை வரலாற்றிலும் வடக்கு வலய வரலாற் றிலும் வர்த்தபிரிவில் முதலாமிடத்தைப் பெற்றது இதுவே முதற் தடவையாகும் எமது பாடசாலையில் வர்த்த பிரிவில் ஆறு மாணவர்களும், கலைப்பிரிவில் எட்டு மாண வர்களும், கணிதப் பிரிவில் இரண்டு மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதிபெற்றுள்ளனர் -என்றார். (ற-21)

*உயிர்முறைகள் தொழில்நுட்ப பிரிவில் முதலிடம் பெற்ற தர்மசீலன் தெரிவிப்பு*

# கால்நடையாக சென்று படித்து சிறந்த பெறுபேறு பெற்றேன்



வவுனியா, ஜன.11
போக்குவரத்துக்கள் அற்ற கிராமத்தில் இருந்து கால் நடையாகச் சென்றே கல்வி கற்றேன். ஒரு பாடவேளை முடிந்தபின்னர்பாடசாலைக்கு சமுகமளித்த நாள்களே அதிகம்.
இவ்வாறு தெரிவித்தார் க. பொ.த. உயர்தரப் பரீட்சையில்உயிர்முறைகள்தொழில் நுட்ப பிரிவில் வவுனியா மாவட்டத்தில்முதலிடம்பெற்ற செட்டிகுளம் மகாவித்தியாலய மாணவன் மணிவேல் தர்மசீலன்.
2016ஆம் ஆண்டு க.பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியாகின. அதில் தர்மசீலன் மாவட்ட மட்டத்தில் முதலிம் பெற்றுள்ளார்.
எனது அம்மா, அப்பா தோட்டம் செய்து தான் என்னை படிக்க வைத்தார்கள். நானும் அவர்களுடன் இணைந்து விடுமுறை நாள்களிலும், மாலைவேளைகளிலும் தோட்டம் செய்து தான் படித்தேன். எனது கிராமம் செட்டிகுளம், நித்திக்குளம். மிகவும் பின்தங்கியது. எனது பாடசாலை 9 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இரண்டு கிலோ மீற்றர் தூரம் வாகனப் போக்குவரத்து இல்லை. நடந்து சென்று பிரதான வீதிக்கு போய்த்தான் பேருந்தில் ஏறிப் பாடசாலைக்குச் சென்று படித்தேன். பிரத்தியேக வகுப்புக்கு இரண்டு பாடத்துக்கு சென்றேன். அதற்கு 15 கிலோ மீற்றர் பேருந்தில் சென்றே படித்தேன். ஒவ்வொரு மணித் துளிகளையும் பயனுள் ளதாகப் பயன்படுத்தினால் வெற்றி பெறலாம் - என்று அவர் தெரிவித்தார். (ற-21)

# தண்ணீர் நிலையம் முல்லையில் சுத்திகரிப்புக்கு

## வன்னிப் பகுதியில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

முல்லைத்தீவு ஜன. 11
சிறுநீரக நோயின் தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் வன்னிப்பகுதியில் நிர் மாணிக்கப்பட்ட இரண்டாவது தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் முல்லைத்தீவு நகரில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
வன்னிப் பிராந்தியத்தில் சிறுநீரக நோயின் தாக்கம் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளது. அதனைக் குறைக்கும் நோக்குடன் ஜனாதிபதியின் தூய்மையான குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
ஜனாதிபதியின் இரண்டாவது ஆண்டு நிறைவை அடுத்து முல்லைத்தீவு நகர்பகுதியில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் தலைமைக்காரியத்தில் நடைபெற்றது.
சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக வன்னிப்பகுதியில் இரண்டா வது தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் முல்லைத்தீவு நகரில் அமைக்கப் பட்டது.
நீண்டகாலமாக முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் தூய்மையான குடி தண்ணீரைப் பொதுமக்கள் பணம் கொடுத்தே பெற்றுள்ளனர். அத்துடன் சிறுநீரக நோயின் தாக்கமும் வன்னி பிராந்தியத்தில் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளது. அதனைக் குறைவடையச் செய்யும் முகமாக ஜனாதிபதியின் தூய்மையான குடி தண்ணீர்த் திட்டத்தில் வன்னி பிராயந்தியத்தில் இரண்டாவது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அரசதிணைக்களங்கள், பொதுமக்கள் இதனைப் பெற்று பயன்பெற்றுக்கொள்ள வேண்டும் என வன்னிப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.
இந்த நிகழ்வில், ஜனாதிபதி செயலகத்தின் சிறுநீரக நோய் பாதுகாப்பு வன்னிப்பிராந்திய இணைப்பாளர் சமிந்த கிருத்திய வாசன, வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தவத்த, முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஜ-7)



ஜனாதிபதி செயலகத்தின் சிறுநீரக நோய் பாதுகாப்பு வன்னிப்பிராந் திய இணைப்பாளர் சமிந்த கிருத்திய வாசன, வன்னி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் இணைந்து நிலையத்தைத் திறந்து வைத்தனர்.



திருவெம்பாவையை முன்னிட்டு நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலின் பஜனைக் குழு நேற்று காரைநகர் ஈழத்து சிதம்பரம் சென்று பஜனையில் ஈடுபட்டனர். அதில் நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். (ற-21)

# வவுனியா வைத்தியசாலைக்கு பிற மாவட்டத்தினர் வருகை


*சிகிச்சை பெறுவது இலகு என்பதால்*

வவுனியா, ஜன.11
வெளி மாவட்டங்களைச் சேர்ந்த அதிகளவான நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலையில்சிகிச்சை பெற்றுக்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
பதவியா, ஹெப்பிட்டிக்கொலவா, தமுத்தேகம, அநுராதபுரம் போன்ற பகுதிகளிலுள்ள பெரும்பான்மை இனத்தவர்கள் சிகிச்சைக்கு வருவது அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
வவுனியா வைத்தியசாலைக்கு வருவதற்கு அதிக நேரம் எடுத்தாலும் உடனடியாக வந்து சிகிச்சை பெற்றுச் செல்வதற்கு வசதியாக உள்ளது.
அநுராதபுரம் வைத்தியசாலைக்குச் சென்றால் வைத்தியர் வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டியுள்ளது. நீண்ட வரிசையிலிருந்து மருந்து எடுத்துக் கொண்டு வீடு செல்ல பல மணிநேரம் செல்கின்றது. வவுனியாவுக்கு வந்தால் உடனடியாக வைத்தியரை பார்வையிட்டு சிகிச்சை பெற்று உடன் திரும்ப முடிகின்றது. வவுனியா வைத்தியசாலையில் அதிகளவான பெரும்பான்மை இனத்தவர்கள் பணி புரிவதால் மொழி ரீதியில் எவ்வித தாமதமும் ஏற்படுவதில்லை - என்று வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் தெரிவித்தனர். (ற-21)

# சிறுமியுடன் வசிப்பதற்கு வீடு வழங்கிய பெண்ணுக்கு மறியல்

தென்மராட்சி, ஜன.11
15 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்ற இளைஞருக்கு வீடு கொடுத்து சிறுமியை துர்நடத்தைக்கு உள்ளாக்க உதவினார் என்று குற்றம் சாட்டப்பட்ட பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.
கடந்த 29 ஆம் திகதி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 15 வயது சிறுமியை கடத்திச் சென்று குடும்பமாக வாழ்ந்தார் என்று தெரிவித்து ஒரு இளைஞன் மீது சிறுமியின் பெற்றோர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் இளைஞனின் சிறிய தாயார் வீட்டில் இருந்த இளைஞனையும் சிறுமியையும் கைது செய்தனர்.
சிறுமியை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்த பொலிஸார் இளைஞனை நேற்றுமுன்தினம் சாவகச் சேரி நீதிமன்ற நீதிவானிடம் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் இளைஞனை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். 18 வயதுக்கு குறைந்த பெண்ணைக் கடத்திச் செல்பவர்களுக்கு ஆலோசனை வழங்குபவர் விடுத்து அவர்கள் குற்றமிழைக்க ஊக்கமளிப்போர் தண்டிக்கப்படுவர் என்றும் நீதிவான் குறிப்பிட்டார்.
இந்த வழக்குத் தொடர்பாக 15 வயதுச் சிறுமியைக் கடத்தி வந்துள்ளார் எனத் தெரிந்தும் அவர்கள் தங்குவதற்கு தனது வீட்டைக் கொடுத்து விட்டு வேறு வீட்டில் தங்கியிருந்தார் என்ற குற்றச்சாட் டில் பெண் ஒருவரை கைது செய்த பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அவரை முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் பெண்ணை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-21,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆமைகளுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.11
இரண்டு ஆமைகளை விற்பனைக்காகக் கொண்டு சென்ற இருவர் கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என கிளிநொச்சி மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தர்சன தெரிவித்தார்.
இரணைமடுப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் சாந்தபுரம் பகுதிக்குச் சென்ற இருவரை மறித்துச் சோதனையிட்டபோது அவர்கள் இரண்டு ஆமைகளை விற்பனைக்காகக் கொண்டு சென்றமை தெரியவந்தது. ஆமைகள் கைப்பற்றப்பட்டன. இருவரும் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (த-6)

# மூதாட்டிக்குக் கத்தி காட்டி அச்சுறுத்தல்

## பூசகர் விளக்கமறியலில்

தென்மராட்சி, ஜன.11
தென்னந்தோட்டத்தில் மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுக் காத்திருந்த 62 வயது மூதாட்டியைக் கத்தியைக் காட்டி அச்சுறுத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்ட தோட்ட உரிமையாளரான பூசகரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிவான் நீதிமன்று.
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள தென்னந் தோட்டத்தில் தனது மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டு காத்திருந்த வேளை, அங்கு வந்த காணி உரிமையாளரான பூசகர் கத்தியைக் காட்டி மூதாட்டியை அச்சுறுத்தினார் எனச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் பூசகரைக் கைது செய்து நேற்று முன்தினம் மாலை நீதிமன்றில் முற் படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிவான் பூசகரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் (த-9)

# மன்னாரில் தீவிரமாக பரவுகிறது டெங்கு

## 10 நாள்களில் மட்டும் 63 பேருக்குத் தொற்று

மன்னார், ஜன.11
மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 10 தினங்களில் 63 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதோடு நாளுக்கு நாள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வி. ஆர்.சி.லெம்பேட் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 2016 ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 185 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த நிலையில் இவ்வருடம் ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை 25 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். 5 தினங்களில் 38 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.
மன்னார் உப்புக்குளம், மூர்வீதி, சாவற்காடு, பெரியகடை, தாழ்வுப்பாடு, பேசாலை உள்ளிட்ட கிராமங்களிலே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
டெங்கு நுளம்பின் தாக்கம் மற்றும் பரவல் காணப்பட்டுள்ள இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தற்போது முழுமையாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றனர். எனினும் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் குறைவாகக் காணப்படு கின்றது. தமது வீடு மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்துள்ளவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
தாழ்வுபாடு கிராமத்தில் டெங்கு நுளம்பின் பரவல் காணப்பட்ட நிலையில் மூடப்பட்ட பாடசாலை நேற்றுச் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மன்னாரில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சந்தர்ப்பங்கள் அடையாளம் காணப்பட்டுச் சில தினங்களாக மூடப்பட்டிருந்த தனியார் கல்வி நிலையங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது-என்றார். (த-21-56)

## கடந்த ஆண்டு இலங்கையில் 10,732 சிறுவர் துர்நடத்தைகள்

*2016ஆம் ஆண்டில் இலங்கையில் 10,732 சிறுவர் துர்நடத்தைகள் நடந்திருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
*இவற்றுள் பாலியல் துர்நடத்தைகள் தொடர்பில் 433 முறைப்பாடுகளும், இம்சைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பில் 2,317 முறைப்பாடுகளும், பாடசாலைக் கல்வி இடையூறு செய்யப்பட்டமை தொடர்பில் 1,463 முறைப்பாடுகளும் உள்ளடங்குவதாகவும், 2015ஆம் ஆண்டில் நடந்துள்ள 10,315 இம்சைகளைவிட 2016இல் 417 இம்சைகள் அதிகரித்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)*



# தண்ணிமுறிப்பு அ.த.க. மீண்டும் ஆரம்பமானது

முல்லைத்தீவு, ஜன.11
முல்லைத்தீவுக் கல்வி வலயத்திற்குட்பட்ட தண்ணிமுறிப்புப் பகுதியில் நீண்ட காலமாக இயங்காமல் கைவிடப்பட்டிருந்த தண்ணிமுறிப்பு அ.த.க. பாடசாலை கடந்த 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த பாடசாலையை முல்லைத்தீவுக் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். மேற்படி பாடசாலைக்கு அதிபர் உட்பட இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
பூதன்வயல் கிராமத்தில் விடுதலைப் புலிகளின் காலத்தில் ஒரு பாடசாலை நிரந்தரமாக இயங்கி வந்ததாகவும், மீள்குடியேற்றத்தின் பின்னர் குறித்த பாடசாலை இருந்த காணியைத் தனிநபர் ஒருவர் அடாத்தாகக் கைப்பற்றி ஆட்சிப்படுத்திவருவதால் இந்தக் கிராமத்தில் உள்ள 100ற்கும் மேற்பட்ட மாணவர்கள் நீண்ட தூரத்திலுள்ள பாடசாலைகளில் பலசிரமங்களுக்கு மத்தியில் தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.
இந்த விடயம் தொடர்பாகப் பிரதேச செயலர் உட்பட அனைத்து உயர்மட்ட அதிகாரிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டன. இருந்தபோதும் இதுவரை அந்த காணி தொடர்பான ஆக்கபூர்வமான முடிவுகள் இல்லாத காரணத்தால் பாடசாலை, தற்காலிகமாக குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பாடசாலையின் நிரந்தரக் கட்டடத்துக் நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும் காணிப் பிரச்சினையால் அந்த நிதி திரும்பக்கூடிய அபாயமும் காணப்படுகிறது.
பாடசாலை திறக்கப்பட்டுள்ளபோதும் அதற்கான தளபாடங்கள் வராமையால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரும் சிரமத்தை எதிர் கொள் கின்றனர் எனப் பெற்றோர்கள் தெரிவித்தனர். (தி)

# கால்கோள் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.11
கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய முதல்வர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா, சிறப்பு விருந்தினராக இலத்திரனியல் பொறியியலாளர் கணேஸ்வரன் சுதன் ஆகியோர் கலந்து கொள்வர். (த-422)

* * * * * *

யாழ்ப்பாணம், ஜன.11
அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று புதன்கிழமை காலை 9.30மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ் கல்வி வலய தகவல் தொழில் நுட்ப பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி சுகந்தன் லாவண்யா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-422)

# பொலிஸ் உத்தியோகத்தர் பணியிலிருந்து இடை நிறுத்தம்

## கராஜ் ஒன்றில் வேண்டுமென்றே வாளை வைத்து உரிமையாளரைக் கைது செய்த குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், ஜன.11
அச்சுவேலிப் பகுதியில் உள்ள கராஜ் ஒன்றில் வாள் மற்றும் கூரிய ஆயுதங்கள் வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் எனக் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.
யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்டப் பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அச்சுவேலிப் பகுதியில் உள்ள கராஜில் வேண்டுமென்றே வாள் ஒன்றை வைத்துவிட்டு அதன் உரிமையாளரைப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்தார். இந்தச் சம்பவத்துக்கு அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸாரே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.
குறித்த கராஜ் உரிமையாளர் ஓர் அரசியல் கட்சியின் அங்கத்தவர் என்ற வகையில் அங்கிருந்த கட்சி அங்கத்துவப் படிவங்களையும் பொலிஸார் எடுத்துச் சென்றனர். இது வழக்கைத் திசை திரும்பும் முயற்சியா?, இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? என மக்கள் சந்தேகம்கொள்வதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி கூட்டத்தில் கேள்வி எழுப்பினார்.
அச்சுவேலிப் பகுதியில் கராஜ் ஒன்றில் வாள் வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தற்போது பொலிஸ் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கான குற்றப் பத்திரம் நீதிமன்றில் பொலிஸ் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் வழக்குக்குச் சாட்சிகள் வேண்டும். குற்றச்சாட்டுகளை கூற முன்வருபவர்கள் சாட்சியமளிப்பதற்கு முன் வருவதில்லை. சாட்சிகள் இல்லாதமையினால் அதிக வழக்குகள் தள்ளுபடியாகின்றன. இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (த-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிம்மிடம் கொள்ளை; 17 பேர் கைது

பரிஸ், ஜன. 11
அமெரிக்காவின் பிரபல தொகுப்பாளினி கிம்மிடம் கோடிக்கணக்கான நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்தில் இதுவரை 17 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
பிரான்ஸ் தலைநகர் பரிஸில் தனக்குச் சொந்தமான வீட்டில் கிம் இருந்த போது கடந்த ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி துப்பாக்கி முனையில் அவரிடம் கொள்ளையிடப்பட்டது.
விசாரணைகளின் அடிப்படையில் கொள்ளையிடப்பட்ட நகைகளின் பெறுமதி இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 150 கோடி என்று சொல்லப்பட்டது.
நட்சத்திர தொகுப்பாளினி ஒருவரின் பாதுகாப்பு வளையங்களைத் தாண்டி இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றமை பல அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. பரிஸ் நகர பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வந்தனர். சந்தேகத்தின் அடிப்படையில் இதுவரை 17 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பரிஸ் நகர பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.
அவர்களில் ஒருவர் பரிஸ் நகரில் கிம் பயன்படுத்திய சொகுசுக் காரை செலுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)

## குருதிக்கொடை வியட்நாமில் கட்டாயம்


வியட்நாமில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் குருதிக் கொடை செய்தல் கட்டாயம் என்று சட்டமாக்கப்படவுள்ளது.
18 வயதிலிருந்து 60 வயதுக்கு உட்பட்ட ஆரோக்கியமான நபர்கள் மருத்துவ ஆலோசனையின் படி குருதிக் கொடையில் ஈடுபட வேண்டும் என்ற சட்டவரைவை அந்த நாட்டின் சுகாதார அமைச்சு அறிமுகப் படுத்தியது. நாடாளுமன்றில் ஆதரவு இருந்தால் இந்த வரைவு சட்டமாகும். பொதுமக்கள் பலர் ஆதரவு வழங்குகின்ற போதிலும் சிலர் எதிர்க் கருத்தை உடையவர்களாகவும் உள்ளனர்.



அவ்வாறு எதிர்க் கருத்தை உடையவர்கள் கட்டாய குருதிக் கொடை என்பது அடிப்படை மனித உரிமை மீறல் என்று சுட்டிக் காட்டுகின்றனர். (ம)


## கிளர்ச்சிக் குழுவுடன் எதையும் விவாதி


டமஸ்கஸ், ஜன. 11
சிரிய அரசுக்கும், அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையில் கஜகஸ்தானில் இந்த மாதம் சாமாதானப் பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளது என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் கிளர்ச்சிக் குழுவுடன் எதையும் விவாதிக்கத் தயார் என்று தெரிவித்தார் சிரிய ஜனாதிபதி அல் அசாத்.
சிரிய அரசுக்கும் அரசுக்கு எதிரான ஆயுத குழுவுக்கும் இடையில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நேரடி மோதல் வெடித்தது.
அலெப்போ உள்ளிட்ட முக்கிய நகர்கள் ஆயுதக் குழுவின் பிடியில் இருந்தன.



# ஐ.எஸ். அமைப்பினர் 48 பேர் கொலை; ஒரே நாளில் துருக்கியின் தாக்குதலில்

பெய்ரூட், ஜன. 11
சிரியாவில் முகாமிட்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக நேற்றுமுன்தினம் துருக்கி மேற்கொண்ட தாக்குதல்களில் 48 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். ஐ.எஸ். அமைப்புக்குச் சொந்தமான ஏராளமான தளபாடங்களும் சேதமாக்கப்பட்டன என்று துருக்கியின் சார்பில் அறிவிக்கப்பட்டது.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பை தமது பொது எதிரியாகக் கொண்டு உலக நாடுகள் பலவும் போரிட்டு வருகின்றன. சிரியாவில் முகாமிட்டிருக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பை இல்லாது செய்ய ரஷ்யாவும், துருக்கியும் கடும் முனைப்புக் காட்டுகின்றன. இந்த நிலையில் துருக்கியால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பரவலான வான் தாக்குதலில் 48 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்குச் சொந்தமான ஆயுத தளபாடங்களும் நிர்மூலமாக்கப்பட்டன. இதனால் அந்த அமைப்பு பெரும் பின்னடைவைச் சந்தித்தது என்று துருக்கியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு துருக்கி ஜனாதிபதி எர்டகனை தமது எதிரியாக அறிவித்துள்ளது. அவர் இஸ்லாத்துக்கு எதிராகச் செயற்படுகிறார் என்றும் அண்மையில் தெரிவித்திருந்தது. இதைவிட நடப்பு வருடத்தில் சில தாக்குதல்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் துருக்கியில் மேற்கொள்ளப்பட்டன. புத்தாண்டு பிறந்த சிலமணி நேரத்தில் துருக்கியில் உள்ள கேளிக்கை விடுதியொன்றுக்குள் புகுந்த ஆயுததாரி சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 39 பேர் உயிரிழந்திருந்தனர். 69 பேர் காயமடைந் தனர். மொத்தத்தில் நடப்பு வருடத்தில் தனது முதல் தாக்குதலை துருக்கியிலேயே ஐ.எஸ். ஐ.எஸ். மேற்கொண்டிருந்தது. இதனால் அந்த அமைப்புக்கு எதிராகத் தாக்குதலை துருக்கி இரட்டிப்பாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)






சீனாவின் பல பகுதிகளில் அண்மைக் காலமாக காற்று மாசுபாடு கடுமையாக அதிகரித்துள்ளது. இதனால் அந்த நாட்டு அரசால் இரண்டு முறை உயர் எச்சரிக்கை விடப்பட்டது. பீஜிங் உள்ளிட்ட 72 நகரங்களில் எச்சரிக்கை விடப்பட்டு திரும்பப் பெறாமல் நடைமுறையில் உள்ளது. முழுவதும் வெள்ளை நிறத்தில் இயக்கப்பட்டு வந்த அதிவேக ரயில்கள் காற்று மாசுபாட்டின் காரணமாக தற்போது பழுப்பு நிறத்தில் மாறியுள்ளன. (ம)

## மத்திய அரசைக் கண்டித்து இன்று முட

சென்னை, ஜன. 11
தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை இந்திய மத்திய அரசு கட்டாய விடுமுறைப் பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் இந்த முடிவைக் கண்டித்து தமிழ்நாட்டின் முக்கிய கட்சிகளில் ஒன்றான தி.மு. கழகத்தின் சார்பில் இன்று மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான ஸ்ராலின் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
பொங்கல் திருநாளையொட்டி நடைபெறும் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கு அனுமதி கிடைக்காமல் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மத்திய அரசு பொங்கல் திருநாளை கட்டாய விடுமுறைப் பட்டியலிலிருந்து நீக்கி இருப்பது தமிழர்களுக்கு துரோகம் இழைக்கும் செயலாகும். மத்திய அரசு தொடர்ந்து தமிழர்களின் உணர்வுகளை புண்படுத்தி வருகிறது. இது இந்தியாவின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்கான முயற்சியாக தெரியவில்லை என்பதை நினைக்கும் போது மிகவும் கவலை அளிக்கிறது. காஷ்மீர் முதல் தமிழகம் வரையிலான இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தவரின் தாய்மொழிகள் மீது இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்கும் நடவடிக்கையாலும், புதிய கல்வித் திட்டம் என்ற பெயரில் மதவாதக் கொள்கைகளைப் புகுத்தும் முயற்சியாலும் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையை கேள்விக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க்கத் தயார்; அறிவித்தார் சிரிய ஜனாதிபதி அல் அசாத்



ரஷ்யாவின் உதவியுடன் சில வாரங்களுக்கு முன்னர் நகரை மீட்டது சிரியா. இந்த மீட்பு நடவடிக்கையில் போர் குற்றம் இடம்பெற்றது என சிரியா மற்றும் ரஷ்யா மீது பன்னாட்டு அழுத்தங்கள் உள்ளன. இவ்வாறு நீண்ட இழுபறிகளின் மத்தியில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இரு தரப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டு தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன. கஜகஸ்தானில் இந்த மாதம் நிரந்தரத் தீர்வு தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படும் நிலையில் ஆயுதக் குழுக்களுடன் எந்த விடயம் தொடர்பிலும் விவாதிக்கத் தயார் என்று அல் அசாத் அறிவித்தார். கஜகஸ்தானில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் எதிர்தரப்பினர் சார்பில் எவர் பிரதிநிதியாக வருகிறார்கள் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

அதேபோல் பேச்சுவார்த்தையை எப்போது நடத்துவது என்பதும் முடிவு செய்யப்படவில்லை. திகதி முடிவானவுடன் அங்கு செல்வதற்கு அரச தரப்பு தயாராக உள்ளது. எந்த விடயம் தொடர்பிலும் விவாதிக்கத் தயாராக உள்ளோம் என்று அல் அசாத் மேலும் தெரிவித்தார். (ம)



# மியன்மாரை விட்டுச் செல்கின்றனர் ரொகின்கயா இன இஸ்லாமியர்கள்

மியன்மார் அரசு சிறுபான்மை இனத்தவர்களான ரொகின்கயா இன இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கையாள்கிறது என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் ரொகின்கயா இன இஸ்லாமியர்கள் பலர் அயல் நாடான பங்களாதேஷ் நோக்கிப் படையெடுத்து வருகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

பங்களாதேஷ்- மியன்மார் ஆகிய நாடுகளின் எல்லைக் கிராமங்களில் ரொகின்கயாவும் ஒன்று. அங்கு வாழும் இஸ்லாமியர்கள் ரொகின்கய இஸ்லாமியர்கள் என்று அறியப்படுகின்றனர். மியன்மாரின் சிறுப்பான்மையினராக அவர்கள் உள்ளனர். இவர்களுக்கு எதிராக மியன்மார் இராணுவம் அவ்வப்பொழுது பல வன்முறைச் சம்பவங்களை நடத்துகிறது, பாலியல் கொடுமைகளைச் செய்கிறது என்று பரவலான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை விசாரித்தும் வருகிறது.

தமக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கொடுமைகள் காரணமாக ரொகின்கயா இஸ்லாமியர்கள் பங்களாதேஷுக்குப் படையெடுத்துச் செல்கின்றனர். கடந்த வாரம் மட்டும் 22 ஆயிரம் பேர் பங்களாதேஷின் கிழக்குப் பகுதிக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களில் அடைக்கலம் புகுந்தோரின் எண்ணிக்கை 65 ஆயிரம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவரங்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றன. (ம)

# ஓ.பி.எஸ். உரையாற்றுகையில் பாதியில் பறந்தார் சின்னம்மா



சென்னை, ஜன. 11

சென்னையின் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உரையாற்றும் போது அவர் சார்ந்த அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளரான சசிகலா பாதியில் வெளியேறிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

கட்சியின் தலைமையகத்தில் இருந்த முக்கிய வேலைகள் காரணமாகவே சசிகலா வெளியேறினார் என்று பின்னர் காரணம் சொல்லப்பட்டது. எனினும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தென்மாநில முதல்வர்கள், முக்கிய பிரமுகர்கள் என நிறைந்திருந்த அவையில் சசிகலாவின் வெளியேற்றம் சில சங்கடங்களை ஏற்படுத்தியிருந்தது என்று இந்திய ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன. (ம)



# கின்னஸ் சாதனை படைத்த நாய்

ஜப்பானில் நாய் ஒன்று தனது உரிமையாளருடன் சேர்ந்து 1 நிமிடத்தில் 58 முறை ஸ்கிப்பிங் செய்து கின்னஸ் சாதனை படைத்தது.


குறித்த நாய் தனது உரிமையாளருடன் சேர்ந்து 1 நிமிடத்தில் 51 முறை ஸ்கிப்பிங் செய்ததே இதுவரை சாதனையாக இருந்தது. தற்போது தனது சாதனையைத் தானே முறியடித்தது. குறித்த நாயின் பெயர் புரின். "புரின் அடுத்து செய்யப் போகும் சாதனையைக் காண நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம்" என கின்னஸ் நிறுவனம் தெரிவித்தது. (ம)

# ...ங்கும் தமிழ்நாடு

குறியாக்கும் விதத்தில் மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அதன் உச்ச கட்ட வெளிப்பாடாக, தமிழர் திருநாளான பொங்கல் விழாவுக்கான கட்டாய விடுமுறையை இல்லாமல் செய்திருக்கிறது.

எனவே மத்திய அரசு உடனடியாக இந்த அறிவிப்பினைத் திரும்பப் பெறவேண்டும். கட்டாய விடுமுறைப் பட்டியலில் பொங்கல் திருநாள் இடம்பெற வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டு கொள்கிறேன் என்று ஸ்ராலின் கண்டன அறிக்கையும் வெளியிட்டார். (ம)

# வெள்ளை மாளிகையின் ஆலோசகராக மருமகனை நியமனம் செய்தார் ட்ரம்ப்



அமெரிக்காவின் ஜனாதிபதியாக எதிர்வரும் 20 ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ள ட்ரம்ப், வெள்ளை மாளிகையின் ஆலோசகராக தனது மருமகனை நியமித்தார்.

தனது தலைமையிலான ஆட்சியில் இடம்பெறவுள்ள அமைச்சர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகளை ட்ரம்ப் நியமித்து வருகிறார். அமெரிக்காவின் தூதர்களாக ஒபாமாவால் நியமிக்கப்பட்ட அனைவரையும் பதவி விலகவும் உத்தரவிட்டுள்ளார். இந்த நிலையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையின் தலைமை ஆலோசகராக தனது மகள் இவன்காவின் கணவரான ஜெராட் குஸ்னரை நியமித்தார்.

இந்த நியமனத்தை மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் ஏற்றுக்கொள்கிறேன் என அறிவித்துள்ளார் ஜேராட் குஸ்ஷ்னர். இந்தவேலைக்காக அரச பணத்தில் இருந்து சம்பளம் எதும் பெறப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 3A (மாவட்ட நிலை 79) திறமைப் பெறுபேறுகளைப் பெற்று எமக்குப் பெருமை சேர்த்த சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனாகிய எமது மகன்

விமலதாசன் (குமார்) பிரவீன்

அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ இறையருள் வேண்டி மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரது உயர்வுக்கு உறுதுணையாகிய அதிபர், ஆசிரியர்கள், வழிகாட்டிகள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- அப்பா - குமார், அம்மா - றம்சா குடும்பத்தினர், மாமன்மார் - சதீஸ் குடும்பத்தினர் (சுவிஸ்), பிரதீபன் குடும்பத்தினர் (லண்டன்), டிலான் குடும்பத்தினர் (ஆஸ்திரேலியா) சித்தி சின்சியா குடும்பத்தினர் (ஹொலண்ட்)

இல.09, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மாகாண சபை கவனிக்குமா?

**போ**திய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித்தருமாறு கோரி வவுனியா மாவட்டத்தில் பெற்றோர்களும் மாணவர்களும் கவனவீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். பாலமோட்டை, கோவில் குஞ் சுக் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, செட்டிகுளம், அருவித் தோட்டம் சிவானந்தா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளின் பெற்றோர்களும் மாணவர்களுமே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டங்களில் ஈடுபட்ட மாணவர்களும் பெற்றோர்களும் தமது பாடசாலைகளுக்காக நவீன வசதிகளையோ, மேலதிக வசதிகளையோ கோரவில்லை. அவர்கள் மிக மிக அடிப்படையான வசதிகளைக் கேட்டுத்தான் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். கோவில் குஞ்சுக் குளம் பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமித்துத் தருமாறு கோருகிறார்கள். சிவானந்தா வித்தியாசாலையில் நிலவும் இடப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, தளபாடப் பற்றாக் குறையையும் தீர்த்து வைக்கக் கோருகிறார்கள்.

தமிழர்கள் கல்வியில் அக்கறை கொண்டவர்கள், வடக்கு மாகாணம் எல்லாவற்றையும்விட கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இடம் என்றெல்லாம் நாம் பெருமை பீற்றிக் கொண்டாலும், எமது மாணவர்களின் கல்வியில் எவ்வளவு அக்கறை கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதற்கான மிகப் பிந்திய உதாரணங் கள் இந்தப் போராட்டங்கள்.

வடக்கு மாகாண சபை திறமையற்றுச் செயற்படுகிறது என்று கொழும்பு அரசுதான் புரளியைக் கிளப்புகிறது என்று கனடா நாட்டில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திருவாய் மலர்ந்தருளிக் கொண்டிருக்கும்போதே, இரு பாடசாலைகளிலும் மாணவர்களும் பெற்றோரும் போராட்டம் நடத்தினார்கள்.

வடக்கு மாகாண சபை உருவாகி 3 வருடங்களாகிவிட்டபோதும் இதுபோன்ற சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தியைக்கூட அதனால் நிவர்த்தி செய்ய முடிந்திருக்கவில்லை என்பது எவ்வளவு பெரிய வேதனை! ஆசிரியர் இடமாற்றங்களில் கவனம் எடுத்து அதனைச் சீராக்குவதற்கு முடியாமல்தான், வடக்கு மாகாண சபை ஒவ்வொரு ஆண்டும் பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் சில பாடசாலைகளில் அளவுக்கு மீறிய ஆசிரியர் வளம் இருக்கின்றபோதிலும், வன்னியின் பல பாடசாலைகள் ஆசிரியர் வளப் பற்றாக்குறையால் திணறுகின்றன.

அதேபோன்று நகரப்புறத்துப் பாடசாலைகளில் வளங்கள் மேலும் மேலும் பெருக்கப்பட்டுக் கொண்டுபோக, சிறிய பாடசாலைகள் வளங்களில் பின்தங்கி ஒரு கட்டத்தில் மூடப்படும் நிலையை எட்டுகின்றன. அண்மைப் பாடசாலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுக் கிராமப் புறப் பாடசாலைகளின் வளங்களை விருத்தி செய்ய கொழும்பு அரசு நடவடிக்கை எடுத்து வந்தாலும், அதன் மூலம் அனைத்துப் பாடசாலைகளையும் விருத்தி செய்வதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது.

இந்த விடயத்தில் கவனம் செலுத்தி – அக்கறை காட்டி – செயற்பட வேண்டிய மாகாண சபையும் அதில் தேவைக்கேற்ற அக்கறையைக் காட்டுவதாகத் தெரியவில்லை. மாகாணக் கல்வி அமைச்சராக இருப்பவரான த.குருகுலராஜா, வன்னியின் கல்வி நிலைமையை நன்கு அறிந்தவர். ஆசிரியராகவும் கல்வி அதிகாரியாகவும் வன்னியில் சேவையாற்றியவர். அத்தகைய ஒருவர் அமைச்சராக இருக்கும் நிலையிலும், வன்னிப் பாடசாலைகள் தமக்கான அடிப்படை வசதியையும், ஆசிரியர் வளத்தையும் கேட்டுப் போராடும் நிலைமைதான் இருக்கின்றது என்பது மாகாண சபையின் நிர்வாகத் திறமையை நிச்சயம் கேள்விக்குரியதாக்குகின்றது.

நிர்வாகப் பின்னடைவுகள் – தோல்விகள் – வினைத்திறன் இன்மைகள் – எல்லாவற்றுக்கும் கொழும்பு அரசையே சாட்டுக் கூறிக் கொண்டிருப்பதில் பயன் ஏதுமில்லை. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கிய சாட்டுப்போன்று, "கொழும்பு எங்களை ஒன்றும் செய்ய விடுவதாக இல்லை", "எங்கள் அதிகாரங்களில் கொழும்பு தலையீடு செய்கிறது" என்று ஒப்பாரி வைப்பதால் முன்னேற்றங்கள் ஏற்படப்போவதில்லை. முறையான திட்டமிடலும், தூர நோக்கும் இருந்திருந்தால் பதவியேற்ற மூன்று வருட காலத்தில் இதுபோன்ற பிரச்சினைகளை நிச்சயம் தீர்த்திருக்கலாம்.

அப்படிப்பட்ட எந்தத் திட்டமும், தூர நோக்கும் இல்லாததால் தற்போது இந்த அவலத்தை வடக்கு மாகாணம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இனியாவது இது விடயத்தில் மாகாண சபை அக்கறை காட்டினால் நல்லது.



# ராஜபக்சவுடன் இணைந்து செயற்படுவது இனிமேலும் சாத்தியப்படமாட்டாது

## சுதந்திரக்கட்சி அமைச்சர்களிடம் மைத்திரிபால திட்டவட்டம்

### ஐ.தே.க – சுதந்திரக் கட்சி கூட்டு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் தொடரும்

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

**சி**றிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே. கட்சிகளுக்கிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளஇணைப்பை, தொடர்ந்து பேணப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் உறுதிப்படுத்தினார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களின் சிறப்புக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி – முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது ஆதரவாளர்களுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியைத் தாம் முன்னகர்த்திப் போவதில்லையென்றும் உறுதியளித்தார்.

ஜனாதிபதி சிறிசேன தமது 2017ஆம் ஆண்டுக்கான திட்டங்களை வெளிப்படுத்துவதற்காக, இந்த அமைச்சர்கள், அவர்களின் வாராந்தக் கூட்டத்தின் பின்னர் ஒரு சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர். சிறிசேனவின் இரண்டாவது ஆண்டு பதவிக் காலம் எட்டாம் திகதியான ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்து மூன்றாவது ஆண்டு திங்கள் முதல் ஆரம்பமாகியுள்ளது.

இருதரப்புக்களுக்குமிடையில் முரண்பாடுகள் தொடரும் நிலையில், ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளிப்பட்டுள்ளது. அரசமைப்பு மாற்றம் மற்றும் சீனாவுடன் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக செய்து கொள்ளப்படவிருக்கும் ஒப்பந்தம் போன்றவையால் புதிய பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் தொடர்பாக அந்தக் கட்சி அமைச்சர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட தீர்மானங்களையடுத்து, அரசமைப்புத் தொடர்பான முன்வரைவு மீது நடைபெறவிருந்த விவாதம் நாடாளுமன்றத்தில் பின் திகதி குறிக்கப்படாமல் பின்போடப்பட்டுள்ளது. அதேசமயம், சீனாவுடனான சலுகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டாம் என்று அமைச்சர் மலிக்சமர விக்கிரமவுக்கு ஜனாதிபதி சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார். இந்த ஒப்பந்தமானது ஜனவரி 7ஆம் திகதி சீன நிறுவனமான மேர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங் நிறுவனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் கையெழுத்திடப்படவிருந்தது. இதற்கிடையில் குருநாகலையில் புதன்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த கார்கள் மீள் பொருத்தும் ஆலைத் திறப்பு நிகழ்விலும், சனிக்கிழமை இடம்பெறவிருந்த சீனாவுடனான அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிகழ்விலும் முழு அளவில் ஐ.தே.கவினர் கலந்து கொள்ளவேண்டும் என்று அந்தக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பிரதான கொள்கை வகுக்கும் அமைப்பான செயல் குழுக் கூட்டத்தில் அறிவிப்பு விடுத்திருந்தார்.

### துறைமுக அமைச்சர் கடும் எதிர்ப்பு

கார்கள் மீள்பொருத்தும் ஆலையானது ஐ.தே.கவினர் கூறிக் கொண்டதுபோல், ஜேர்மன் நிறுவனமான வாக்ஸ்வேகன் இல்லையென்பது இப்போது புலனாகியிருக்கிறது. அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தத்தின் பிரதான மூலகர்த்தா, அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆவார். இந்த ஒப்பந்தத்துக்கு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். துறைமுகங்கள் தொடர்பான அமைச்சராக இருக்கும் அவருக்குக் கீழேயே இந்த விடயமும் வருகின்றது. உத்தேசத் திட்டத்தில் பல சட்டப் பிரச்சினைகள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். எனவேதான் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துள்ளது. சட்டரீதியாக இந்த விடயம் துறைமுக அதிகாரசபையின் கீழ் வருகின்றது. அதனால் மூன்றாம் தரப்பொன்று இதில் தலையிடவும் முடியாது. அதன் சார்பில் எதிலும் கையயழுத்திடவும் முடியாது என்பதாக ரணதுங்க சுட்டிக் காட்டியுள்ளார். இந்த விடயத்தில் தாம் ஓரங்கட்டப்பட்டுவிட்டதாக அமைச்சர் ஜனாதிபதியிடமும் முறையிட்டுள்ளார்.

இதில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அனைவரோடும் கலந்துரையாடப்பட வேண்டும். திட்டம்வெளிப்படையாகவும் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்தத்திட்டத் துக்கு செல்வாக்குள்ள பௌத்த தரப்புக் களிடமிருந்தும் எதிர்ப்புகள் வந்துள்ளன.

### ராஜபக்சவுடன் இரகசியப் பேச்சுக் கிடையாது

கடந்த பலமாதங்களாக முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுடன் இரகசியப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தெரிவித்து வந்துள்ள கருத்துக்களை, ஜனாதிபதி சிறிசேனவின் திட்டவட்டமான அறிவித்தல் ஒருமுடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. சிலர் இரு தரப்புக்குமிடையில் ஒற்றுமை ஏற்படுவது அவசியம் என்றும் கூட பகிரங்கமாக கூறிவந்துள்ளார்கள். அவர்கள் கூறாமல் விட்டது என்னவென்றால், மகிந்த ராஜ பக்சவுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எதிராக தற்போது நடைபெற்றுவரும் புலன் விசாரணைகள் காரணமாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதாகும். அவ்வாறு செய்யும் போது ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வுபெறவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நாசம் செய்து விட்டார்கள் என்று சிறிசேன குற்றஞ்சாட்டியுள்ளார். அவைகளை நாம் வெளிப்படுத்தவேண்டும் என்று சுதந்திரக்கட்சி அமைச்சர்களிடம் கூறிய அவர், இப்பொழுது அவைபற்றி எவரும் பேசுவதில்லை என்று நினைவுபடுத்தியதுடன், ராஜபக்சவினரின் தவறான செயற்பாடுகள் குறித்து பகிரங்கமாக அமைச்சர்கள் வெளிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐ.தே.கவின் செயற்குழுவில் பேசிய கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அடுத்துவரும் மூன்றுவருடங்களில் நிறைவேற்றி முடிப்பதற்கு கட்சி முயற்சி செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினார். குற்றங்கள் கண்டு கொண்டிருக்காமல் தேசிய அரசில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பிரச்சினைகள் தலை தூக்கி வந்தாலும், ஐ.தே.க. தொடர்ந்து கூட்டணியில் இருந்துவரும் என்பதை இது காட்டுகிறது.

கடந்த டிசெம்பர் 30 ஆம் திகதி, 36 ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி சிறிசேனவைச் சந்தித்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஜனாதிபதியிடம் முறையிடுகையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் கடுமையான குற்றச்சாட்டுக்களில் இறங்கியிருப்பது நிறுத்தப்பட வேண்டும் அல்லது ஐ.தே.க. அரசமைக்க அனுமதிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். அந்தச்சமயம் தனியாக அரசமைக்க ஐ.தே.கவுக்கு 113 உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்று ஜனாதிபதி அந்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் திரும்பிக் கேட்டார்.

> ஜனாதிபதி சிறிசேன கவலையடைந்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச இந்த அரசை இந்த ஆண்டில் கவிழ்த்துவிடப் போவதாக அறிவித்திருக்கிறார்.

### முழுஅரசும் தோல்வி - ராஜபக்ச

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, சிறிசேனவின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்துள்ளார். முழு அரசும் தோல்வியாக மாறியுள்ளது. பொருளாதார அபிவிருத்தியில்லை, நிதிநிலைமை மிக மோசமாக இருக்கின்றது. இவ்வாறு தோல்விகள் மலையாகக் குவிந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்குள்ள ஒரே ஒரு வழி ராஜபக்சாக்களை பலிகடாக்களாக ஆக்குவதே - என்றார். தாம் ஜனாதிபதியாக இருந்தபோது சீனாவுக்கு தொழிற்பேட்டையொன்று அமைப்பதற்கு 750 ஏக்கர் நிலம்தான் வழங்கப்பட்டதாகக் கூறியுள்ள அவர், சீனா எமக்கு மிகுந்த உதவிகளை வழங்கியிருந்தது. ஆனால் நாங்கள் எங்கள் நலன்களையும் யோசிக்க வேண்டியிருந்தது - என்றார். இந்த அரசு, சீனாவுக்கு 15,000 ஏக்கர் நிலத்தைக் கொடுக்க ஏன் விரும்புகிறது என்பது தெரியவில்லை. அதற்கான நிபந்தனைகள் என்ன என்பதும் மக்களுக்குத் தெரியாது.

சீனாவுக்கு கொடுக்கப்படவிருக்கும் நிலத்தில் 95 வீதம் அரசுக்குரியவை. மிகுதி தான் தனிப்பட்ட தரப்புக்களின் பயன்படுத்தலுக்குள்ளாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் செயற்குழுவில் கூறியிருந்தார். ராஜபக்சவின் கண்டனங்களால் ஜனாதிபதி சிறிசேன கவலையடைந்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ச இந்த அரசை இந்த ஆண்டில் கவிழ்த்துவிடப்போவதாக அறிவித்திருக்கிறார். ராஜபக்ச மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை நாசமாக்க முயற்சிக்கிறார் என்று சிறிசேன கூறுகிறார். தமது காலத்தில் அவர் எதேச்சாதிகாரியாக செயற்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டினார். கட்சியை ராஜபக்சவால் வழிநடத்த முடியாது என்பது மக்கள் மத்தியில் உறுதியாக வற்புறுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தொடர்பாகவும் ஜனாதிபதி கண்டனக் கருத்து வெளியிட்டார். கோத்தபாயவை சில ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல்கள் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜனாதிபதி கூறியபோது, ஓர் அமைச்சர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கோத்தபாய ராஜபக்ச அமெரிக்காவில் தான் வசித்து வந்தார். மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியானதும் திரும்பி வந்தார். ஆனால் நீங்கள் அரசியல் ஏணியின் அடிமட்டத்திலிருந்து ஏறிவந்துள்ளீர்கள் என்று விரலால் ஜனாதிபதியைச் சுட்டிக்காட்டிக் கூறினார்.

### சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைத் தீர்மானங்கள்

அமைச்சர் சிறிபால டி சில்வா அரசமைப்பு மாற்றங்கள் தொடர்பான விடயங்களை விளக்கப்படுத்தினார். அதன் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பான சில கொள்கைத் தீர்மானங்களை அவர்கள் நிறைவேற்றினார்கள். அவைகளில் சில முக்கியமான தீர்மானங்கள் வருமாறு.

01.இலங்கையின் ஒற்றையாட்சி முறை பாதுகாக்கப்பட வேண்டும். சரத்துகளில் மாற்றம் செய்யப்படக்கூடாது.

02.பௌத்தம் தொடர்பான அரசமைப்பு சரத்துக்களில் மாற்றம் எதுவும் செய்யப்படலாகாது.

03.வடக்குக், கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படலாகாது.

04.அரசமைப்பை ஏற்றுக் கொள்வது தொடர்பாக பொது மக்கள் கருத்துக்கணிப்பு எதுவும் நடத்தப்படலாகாது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்படுவதை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரிக்கிறது.

05.அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் போது 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் முழுமையாகச் செயற்படுத்தப்பட வேண்டும்

06.தேர்தல் சீர்திருத்தங்கள்

### நிறைவேற்று அதிகாரம் தொடர வேண்டும்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்தசில்வா ஆச்சரியமிக்க தீர்மானம் ஒன்றை முன்வைத்தார். ஜனாதிபதி விரும்பாவிட்டாலும், தாம் இந்த முன்மொழிவை முன்வைப்பதாகக் கூறிய அவர், கட்சியின் மத்திய குழுவிலும் இதை விரிவான விவாதத்துக்கு முன்வைக்கப் போவதாகக் கூறினார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படலாகாது. 2020ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலிலும், இப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடவேண்டும் என்பதே அவருடைய முன்மொழிவு. இது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், 2015 ஆம் ஆண்டு தேர்தலின்போது செய்யப்பட்ட பரப்புரைகளுக்கு நேர்மாறானது இது. பல்வேறு கட்சிகளும் சிவில் அமைப் புகளும் வண. மாதுளுவாவே சோபித தேரரின் தலைமையில் தேர்தலின் போது செயற்படுவதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதே முக்கிய விடயமாக இருந்தது.



## வாசகர் திருமுகம்

### எதிலும் முன்னெச்சரிக்கை அவசியம்

அண்மையில் நண்பரொருவரது துவிச்சக்கரவண்டியை இரவல்பெற்று யாழ் நகருக்குச் சென்ற நான், நகர மத்தியில் ஒதுக்கிடமொன்றில் அதனை நிறுத்திப் பூட்டிவிட்டுச் சென்று, பதினைந்து இருபது நிமிடங்களுக்குள் திரும்பி வந்து பார்த்தபோது அது திருட்டுப் போயிருந் தது. துவிச்சக்கர வண்டியின் இலக்கம் தெரியாததால் திருட்டுக்குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய இயலாது போய்விட்டது. துவிச்சக்கர வண்டியின் பெறுமதியை நண்பருக்கு இழப்பீடாக வழங்கி விடயத்தை அத்தோடு கைகழுவி விட்டுவிட்டேன். யாழ்.நகரில் இத்தகைய திருட்டில் ஈடுபட்ட நபரொருவரைக் கைது செய்த பொலிஸார் அவரால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 30 துவிச்சக்கர வண்டிகளைக் கைப்பற்றியுள்ளதாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. குறித்த திருட்டுத் துவிச்சக்கர வண்டிகளில் என்னிடமிருந்து திருடப்பட்ட துவிச்சக்கரவண்டியும் ஒன்றாயிருக்கக் கூடுமோ யாரறிவார். அப்படி இருந்தாலும் கூட, அது என்னிடமிருந்து திருடப்பட்டது தானென நிரூபிக்க என்னிடம் உரிய ஆவணங்கள் எதுவும் இல்லாதது வருத்தத்துக்கு உரியதொன்றே. துவிச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்துவோர் அதற்குரிய ஆவணங்களைத் தம் வசம் வைத்திருப்பது அவசியமென்பதற்கு எனக்கு நேர்ந்த அனுபவம் பொருத்தமான உதாரணமாக அமைகிறது.

*த.தம்பித்துரை, நாவற்குழி*

### முக்கியத்துவம் மிக்க பணியிது

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் தொடர்பாக மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவச் செல்வங்களை நேர்காணல் மேற்கொண்டு, அவர்கள் அத்தகு சாதனைகளுக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள் மற்றும் அவர்களது எதிர்கால அபிலாஷைகள் என்பவை பற்றிய கருத்துக்களைக் கேட்டறிந்து பத்திரிகைகள் பிரசுரித்தமை இனி வரப்பேகும் பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஒரு ஊக்க மருந்தாக அமைகிறது.

அந்த வகையில் உதயன் ஆற்றும் பணி பாராட்டுக்குரியது என்பதில் சந்தேகம் கிடையாது.

*ப.பிரபாகர், அரியாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பணியாளர்களுக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான கடன் உதவி வழங்கப்பட உள்ளதுடன் செலுத்த வேண்டிய வங்கி வட்டியின் 50 சதவீதத்தை அரசு வழங்குவதற்கான திட்டமிடலை மேற்கொண்டுள்ளது.





விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தேசிய பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களுடன் அதிகளவில் நாம் ஒன்றித்து பயிர்ச் செய்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

வணிகம்

# பசுமைச் சக்தியை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டம் ஆரம்பம்



இலங்கையில் பசுமைச் சக்தியை அபிவிருத்தி செய்வது தொடர்பிலான வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டத்தின் கீழாக நாட்டில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களையும் சூரிய சக்திப் பயன்பாட்டுக்கு மாற்றமுறச் செய்வதற்கான செயற்பாடுகளின் ஆரம்ப நிகழ்வுகள் நிதி அமைச்சர் ரவி கருநாணாயக்கவினால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி எதிர்வரும் 2 ஆண்டு காலப்பகுதியினுள் அனைத்து அரச நிறுவனங்களிலும் சூரிய சக்திப் பயன்பாடு உள்ளடங்கலான பசுமைச்சக்தி திட்டத்தின் வழியே சூழலுக்கு இயைபாக்கமான செயல்நிலைகளை மாற்றங்களின் ஊடாக உள்வாங்கிகொள்வதே அரசின் நோக்கமெென சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான மின்சக்தியை பயனுறுதியாக்கும் பாவனையாளர்கள் தங்களின் மின்சக்தி தேவையை பசுமை சக்தி திட்டத்துக்கு இயைபூக்கமாக மாற்றிக்கொள்வதற்கான சலுகைகளையும் வசதி வாய்ப்புக்களையும் அரசு வழங்கவுள்ளமை நோக்கத்தக்கது.

# காலநிலை மற்றும் வானிலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு தேசிய விவசாயத்துறையை முன்னேற்ற வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

காலநிலை மற்றும் வானிலையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்றதான வகையிலே தேசிய விவசாயத்துறையை நாம் முன்னெடுக்க வேண்டும். அதற்கான செயல்நிலைகள் குறித்து நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டிய தேவையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதான கருத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுவருகின்ற அரச கட்டடங்களை பசுமை இயல்புகளோடு கூடிய வகையில் அமைத்தல் மற்றும் அதற்கான வழிகாட்டல், ஆலோசனைகள் குறித்தான விதிமுறைகள் என்பவற்றை வெளியிட்டு வைத்து, கருத்துரைக்கும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் கலந்துகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ஜனாதிபதி,

"தற்போது நாம் கடும் வறட்சியை எதிர்கொண்டுள்ளோம். இந்த சந்தர்ப்பத்திலே வறுமை மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்கு என்ன நேரும் என்பது தொடர்பில் நான் கூறி - நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. காலநிலையில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களின் போது எமது நாடு விவசாய நாடு என்ற வகையிலே நாம் செயற்பட வேண்டிய சில முறைகள் காணப்படுகின்றன. எமது வரலாற்றை எடுத்து நோக்கும்போது விவசாயத்தை அடிப்படையாக கொண்ட தேசிய பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களுடன் அதிகளவில் நாம் ஒன்றித்து, பயிர்ச் செய்கையில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் நாம் வெற்றி காண வேண்டும் - என்றார்.

# தேசியக் கொள்கை உள்ளிட்ட விடயங்களைக் கையாள நடவடிக்கை

## கொள்கை அபிவிருத்தி அலுவலகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசு உத்தேசம்

தேசிய கொள்கை உள்ளிட்ட பல விடயங்களைக் கையாள்வதற்கும் கொள்கை அபிவிருத்தி அலுவலகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேசிய கொள்கைகள் சட்ட வரைவை வகுத்து, அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அதன்படி கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தின் ஊடாக தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அனுமதியளிக்கப்படும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் அபிவிருத்தி முகவர் நிறுவனத்துக்கு வழங்கப்படுமெனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முதலீடு, ஏற்றுமதி-இறக்குமதி, தொழில்வாய்ப்புக்கள், நிதி நடவடிக்கைகள், அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இந்த நிறுவனத்திற்கு அதிகாரம் வழங்கப்படும்.

அத்துடன் வலயமட்டத்தில் அபிவிருத்திக்காக தனியான சபை ஒன்றை உருவாக்குவதற்கும் இந்த சட்ட வரைவின் பிரகாரம் யோசனை முன்வைக்கப்பட்டது. தெற்கு, வடமேல், மத்திய வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்தி சபைகளும் இதன் மூலம் உருவாக்கப்படவுள்ளது.

இவைதவிர அமைச்சரினால் நியமிக்கப்படும் தலைவர் அல்லது உறுப்பினரைக் கொண்ட இந்த சபையானது அபிவிருத்தி பிரதிநிதியின் தீர்மானத்தின் அடிப்படையிலே வலயத்தின் முதலீடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து மூன்று வருடங்களுக்கான திட்டமிடலுடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வலயத்தை தீர்மானிக்கும் அதிகாரம் அபிவிருத்தி பிரதிநிதிகள் நிறுவனத்திடம் உள்ளதுடன், அங்கு முதலீடு செய்வதற்கு இறக்குமதியாளர்களின் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான முகவர் நிறுவனம் குறித்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நிறுவனம் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பில் முழு அதிகாரத்தைப் பெற்றிருக்குமெனவும் கூறப்பட்டுள்ளது.

நுட்பம்

# பார்வையற்றோர் பயன்படுத்தக்கூடிய உலக வரைபடம் உருவாக்கம்

## மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அறிமுகம் செய்துள்ளது

பார்வையற்றோர் பயன்படுத்தக் கூடியதான முதல் உலக வரைபடத்தை இந்தியாவின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அறிமுகம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழாக மேற்படி வரைபடத்தை கொல்கத்தாவின் தேசிய வரைபடங்களை உருவாக்கும் அமைப்பின் தலைவரான தப்தி பேனர்ஜி உருவாக்கியுள்ளார்.

கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் மொத்தம் 84 பக்கம் கொண்ட வரைபடம் ஏ 3 வகையான காகிதத் தாள் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வரைபடத்தை உருவாக்குவதற்கான திட்டமிடலும், அதற்கான பணிகளும் 1997ஆம் ஆண்டு ஆரம்பமாகியதாகவும், தற்போதே அந்தப் பணிகள் நிறைவுற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இவைதவிர முதற்கட்டமாக ஆங்கிலம், பெங்காலி, குஜராத் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் இந்த வரைபடம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் கொல்கத்தாவின் தேசிய வரைபடங்களை உருவாக்கும் அமைப்பின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரைபடமானது முதற்கட்டமாக 500 பிரதிகள் வரை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைபடத்தின் ஒரு பிரதியை தயாரிப்பதற்கான செலவின மதிப்பீடு என்பது 1000 ரூபாய் வரை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் உலக சுகாதார அமைப்பின் தகவலடிப்படையிலே உலகில் மொத்தமாக 28.5 கோடி பேர் பார்வையற்றவர்களாக உள்ளமையும் அவர்களில் 90 சதவீதமானோர் குறைந்த வருமான ஈட்டத்தை கொண்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# பண்பாட்டைப் பறைசாற்றிய இலக்கிய விழா




ஹரிகரன்

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் இலக்கிய விழா நிகழ்வுகள் அண்மையில் கரணவாய் மூத்த வி நாயகர் கோயில் திருமண மண்டபத்தில் தமிழர் தம் பண்பாட்டின் அடையாளங்களை பறைசாற்றும் வகையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. உலக மயமாதலின் தாக்கங்களின் காரணமாக அழிந்து வரும் தமிழர் தம் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையிலும் இலக்கியம் சார் திறன் ஆளுமைகளை நூல் வெளியீடுகள் மூலமாக வெளிப்படுத்தும் ஒரு முயற்சியாகவும் குறித்த இலக்கிய விழா இடம்பெற்றிருந்தது. கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் மற்றும் கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி யோகநாதன் உட்பட பிரமுகர்கள், இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு நிகழ்வை மெருகூட்டியிருந்தனர். இதன் போது கரவெட்டி மக்களின் கலை இலக்கிய ஆற்றலையும் அவர்கள் தம் பண்பாட்டின் அடையாளங்களையும் ஆளுமைகளையும் பிரதி பலிக்கும் வகையில் 'திருவுடையாள்' இலக்கிய நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. வடமராட்சியின் புகழ்பூத்த எழுத்தாளர்களின் பதிவுகள், எழுத்துக்கள் குறித்த நூலை அணி செய்தன. நூலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை வர்த்தகர் பிரபாகரன் பெற்றுக்கொண்டார். நூலுக்கான அறிமுக உரையை நூலின் இணையாசிரியரான கி.நடராஜா வழங்கியதுடன் வெளியீட்டுரையை பேராசிரியர் செ.யோகராசா வழங்கினர். மங்கல இசை வாத்தியங்கள் தெய்வீக ஒளியைப் பரப்ப, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் இனிதே ஆரம்பமாகின

அத்துடன் பிரதேசத்தின் புகழைப் பாரெங்கும் பரப்பி வரும் இலக்கியம் மற்றும் கலை சார்ந்த கலைஞர்களுக்கும் விருதுகளும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டன. அந்த வகையில் பிரதேசத்தின் புகழைப் பரப்பி கலைத்துறைக்கு தன்னை அர்ப்பணித்து செயலாற்றி வரும் கலைஞரான உபாலி பொன்னம்பலத்துக்கு 'சமூகச்சுடர்' விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு வகையில் கலை, கலாசார, பண்பாடு சார் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்து சேவையாற்றி வரும் கலைஞர்களுக்கு 'கலைஞான வாரிதி' விருது வழங்கப்பட்டது. அந்த வகையில் வைத்தியர் முருகானந்தன். வைத்தியர் வேலும்மயிலும் ,சின்னவன் காசியன் ,கோ கைலாசநாதன் மிருதங்க வித்துவான் ஜீவரட்ணம் ஆகியோருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன. இலக்கியம் கலை சார் நிகழ்வுகளூடாக தமிழர்கள் நீண்ட காலமாக உயிராகப் பேணி வரும் பண்பாடு சார் அடையாளங்களை அப்படியே பிரதி பலிக்கும் வகையில் கலை நிகழ்வுகளும் நிகழ்த்தப்பட்டன. அந்த வகையில் அழிந்துவரும் கூத்துக்கலைக்கு உயிரோட்டத்தை வழங்கி கூத்துக்கலை இன்னும் தமிழர் வாழ்வியலில் நிறைந்திருக்கின்றது என்ற உண்மையை அப்படியே பிரதிபலிக்கும் வகையில் கூத்து கதம்பம் என்னும் நிகழ்வு கூத்துக் கலைஞர் ரகு நாதனால் நிகழ்த்தப்பட்டது. குறித்த கூத்து பார்வையாளர் மத்தியில் அதிக பாராட்டையும் பெற்றது. தொடர்ந்து குறத்தி நடனம் கலாபூசணம் பேரின்பநாயகி சிவகுருவின் மாணவிகளால் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிருஷ்ண லீலை நாட்டிய நாடகம் பேரின்ப நாயகி சிவகுருவின் மாணவிகளால் வழங்கப்பட்டது இந்த இரு கலை நிகழ்வுகளும் பார்வையாளரை அதிகம் கவர்ந்திழுத்த கலை நிகழ்வுகளாக விளங்கின அடுத்து ந.மயூரரூபனின் 'சுருக்கு' நாடகம் பார்வையாளர்களுக்கு நகைச்சுவை உணர்வை ஏற்படுத்தின. தொடர்ந்து பார்வையாளர்களை இசை மழையில் நனைய வைக்கும் பொருட்டு வாத்திய இசைக்கச்சேரி பார்த்தீபன் குழுவினரால் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. குறித்த இலக்கிய நிகழ்வில் நடனம், நாட்டியம், இசை, சங்கமம், நாடகம், கூத்து மற்றும் இன்னோரன்ன கலை மரபுகளை அணி செய்யும் நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விடுமுறை காலத்தில்...

பளையூர் பா.பாலாஜினி

மாணவர்களாக இருக்கட்டும் அல்லது ஏதேனும் அரச சார்புடைய அரச சார்பற்ற தொழில் செய்பவர்களாக இருக்கட்டும். ஓரிரு நாள்களோ அல்லது குறிப்பிட்ட காலப்பகுதியோ விடுமுறைக் காலம் ஒன்று நிச்சயமாக வழங்கப்படும், அல்லது அவர்களாகவே அந்த விடுமுறையை எடுத்துக் கொள்வார்கள். விடுமுறை விடுவதற்கான காரணம் நாளாந்த தொழில் விடயங்களில் இருந்து ஓய்வைப் பெற்றுக் கொள்வதற்கே ஆகும். ஆனால் அவ்வாறு நடந்து கொள்கின்றோமோ என்றால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். விடுமுறை என்று சொல்லிக் கொண்டு அன்றைய நாள்களில் தான் அதிகளவான வேலைகளை இழுத்துப்போட்டுக் கொண்டு செய்கின்றோம். ஏனெனில் அன்று தொழில் விடயங்களில் இருந்து ஓய்வு கிடைப்பதால் இதுவரை முடிந்திருக்காத வேறு விடயங்களை எல்லாம் இன்றே செய்து முடித்துவிட வேண்டும் என்று எண்ணுகின்றோம். ஆனால் இந்தச் செயற்பாடு நிச்சயமாக உங்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்றால் உங்களால் அதை நம்பமுடிகின்றதா? ஆம் மனித வாழ்வின் சுகாதாரத்துக்கு நல்ல நித்திரையும் ஓய்வும் அவசியம். தினமும் இதைச் செய்ய முயற்சிக்க வேண்டும். அது முடியாவிடில் இப்படியான விடுமுறை நாள்களில் ஆவது நல்ல ஓய்வையும் நித்திரையையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**அழுத்தம் வேண்டாம்**

எனவே விடுமுறைக் காலத்தில் மேலும் மேலும் மன அழுத்தத்தை அதிகரித்துக் கொள்ளாது உங்களின் மனதை இலகுபடுத்தக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுங்கள். நல்ல இடங்களைப் பார்த்து இரசியுங்கள். நல்ல இசையைக் கேளுங்கள், புனிதமான இடங்களுக்குச் சென்று வாருங்கள். அது உங்களின் மனதை இலகுபடுத்தும். தொழில் நெருக்கடிகளில் இருந்து விடுபடமுடியும். எத்தனையோ பேருக்கு தங்களின் மழலைச் செல்வங்களைக் கவனிக்கக் கூட நேரமில்லாது வேலைப்பளு அதிகமாக இருக்கும். எனவே அவ்வாறானவர்கள் விடுமுறைக் காலத்தில் மழலைச் செல்வங்களுடன் அதிக நேரத்தை ஒதுக்குங்கள். அவர்களின் தேவைகளை அருகிலிருந்து நிறைவேற்றுங்கள். இன் றைய காலத்தில் மேல் நாட்டவரின் நடை உடை பாவனை போன்ற பழகக் கூடாத விடயங்களை எல்லாம் நாம் நன்றாகப் பழகி வைத்திருக்கின்றோம். ஆனால் அவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய எதனையும் கொள்ளவில்லையே என்பது தான் கவலைக்குரிய விடயம். விடுமுறைக் காலத்தில் அவர்கள் குடும்பத்தோடு சேர்ந்து சுற்றுலா சென்றுவிடுவார்கள். எதைப் பற்றி யும் அந்தக் காலத்தில் கவலைப்பட மாட்டார்கள். வேலை நெருக்கடிகள் யாவற்றையும் மறந்துவிட்டு சந்தோசத்தை அனுபவிப்பார்கள். ஆனால் நாம் அழுத்தங்களால் சூழப்பட்டு விடுமுறைக்காலத்திலும் வேலைகளுக்குள் முடங்கிப்போய் விடுகின்றோம். இந்த நல்ல பழக்கத்தை நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டால் தான் என்ன? இது ஒரு புறமிருக்க சிலர் விடுமுறைக் காலங்களில் அலுவலக வேலைகளை எல்லாம் வீட்டுக்குக் கூட எடுத்து வந்துவிடுகின்றார்கள். இதனால் அவர்களுக்கு விடுமுறை என்பதே இல்லாமல் போய்விடுகின்றது. விடுமுறைக்காலத்தில் வீண் வேலைகள் எதற்கு? எனவே இந்தக் காலத்தில் ஒருபோதும் அலுவலக வேலைகளை வீட்டுக்கு எடுத்துச் செல்லாதீர்கள்.

**மாணவர்களுக்கு புத்துணர்ச்சி**

இது ஒருபுறம் இருக்க மாணவர்களுக்கு பாடசாலைகளில் விடுமுறை விடுவது கல்வியில் ஏற்பட்ட சலிப்பையும் களைப்பையும் நீக்கி வேறு புத்துணர்ச்சி மிக்க செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத்தான். ஆனால் இந்தக் காலப்பகுதியில் தான் ஏராளமான பிள்ளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் வகுப்புக்களுக்குச் செல்வது அவதானிக்கப்பட்டு வருகின்றது. தனியார் வகுப்புகளுக்குச் செல்வது சில நேரங்களில் சரியானதாக எம் சமூகத்தால் உணரப்பட்டிருந்தாலும் இவ்வாறான விடுமுறைக்காலங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் வகுப்புக்களுக்குச் சென்று ஓய்வு நேரத்தை வேறு விடயத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது மாணவர்களின் சிந்தனைத்திறன் உளவிருத்தி என்பவற்றைப் பாதித்து விடுகின்றது. நல் வாழ்க்கைக்கு கல்வி மட்டும் போதுமாகி விடாது. வெளிக்களச் செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். அதற்கு நல்ல காலம் இந்த விடுமுறைக்காலம் தான். எனவே அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.



இன்றைய காலகட்டத்தில் நாம் எங்களை அழகுபடுத்திக் கொள்ள விரும்புகின்றோம். ஆனால் போதிய அளவு நேரம் கிடைப்பதில்லை என்பதால் செயற்கையான முறைகளைப் பயன்படுத்தி அழகுபடுத்திக் கொள்கின்றோம். ஆனால் விடுமுறைக் காலத்தில் போதியளவு நேரம் கிடைப்பதால் இயற்கையான முறையைப் பயன்படுத்திச் சுகாதாரமான முறையில் அழகுபடுத்த முடியுமல்லவா? மேலும் உங்களுக்கு விருப்பமான உணவுகளைக் கூட இந்த நேரத்தில் சாப்பிடக் கூடியதாக இருக்கும். மேலும் நீண்ட நாள் சந்தித்திராத உங்கள் நண்பர் நண்பிகளைச் சந்தித்து பழைய கால நினைவுகளை மீட்டிக் கொள்ளவும் இந்தக் காலத்தில் உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

எனவே விடுமுறைக் காலத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான் விடுமுறை முடிவடைந்ததும் உங்களால் புத்துணர்ச்சியுடன் மீண்டும் வேலையில் இணைந்து கொள்ளமுடியும். இவ்வாறான காலப்பகுதிகளில் உறவினர்கள், நண்பர்களுடன் கதைத்தல், விளையாடுதல், அழகுபடுத்திக் கொள்ளல் என்பவற்றால் உங்களின் ஆயுள் நீள்வதோடு மட்டுமல்லாமல் உறவுகளுக்கிடையில் நெருக்கம் ஏற்படுத்தப்பட்டு சமூகக் கட்டமைப்பானது வலுப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு செயற்பாட்டையும் செய்வதற்கு ஒவ்வொரு காலப்பகுதி உண்டு. அந்தந்தக் காலத்தில் அதற்குரியவற்றைச் செய்தல் வேண்டும். எனவே விடுமுறைக்காலத்தில் செய்ய வேண்டியவற்றைச் செய்யுங்கள்.

**பணம் இல்லையென்ற கவலை**

இப்படியெல்லாம் செய்ய எனக்கும் விருப்பம் தான். ஆனால் வெளியிடங்களுக்குச் சென்று வருவதற்குப் பணம் இல்லையே என்று எண்ணுகின்றீர்களா? பணம் இல்லை என்பதற்காக விடுமுறைக் காலத்தில் முடங்கிக் கிடக்காதீர்கள். நூல்நிலையம் செல்லுங்கள். நல்ல நூல்களை வாசியுங்கள். ஆல யங்களுக்குச் சென்று வாருங்கள். வீட் டில் இருந்தபடியே புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள். பார்த்தீர்களா? விடுமுறைக் காலத்தில் எவற்றை எல்லாம் செய்ய முடிகின்றது என்று. இவற்றை நடைமுறைப் படுத்திப் பாருங்கள்.

சிலர் கூறுவார்கள் கொஞ்ச நேரம் கூட எனக்கு ஓய்வு கிடைப்பதில்லையே என்று, அவர்களுக்கும் ஓய்வு நேரம் கிடைக்கின்றது. அவர்கள் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பதுதான் உண்மை. முன்பெல்லாம் கூட்டுக் குடும்ப வாழ்க்கைமுறை காணப்பட்டு வந்தது. அதனால் எல்லோருடனும் இணைந்து வெளியிடங்களுக்குச் சென்று வருவது சந்தோசத்தைத் தந்தது. ஆனால் இன்று கருக் குடும்ப வாழ்க்கை முறையால் உறவுகள் பிரிந்து விட்டன. இந்த நிலையில் சந்தோசமாக வெளியிடங்களுக்குச் சென்று வருவது சிறிது கடினமான காரியம் தான்.

ஆனாலும் உங்களால் முடிந்தளவு விடுமுறைக்காலத்தில் வெளியிடங்களுக்குச் செல்லுங்கள். சட்டவிரோதமான வேலைகளில் ஈடுபடாது ஒழுங்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுங்கள். நல்ல இசையைக் கேளுங்கள். தினமும் போதியளவு நேரம் நித்திரை கொள்ளுங்கள். விடுமுறைக் காலத்தை விரும்பி அனுபவியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.க.மாசிலாமணி

# இலண்டன் உயர் வாசற்குன்று முருகன் கோயில் மகோற்சவங்கள்

கோயிலை மையப்படுத்திய கோயிற் பண்பாட்டு மரபொன்று இன்று நேற்றல்ல இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தமிழ் மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த பிரிக்க முடியாத இரண்டறக் இணைந்திருந்த சிறப்பைப் பழந்தமிழ் நூல்கள் மிக விரிவாகக் குறிப்பிடுகின்றன.

"விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலமான உயர்ந்த மலைகளுக்குரிய தெய்வம் முருகன் எனப்பாடும் திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை ஆகிய ஆறு குன்றுகளிலும் முருகன் கோயில் கொண்டு அருளாட்சி செய்கின்றான் எனக் குறிப்பிட்டு அக்கோயில்களில் இடம்பெறும் வழிபாடுகள் அடியவர்கள் பக்தி மேலிட வழிபடும் பல்வேறு வழிபாட்டு நடைமுறைகள் பற்றியெல்லாம் மிகச்சிறப்பாக விவரிக்கின்றது. அக்கால மக்கள், சிவன், சக்தி, முருகன், திருமால், ஆகிய தெய்வங்களை வழிபட்டு வந்தனராயினும் பண்டைய தமிழ் நாட்டின் தனிச்சிறப்பு வாய்ந்த வழிபாடாக முருக வழிபாடே முதன்மை பெற்றிருந்த தென்பதை அக்கால நூல்கள் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. இறையுணர்வு மிக்கவர்களான தமிழர்கள் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கு ஏற்பவே வாழ்பவர்கள். அதனாற்றான் கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்தே பல்லவர்கள், பாண்டியர்கள் மிகச் சிறப்பாகச்சோழ மன்னர்கள் விண்ணை முட்டும் கோபுரங்களும் வியக்கவைக்கும் சிற்பங்களும் நிறைந்த கருங்கற் கோயில்களால் தமிழகம் முழுவதையுமே நிரப்பினர் என்று விதந்து கூறுமளவுக்குச் சிறப்புமிகு கோயில்கள் பலநூறு உள்ளன. ஈழ நாட்டிலும் ஊர்களின் மூலை முடுக்கெல்லாம் கோயில்களே நிறைந்துள்ளன. கோயில் ஒன்று கொடியேறிவிட்டால் அந்த ஊரே விழாக்கோலம் பெற்றுவிடும். பொதுவாகச் சைவ சமயத்தவர்களுக்குக் கோயில் என்றால் அது சிதம்பர நடராசர் கோயிலைக் குறிப்பதுபோல் யாழ்ப்பாணத்தவர்களுக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் குறிக்கும் அளவுக்கு எல்லோர் இதயங்களிலும் இடம் பிடித்துக்கொண்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கொடியேறினாலோ யாழ்ப்பாணமே விழாக்கோலம் கொண்டுவிடும்.

"சைவசித்தாந்த சிந்தனைகள் வழி நெறிமுறையான வாழ்வியல் விழுமியங்களைப் பின்பற்றிய அத்தகைய மக்களுக்குக் கோயிலை மையமாகக் கொண்ட வழிபாட்டு முறை இன்றியமையாதது என்பதை 70களிலேயே சிந்தித்துத் திட்டமிட்டுச் செயற்படுத்திச் சேயோன் மேயமை வரை உலகமும் எனப் பழம் பெரும் இலக்கன நூலான தொல்காப்பியம் குறிப்பிடுவதுபோல் முருகன் விரும்பி உறையும்குன்று ஒன்றில் காலங்காலமாக நீடு நின்று நிலைக்கக்கூடிய கோயில் நிர்மாணித்துக் கும்பாபிசேகம் நைமித்திய நித்தியபூசை வழிபாடுகள் என எல்லாம் சிறப்பாக இடம்பெறச் செய்ததன் மூலம் முருக பக்தர்களின் ஆன்மிக தாகத்தை ஈடு செய்த சைவச் சான்றோர்களின் தீர்க்க தரிசனம் மிக்க இறைபணி என்றும் நினைவு கூரப்படும்.

### மது, மாமிசத்தில் கட்டுப்பாடு

மது, மாமிசம் புசிப்பவர்கள் கூட அவற்றை நிறுத்திப் புனிதராகி விரதம் அனுஷ்டிப்பர். திருவிழா நடை பெறும் 25 நாள்களும் காலை, மாலை என அலங்காரக் கந்தனான நல்லூரானைத் தரிசிக்க அலையலையாகப் பக்தர் கூட்டம் நல்லூரைச் சென்று சேரும். யாழ். நகரின் மையப் பகுதியில் செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமி கள் போன்ற மெய்ஞானிகள் கடுந்தவத்தின் மூலம் ஞான நிலை எய்திய புனிதமான சுற்றாடல் - சாவிகொடுத்த மணிக் கூடு ஒன்று ஓரொழுங்கில் இயங்குவதுபோல திருவிழாக்கள் குறித்த நேரத்துக்கு ஆரம்பித்து நிறைவுறும். நேர முகாமைத்துவம் பேணும் மரபு கொடியேற்றம், மஞ்சம், தங்கரதம், மாம்பழத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, கைலாச வாகனம், பெரிய சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனம் என ஒன்றை யொன்று விஞ்சுமளவுக்கு அழகும்-அலங்காரமும், அருட்பிர வாகமும் நிறைந்த இறைதரிசனம். கோயில் சுற்றாடல் முழுவதும் இடம்பெறும் செவிக்கும் சிந்தைக்கும் விருந்தளிக்கும் இசையரங்குகள். உரையரங்குகள் இவை போன்றவற்றுக்காகவே திருவிழாக்களின்போது நல்லூரான் சந்நிதி பக்தர்களால் நிரம்பி வழியும். இத்தகைய தெய்வீக சான்னித்தியம் நிறைந்த நல்லூரான் உற்சவங்களைக் கண்டுகளித்த மக்களில் கணிசமானவர்கள் 80களைத் தொடர்ந்து தாய் நாட்டிலிருந்து குடிபெயர்ந்து, வெளிநாடுகளில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டனர். 'திரை கடலோடித் திரவியந் தேடு'தலில் வல்லவனான தமிழன், தான் எங்கு சென்றாலும் தன் தாய் மொழியைப் பண்பாட்டைக் கலை, கலாசாரப் பண்புகளை எல்லாம் தன் கூடவே எடுத்துச் செல்வான் என்பதை மறக்கமாட்டான் என்பதைத் தான் தென்னாசிய, தென்கிழக்காசிய, தென்னாபிரிக்க, மொறிசியஸ் ஏன்? பீஜி, கரிபியன் தீவுகளிலும் ஏற்கனவே நிறைவாகப் பரவியுள்ள இந்து மதமும் அவை சார்ந்த கலைகளும், பண்பாட்டுப் பாரம்பரியங்களும் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டும் அடையாளச் சின்னங்களாக விளங்குகின்றன.

### தமிழினத்தின் பரம்பலும் பண்பாடும்

அண்மைக் காலங்களில் அமெரிக்க, ஐரோப்பிய, ஆஸ்திரேலிய நாடுகளில் தமிழினத்தின் பரம்பலும் அவர்களின் சமய பண்பாட்டு அம்சங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மிகக் குறிப்பாகக் கோயிலை மையமாகக் கொண்ட ஆன்மிகச் செயற்பாடுகள் வாழ்வியல் நடைமுறைகள் என்பவற்றில் தம்தாய் நாட்டில் எவ்வாறு அவற்றைப் பின்பற்றி ஒழுகினார்களோஅவற்றுக்குச் சமமான முறையாகக் குடியேறிய நாடுகளிலும் அவற்றைப் பின்பற்றி ஒழுகுவதற்கான செயற்பாடுகளை மிக முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றனர். சிறப்பாக நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் தாய் எனச் சிறப்பித்துக் கூறப்படும் பெரிய பிரித்தானியாவில் அந்த நாட்டின் அரச அங்கீகாரத்துடன் ஒத்துழைப்புடனும். இத்தகைய செயற்பாடுகளை மிகச்சிறப்பாக மேற்கொண்டு வருவதை நேரில் அவதானிக்கக் கூடியதாகவிருக் கின்றது. 1960களுக்கு முன் சைவக் கோயில்களோ அல்லது சைவம் வளர்க்கும் நிறுவனங்களோ இல்லாதிருந்த இந்த நாட்டுக்கு உயர் கல்வி பெற்றுக்கொள்வதற்காக வந்து கல்வியில் கணிதம், சட்டம் ஆகிய துறைகளில் உயர்தகைமை எய்திய பின் இந்த நாட்டில் சைவமும் கோயில் வழிபாடும் சைவப் பண்பாடும் நீடு நின்று நிலைக்க வேண்டுமென்ற பெருநோக்குடன் அங்கொருவர் இங்கொருவராக வாழ்ந்த இந்துக்களை ஒன்று சேர்த்து 1966இல் பிரித்தானிய சைவமகா சபை Hindu Assocation of Great Britain என்ற அமைப்பையும் 1974இல் பிரித்தானிய சைவக் கோயில் அறக்கட்டளை The Brittania Hindu (Shiva) Temple Trust என்ற அமைப்பையும் உரு வாக்கிப் பிரித்தானிய நாட்டில்சைவக்கோயில் கள் நிர்மாணிக்கப்படவும் சைவமும் சைவப் பண்பாடும் வேரூன்றி வளரவும் பலமான அத்திபாரம் இட்டவர் அமரர் சோமசுந்தரம் சபாபதிப்பிள்ளை என்பவரே.


### நாவலருக்குப் பின்னர்

நாவலருக்குப் பின் சைவத்தின் காவலர் எனப் போற்றத்தக்க தகைமையுடையவரான சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரின் ஊரான புலோலியைச் சேர்ந்தவரான சபாபதிப்பிள்ளை இயல்பாக சேவை சித் தாந்த சிந்தனைகளில் நிரம்பிய அறிவும் இறுக்கமான சைவ வாழ்வியல் விழுமி யங்களில் உறுதியான பிடிப்பும் கைவரப் பெற்றவர். தாய் நாட்டில் உயர் பதவிகள் பல வகித்த அவர் தன் தொழிலுக்கப்பால் இலங்கையிலுள்ள சைவ நிறுவனங்க ளின் உயர் அமைப்பாக Apex Organization (கடந்த ஆண்டு அறுபது ஆண்டுகளை நிறைவு செய்து வைர விழாக் Diamon Jubilee கொண்டாடிய) அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தோற்றத்துக்கு அக்கால அரசில் மிகச் செல்வாக்குடன் விளங்கிய சேர் கந்தையா வைத்திய நாதனுடன் இணைந்து முன்னின்று செயற்பட்ட அனு பவம் மிக்கவர் எல்லாவற்றுக்கும் மேலாகக் கொழும்பில் இடம்பெற்ற அவரின் திருமணத் தினத்தன்று தவத்திரு சிவயோக சுவாமிகள் நேரில் சமுகமளித்து நீ முருகன் அருளுக்கு ஆளானவன்" என்று திருமணத் தம்பதிகளை வாழ்த்தி ஆசீர்வதிக்கப்பட்ட பேறும் பெற்றவர் அமரர் சபாபதிப்பிள்ளை.

யாழ்ப்பாணக் கலாசாரம் என்றால் அது கந்தபுராணக் கலாசாரம் என்று கூறுமளவுக்கு முருக வழிபாடு ஆழவேரூன்றிய யாழ். மண்ணைவிட்டு 80களிலிருந்து குடிபெயர்ந்தவர்களில் கணிசமானோர் பெரிய பிரித்தானியாவையும் நிரந்தர வாழிட மாகக் கொண்டுள்ளனர். சைவசித்தாந்த சிந்தனைகள் வழி நெறிமுறையான வாழ்வியல்விழுமியங்களைப்பின்பற்றிய அத்தகைய மக்களுக்குக் கோயிலை மையமாகக் கொண்ட வழிபாட்டு முறை இன்றியமையாதது என்பதை 70களி லேயே சிந்தித்துத் திட்டமிட்டுச் செயற்படுத்திச் சேயோன் மேய மைவரை உலகமும் எனப் பழம் பெரும் இலக்கன நூலான தொல்காப்பியம் குறிப்பிடுவது போல் முருகன் விரும்பி உறை யும்குன்று ஒன்றில் காலங் காலமாக நீடு நின்று நிலைக்கக் கூடிய கோயில் நிர்மாணித்துக் கும்பாபிசேகம் நைமித்திய நித்தியபூசை வழிபாடுகள் என எல்லாம் சிறப்பாக இடம் பெறச் செய்ததன் மூலம் முருக பக்தர்களின் ஆன்மிக தாகத்தை ஈடுசெய்த சைவச்சான்றோர்களின் தீர்க்க தரிசனம் மிக்க இறைபணி என்றும் நினைவு கூரப்படும்.

### பல்லினப் பண்பாடுகள்

இவ்வாறாகப் பல்லினப் பண்பாடுகளை Multi Ethnic Culture அங்கீகரித்து ஆதரவளித்து ஒத்துழைப்பு வழங்கும் சட்டத்தின் ஆட்சி" Rule of Low மிகச் சிறப்பாக இடம்பெறும் இந்த நாட்டின் சட்டங்களுக்கும் ஒழுங்கு முறைமைகளுக்கும் மதிப்பளித்து அவற்றுக்கு அமைவாக ஒழுகவேண்டியது சம்பந்தப்பட்ட அனைவரினதும் கடமை மட்டுமல்லப் பொறுப்புமாகும். ஆறுமுகன் குடிகொண்டிருக்கும் ஆறுபடை வீடுகளின் மகிமையை ஏழாம் படைவீடெனக் கருதத்தக்க இலண்டன் உயர் வாசற் குன் றில் அருளாட்சி புரியும் முருகனின் மாட்சியை இதயத்தில் நிறுத்துவதனூடாக நாமும் கந்தவேளின் அருளாசியைப் பெற்றுய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# ஆங்கில புத்தாண்டுப் பலன் 2017

## கும்பம்

உங்கள் ராசிக்கு லாப வீட்டில் சூரியன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் கடினமான காரியங்களையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். நாடாளுபவர்களின் நட்புக் கிடைக்கும். அரசால் அனுகூலம் உண்டு. மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடி வரும். உங்களுடைய ராசிக்கு 12ஆவது வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் பயணங்களால் அலைச்சல், செலவுகள் வந்து போகும். கடந்த கால கசப்பான அனுபவங்களை நினைவுகூர்ந்து ஆதங்கப்படுவீர்கள். அவ்வப்போது தூக்கம் குறையும்.

11.4.2017 முதல் 26.5.2017 வரை உங்கள் ராசிநாதன் சனிபகவான் செவ்வாயைப் பார்க்க இருப்பதால் முன்கோபம், வேலைச்சுமை, மன உளைச்சல், சகோதர வகையில் பதற்றம், பணத்தட்டுப்பாடு வந்து செல்லும். வீடு, மனை வாங்கும்போது தாய்பத்திரம் சரி பார்த்து வாங்குவது நல்லது. 26.7.2017 வரை உங்கள் ராசிக்குள்ளேயே கேது பகவானும், ராசிக்கு 7ஆம் வீட்டில் ராகுவும் நிற்பதால் தலைச்சுற்றல், தூக்கமின்மை, செரிமானக் கோளாறு, மன இறுக்கம், நாக்கில் வறட்சி, கை,கால் மரத்துப் போகுதல் வந்து செல்லும். குடும்பத்தில் சண்டை, சச்சரவு, கணவன்-மனைவிக்குள் மோதல்கள் எல்லாம் வந்து போகும். ஆனால் 27.7.2017 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசியை விட்டு கேது விலகி 12ஆம் வீட்டிலும், ராகு 6ஆம் வீட்டிலும் அமர்வதால் பெரிய நோய் இருப்பதைப் போன்ற பிரம்மையிலிருந்து விடுபடுவீர்கள். திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல முகவாட்டத்துடன் காணப்பட்டீர்களே! இனி முகம் மலரும். உற்சாகத்துடன் வலம் வருவீர்கள். தினம்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகைகளெல்லாம் கைக்கு வரும்.

கணவன்-மனைவிக்குள் அன்னியோன்னியம் அதிகரிக்கும். மனைவியின் ஆரோக்கியம் சீராகும். திருமணத் தடைகள் நீங்கும். அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். நீங்கள் சொல்லாததையும், சொன்னதாக நினைத்துக் கொண்டு மனக் கசப்பால் விலகியிருந்த மனைவி வழி உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். அங்கு, இங்கு புரட்டி ஏதாவது ஒரு வீடோ, மனையோ வாங்கி விட வேண்டுமென முயற்சிப்பீர்கள். புத்தாண்டின் தொடக்கம் முதல் 01.09.2017 வரை உங்களின் தன-லாபாதிபதியான குரு உங்கள் ராசிக்கு 8ஆம்வீட்டில்நிற்பதால்வீண் அலைக்கழிப்புகள் அதிகரிக்கும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் தீர்ப்பு தாமதமாக வரும். மனதில் இனம்புரியாத கவலைகள் வந்து போகும். தன்னம்பிக்கை குறையும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களுடைய அணுகுமுறையை மாற்றுங்கள். சிக்கலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். திடீர் திடீரென்று உணர்ச்சிவசப்படுதல் இவையெல்லாம் இருக்கும். பணப்பற்றாக்குறையால் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ஆனால் 02.9.2017 முதல் வருடம் முடியும் வரை குரு 9ஆம் வீட்டிலேயே அமர்வதால் திடீர் அதிர்ஷ்ட யோகம் உண்டாகும். நீண்ட காலமாக தள்ளிப் போன காரியங்களெல்லாம் முடிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு. குழந்தைப் பாக்கியம் உண்டாகும். பிள்ளைகளின் தனித்திறமைகளை இனங்கண்டு வளர்ப்பீர்கள். திரு[illegible]

கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். அரைகுறையாக நின்ற கட்டட வேலைகளைத் தொடங்குவீர்கள். தந்தையுடனான மோதல்கள் விலகும். அவருக் கிருந்த நோய் விலகும். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். தற்காலப் பணியில் இருப்பவர்கள் நிரந்தரமாக்கப் படுவீர்கள். 14.12.2017 வரை உங்கள் ராசி நாதன் சனிபகவான் 10ஆம் வீட்டிலேயே நீடிப் பதால் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள். எங்கு சென்றாலும் நல்ல வரவேற்புக் கிடைக்கும். சுப நிகழ்ச்சிகள், பொது விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள் என்றாலும் உத்தியோகத்தில் அடிக்கடி இடமாற்றங்கள், வீண் பழிகள் வந்துச் செல்லும். நெருக்கமானவர்களிடம் கூட குடும்ப அந்தரங்க விடயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். சிலர் காரியம்ஆகும்வரைஉங்களைபயன்படுத்திக்கொண்டு பிறகு தூக்கி எறிவார்கள்.

ஆனால் வருடத்தின் இறுதியில் 15.12.2017 முதல் சனி 11ஆம் வீடான லாப வீட்டில் நுழைவதால் திடீர் யோகம், பணவரவு உண்டாகும். கௌரவப் பதவிகள் தேடி வரும். வெளிநாடு சென்று வருவீர்கள். அரசால் ஆதாயமடைவீர்கள். வேற்றுமதத்தவர், மாற்று மொழியினரால் திடீர் திருப்பம் உண்டாகும். மூத்த சகோதரர் பகையை மறந்து வலிய வந்து பேசுவார். வியாபாரத்தில் தொட்டதெல்லாம் நட்டத்தில் போய் நின்றதே! தொழிலை விரிவுபடுத்தக் கூட பணமில்லாமல் தடுமாறினீர்களே இனி கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். நண்பர்களின் உதவியால் தொழிலை விரிவுபடுத்துவீர்கள். சந்தை நிலவரம் அறிந்து செயற்படுவதால் லாபம் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களின் தேவைகளை உணர்ந்து அதற்குத் தகுந்தாற்போல் பொருள்களை வாங்கி வைப்பீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிணக்குகள் நீங்கும். கூடுதல் சலுகைகளும் கிடைக்கும். ஆனாலும் 10இல் சனி தொடர்வதால் மறைமுக பிரச்சினைகள் இருக்கும். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். கன்னிப் பெண்கள், தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறினீர்களே! வீண் வதந்திகளையும், அவமானங்களையும் சந்தித்தீர்களே! இனி பெற்றோரின் அறிவுரையை ஏற்பீர்கள். கல்யாணம் கூடி வரும். எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கூடுதல் மொழி கற்றுக் கொள்ள முயற்சி செய்வீர்கள். கிரகிக்கும் சக்தி அதிகமாகும். விடைகளை எழுதிப் பாருங்கள். மறதி, அலட்சியம் இனி உங்களை விட்டு விலகும். சக மாணவர்களின் சந்தேகங் களை தீர்த்து வைப்பீர்கள்.

இந்தப் புத்தாண்டு தொடக்கத்தில் கொஞ்சம் தடுமாற வைத்தாலும் மையப்பகுதியிலிருந்து அதிரடி மாற்றங்களையும், வெற்றிகளையும் தருவதாக அமையும்.

**நாளை**
**மார்கழி-28**
வியாழக்கிழமை -12.01.2017
திதி: பூரணை மா.06.23
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ.02.59
ராகுகாலம்:02.03-03.33 வரை
சுபநேரம்:08.03-09.33 வரை
பூரணை விரதம்

# “விலகாத குருபக்தியோடு அழகாக அரங்கே(ற்)றிய திலகார்ப்பணம்”

கே.எஸ்.சிவஞானராஜா

இளையதலைமுறைகளான மாணவ சமூகத்தை உரியவாறு கல்வி புகட்டி வாழ்வாங்கு வாழ்வதற்கான கலைகளையும் வரமாக்கி சிறந்த பிரசைகளாக்குவதில் குருவைப்போல் சிறந்த ஆசான் வேறுயாருமே இருக்க முடியாது. அத்தகைய பேறுடைய குருவாக மிளிர்ந்தவர்தான் கலா பூசணம் சங்கீதபூசணம் - அமரர் எல்.திலகநாயகம்போல். இலங்கையில் ஒரு காலகட்டத்தில் இசைத்துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்தவர். எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டவர். டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவின் மனோதர்ம விநோதங்களோடு இலங்கையில் சமகாலத்தில் கொடிகட்டி முத்திரை பதித்தவர். இலங்கையின் இசை வளர்ச்சியில் இவருக்கு ஓர் அத்தியாயம் விரிந்து கிடக்கிறது. இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் சமூக சகோதர சகவாழ்வுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக இசையை வல்லதொரு ஆயுதமாக்கிச் சாதனை படைத்தவர் போல் ஆவார். இவருடைய ஆளுமையில் மாணவர்கள் பலர் ஈர்க்கப்பட்டனர். காலத்தின் வேகத்துக்கேற்ப அசுர வேகத்தில் இசையை வளர்ப்பதிலும் - போதிப்பதிலும் வெற்றி கண்டவர். அதன்பேறாக விளைந்தவர்களில் பண்பான, பக்குவமான பயபக்தியான மாணவிதான் திருமதி குமுதா உமாகாந்தன் ஆவார். நல்லூரில் சோமராகம் இசைமன்றம் மூலம் ஏராளமான சீடர்களான மாணவர்களை உருவாக்கி வருகிறார் திருமதி குமுதா உமாகாந்தன். இவர்கள் மூலமாகத் தனது குருபக்தியை நல்லை ஆதீன மண்டபத்தில் கடந்த மாதம் 6ஆம் திகதி மாலை அரங்கேற்றி வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டார். இது ஒரு முன்மாதிரியான எடுத்துக்காட்டான நிகழ்ச்சியாகும். கடும் பிரயத்தனத்தின் பிரகாரம் கிட்டத்தட்ட பல நூறு மாணவர்களை மேடையில் அரங்கேற்றிமாணவர்களின்ஆளுமை விருத்திக்கு வழி சமைத்துள்ளார். அமுதகான சுரபியாக மிளிரும் குமுதா உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவரே.



### நிகழ்வுகள்

சபையோரைப் பிரமிக்க வைத்த நிகழ்வுகளாக இறைவணக்கம் யாழ்ப்பாண எழிலினை இசையால் மகிழ்வித்த குழுநிகழ்வு செந்தமிழ் இசையை வாத்தியத்தில் வடித்த பல்லியம் குழு இயலும் இசையும் நயந்த அபிநயப் படைப்பு, தமிழிசைதனைக் காத்து வளர்த்திடப் போற்றிப் பாடிய குழு யாவுமே தரமான வார்ப்புகளாகத் துலங்கிற்று மற்றும் போலின் முதன்மை மாணவனான குணராஜா நக்கீரனின் இசைநிகழ்வு தரமாகவும், நிறைவாகவும் அமைந்து அன்றைய திலகார்ப்பணத்தைக் காத்திரமாக்கிற்று. குரல் கலைஞர்களும், விரல்கலைஞர்களும் என மொத்தம் அறுபத்தேழு கலைஞர்கள் மாணவர்களாகப் பிரகாசித்தமை நல்லூர் முருகன் தந்த அருட்கொடை எனலாம்.

### விருந்தினர்

முதன்மை விருந்தினராக மூத்த இசைக்கலைஞர் சங்கீத பூசணம் வி.கே.நடராஜாவும், சிறப்பு விருந்தினராக முன்னாள் துணைவேந்தர் கலாநிதி என். சண்முகலிங்கனும் கலந்து வெகுவாகப் பாராட்டி ஊக்கமளித்தனர்.

### கௌரவிப்பு

அமரர் திலகநாயகம்போலின் ஞாபகார்த்தமாக ஓய்வுபெற்ற அழகியல் பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூசணம் யாழ். முத்து சு.கணபதிப்பிள்ளை இந்த முறை கௌரவிக்கப்படுகிறார்.

தராதரம் - தரம் - தரா
பத்திரம் - பத்திரம் என்பது இவரது ஆதங்கம்.
சுத்த சங்கீதமே சுகந்தரும்
சுருதி லய பாவம் நிறைந்து விளங்கும் என்பது இவரது மந்திரம்.

### பகுப்பாய்வு

கலாநிதி என்.சண்முகலிங்கன் உரை ஒரு பகுப்பாய்வுக் களமாக மிளிர்ந்தது. 2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள எட்டாவது சோமராக திலகார்ப்பணத்துக்கு இவர் ஆற்றிய உரை வலுச்சேர்க்கும் போலது குடும்பம் முழு ஆதரவும் ஊக்கமளித்தமையும் அவரது உரைக்கும் சபைக்கும் ஈரமளித்தது.

### ஆதீன மகிமை

இவ்வாறாக நிகழ்வுகள் ஆதீன முதல்வரின் ஆசியோடு அரங்கேறுவதால் வெற்றியோடு வாழ்வும் பெறுகின்றன. நல்ல தமிழ், நல்லவாக்கு, நல்லசெய்தி, நல்லபொலிவு, நல்ல போதனை, நல்ல வசீகரம் யாவுமே முதல்வரின் கடாட்சமாக அமைந்தன.

### ஒலியமைப்பு


வீணையிலே ஒரு தந்தியின் வார்ப்புக்கள் ஒலிவாங்கியின் ஒலி அமைப்பைக் கணீரென ஓங்கச் செய்து விட்டாலும், குழுப்பாடலில் இரம்மியமான கற்பனாஸ்வரம் பாடும்போது ஏற்பாட்டாளர்கள் ஒலிவாங்கியைச் சரி செய்துவிடமாட்டார்களோ என்ற ஆதங்கம் சபையில் ஒலித்தது. எது எப்படியோ சோமவாரத்தில் சோமராகம் ஆனந்தராகமே!



**இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் சமூக சகோதர சகவாழ்வுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக இசையை வல்லதொரு ஆயுதமாக்கிச் சாதனை படைத்தவர்போல் ஆவார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மகத்தான ஒக்ரோபர் சோஷலிஸப் புரட்சியின் நூற்றாண்டை வரவேற்கும் வகையில் காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டு, கடந்த 3,4,5 ஆகிய மூன்று நாள்களும் இடம்பெற்ற நாடகப் பெருவிழாவின் காட்சிகள்.



# பிரமிக்கவைத்த தமிழ் நாடக விழா பரிஸில் ஒரு சரித்திரம்

பிரான்சிலிருந்து
எஸ்.கே.காசிலிங்கம்

தமிழ் நாடகத்துறை வரலாற்றில் பாரிசில் இடம்பெற்ற உலகத் தமிழ் நாடக விழா சரித்திரம் படைத்துள்ளது.

உலகம் எங்கும் பரந்து வாழும் இலங்கைத் தமிழ் நாடக கலைஞர்கள் பாரிசில் இடம்பெற்ற உலகத்தமிழ் நாடக விழாவை மிகச்சிறப்பாக நடத்தி முடித்துள்ளதை தென்னிந்திய நடிகரும் சங்கத்தலைவருமான நாசர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

தமிழ் நாட்டில்கூட இப்படியானதொரு நாடகவிழா நடத்தப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிட்ட நாசர், இலங்கைத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும், தங்களது கலை, கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து வருவதையிட்டு மகிழ்ச்சி அடைவதாகக் கூறியுள்ளார்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற உலகத்தமிழ் நாடகவிழாவில் ஆஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து, நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொண்டனர். முதன்மை விருந்தினராக தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசரும், சிறப்பு விருந்தினராக பாரிஸ் புறநகர்ப் பகுதியான ஆர்ஜன்தை நகரமேயர் ஜோர்ச் மோட்டனும் கலந்து கொண்டனர். கௌரவவிருந்தினராக லண்டனிலிருந்து நாடகர் தாசிசீயஸ் பங்கு கொண்டார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து அண்ணாவியார் 'பத்தண்ணா' என்று அறியப்படும் இளைய பத்மநாதன் குழுவினரும், கனடாவிலிருந்து பி.ஏ.ஜெயகரன் குழுவினரும், லண்டனிலிருந்து கே.பாலேந்திரா ஆனந்தராணி குழுவினரும், ஜேர்மனி பிராஸ்பேர்ட் நகரிலிருந்து தியான் குழுவினரும், ஜேர்மனி ராதா நாட்டியப் பள்ளியின் நிர்வாகி ராதா சர்மாவும், சுவிற்சர்லாந்திலிருந்து அன்ரன் பொன்ராசா குழுவினர் மற்றும் "அடம்பன்" நாடகப்புகழ் சிறிகுழுவினர், நோர்வேயிலிருந்து நர்த்தனா காவ்யா பரத நாட்டியக்குழுவினர் என்று 150 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர்.

பிரான்சிலிருந்து வெளிவரும் 'உடல்' சஞ்சிகையின் ஆதரவில் நடைபெற்ற இந்த விழாவுக்கு பிரான்ஸ் ஆர்ஜன்தை தமிழ்ச் சங்கத்தினர் அனுசரணை வழங்கியிருந்தனர். இளைய பத்மநாதன் எழுதியுள்ள 'பத்தண்ணா' என்ற நூலை மேடையில் வெளியிட்டு வைத்து, பத்தண்ணா கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் பேசிய நாசர் எண்பதுகளிலிருந்து பத்தண்ணாவின் திறமைகள் பற்றித் தாம் அறிந்து வைத்திருந்ததாகவும் அந்தக் காலத்தில் சென்னையில் இடம்பெற்ற பத்தண்ணாவின் நாடகங்களைப் பார்த்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

'பத்தண்ணா' நூலை நாசர் வெளியிட்டுவைக்க, மூத்த பத்திரிகையாளர் எஸ்.கே. காசிலிங்கம் அதன் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

நாடகாசிரியர் தாசிசீயஸ், பேராசிரியர் அரசு ஆகியோர் பத்தண்ணாவின் சிறப்புக்கள் பற்றிப் பேசினார்கள்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் பேணப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் இலங்கையின் ஐந்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகளை இலங்கை அரசு நடத்தி வரும் இந்த வேளையில், வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களும் தங்களது பாரம்பரிய நாடக வடிவங்களைப் பிற நாட்டு மேடைகளில் பிரபல்யமடையச் செய்வதிலும், அடுத்த இளம் தமிழ்ச் சந்ததியினருக்கு எமது நாடக வடிவங்களைப் புரிய வைக்கும் முகமாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட உலகத் தமிழ் நாடக விழா பெருமளவில் வெற்றியளித்திருப்பது பாராட்டுக்குரியது.

> ஆஸ்திரேலியாவிலிருந்து அண்ணாவியார் 'பத்தண்ணா' என்று அறியப் படும் இளைய பத்மநாதன் குழுவினரும், கனடா விலிருந்து பி.ஏ.ஜெயகரன் குழுவினரும், லண்டனிலிருந்து கே.பாலேந்திரா ஆனந்தராணி குழுவினரும் ஜேர்மனி பிராஸ்பேர்ட் நகரிலிருந்து தியான் குழுவினரும், ஜேர்மனி ராதா நாட்டியப் பள்ளியின் நிர்வாகி ராதா சர்மாவும் சுவிட்சர்லாந்திலிருந்து அன்ரன் பொன்ராசா குழுவினர் மற்றும் "அடம்பன்" நாடகப்புகழ் சிறிகுழுவினர், நோர்வேயிலிருந்து நர்த்தனா காவ்யா பரத நாட்டியக்குழுவினர் என்று 150 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர்.

இரண்டாவது உலகத்தமிழ் நாடகவிழாவை லண்டனிலும், அடுத்த விழாவை கனடாவிலும் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாக இந்த விழாவின் ஒருங்கிணைப்பாளரான 'உடல்' சஞ்சிகையின் ஆசிரியர் எம். அரியநாயகம் தெரிவித்தார்.

இவரது தனி முயற்சியில் இந்த விழா நடந்தேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது இந்தப் பணியை மேடையில் பேசிய அத்தனை பேரும் மெச்சினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டாள் அருளிய திருப்பாவை

■ நாவற்குழியூர்சு.சிவராசா

அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

மார்கழி மாதம் மகிமைகள் நிறைந்தது. மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று கீதையில் கண்ணன் கூறுவான். அதனால் அது பீடுடைய மாதம் ஆனால் பேச்சுவழக்கில் திரிபடைந்து பீடையுடைய மாதம் என்று கூறுவது பொருந்தாது. இது உத்தராயண காலத்தின் ஆரம்பம். அதனால் தேவர்களுக்கு வைகறைப் பொழுது தனுர் மாதம் என்று கூறப்படும் மார்கழியில் எத்தனையோ விசேடநிகழ்வுகள் உண்டு. திருவாதிரை, ஆஞ்சநேய ஜெயந்தி, விநாயகசஷ்டி விரதம், கிறிஸ்து பிறப்பு என்பன அவற்றுள் சில.



ஆண்டாள் தன்னை கோகுலத்து கோவியைகளில் ஒருத்தியாக பாவனை செய்கிறாள். தான் வாழ்ந்த திருவில்லி புத்தூரைக் கோகுலமாகவும் அங்கு கோயில் கொண்ட பெருமானை தனது காதலனாகவும் அங்குள்ள ஏனைய சிறுமியரை கோவியைகளாகவும் பாவனை செய்து கொண்டாள். அடுத்த ஐந்து பாசுரங்களில் கண் ணுக்கு பிரியமான நந்த கோபர். யசோதை, பலதேவர் நப்பின்னைப் பிராட்டி, துவாரபாலகர் முதலியோரை துயிலெழுப்புகிறார். அடுத்த ஐந்து பாசுரங்களில் கண்ணன் துயிலுணர்த்துகிறார். இறுதி ஐந்து பாசுரங்களில் கண்ணனை துயிலுணர்த்துகிறார்.

இத்தகு சிறப்புக்களை கருதியோ ஆண்டாள் நாச்சியார் மார்கழியில் வருகிற பாவைநோன்பை பாடு பொருளாக எடுத்துக்கொண்டார். கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல கணவனை வேண்டியும் நாட்டுக்கு நல்ல மழை வேண்டியும், பஞ்சபாணனாகிய மன்மதனை நோக்கி விரதமிருப்பது பாவைநோன் பாகும். வடநாட்டில் இது கார்த்திகாயினி விரதம் எனப்படும். ருக்மணிதேவி இந்த விரதமிருந்து கிருஷ்ணனை மணவாளனாகப் பெற்றாள்.

பாவைநோன்பு பௌர்ணமியில் ஆரம்பித்து, திருவாதிரையில் முடிகிறது என்று- பரிபாடலில் குறிப்பு இருக்கிறது. கீழ் வானம் வெள் ளென்று இருந்தால் நல்ல மழை பெய்யும்-குறிப்பாகவும் செவ்வானமாக இருந்தால் மழை வாராமைக்கான குறிப்பாகவும் அதில் சொல்லப்படுகிறது.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சீறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏராந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்
கார்மேனிச் செங்கன் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்!

ஆதியில் மகளிர் விளையாட்டாக இருந்த பாவை ஆடல், தமிழ் இலக்கியத்துள் நுழைந்து பக்தி இலக்கியமாகி போற்றப்படுகிறது. ஆண்டாளின் திருப்பாவையும் மணிவாசகரின் திருவெம்பாவையும் பாவைவிரதத்துக்கு ஏற்றம் கொடுத்த பக்தி இலக்கியங்களாகும். இங்கு திருப்பாவையை சிறப்பாக எடுத்துக் கொள்வோம். இது முப்பது திருப்பாடல்களைக் கொண்டது. முதல் ஐந்து பாடல்களும் நோன்புக்கான ஆயத்தப்பணிகளை சொல்கிறது. அடுத்துவரும் பத்துப்பாடல்களில் ஆண்டாள் தன்னையொத்த பத்து சிறுமியரை நீராட்டுக்கு அழைப்பதைச் சொல்கிறது.

ஆண்டாள் தன்னை கோகுலத்து கோவியைகளில் ஒருத்தியாக பாவனை செய்கிறாள். தான் வாழ்ந்த திருவில்லி புத்தூரைக் கோகுலமாகவும் அங்கு கோயில்கொண்ட பெருமானை தனது காதலனாகவும், அங்குள்ள ஏனைய சிறுமியரை கோவியைகளாகவும் பாவனை செய்து கொண்டாள். அடுத்த ஐந்து பாசுரங்களில் கண்ணுக்கு பிரியமான நந்தகோபர். யசோதை பலதேவர் நப்பின்னைப் பிராட்டி, துவாரபாலகர் முதலியோரை துயிலெழுப்புகிறார். அடுத்த ஐந்து பாசுரங்களில் கண்ணன் துயிலுணர்த்துகிறார். இறுதி ஐந்து பாசுரங்களில் கண்ணனை துயிலுணர்த்துகிறார். இறுதி ஐந்து பாசுரங்களில் பாவை நோன் பின் பயனாக வாழ்வும்-நாடும் வளம்பெற்று, கிருஷ்ணனை பக்தியோடு சேபித்தவர்கள் வைகுண்ட பதத்தை அடைவார்கள் என்றும் அறுதியிட்டு சொல்கிறாள்.

நோன்பிருப்பவர்கள் செய்யக்கூடாதவற்றை வையத்து வாழ்வீர்கள் ..." என்னும் இரண்டாம் பாசுரத்தில் பட்டியலிட்டு காட்டுகிறாள்

நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம்-தீக்குறளை சென்றோதோம்.
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி

அது நீள்கிறது இவ்வாறு பாவை நோன்பை அனுஷ்டித்து முடித்த பின்னர் தாம் பெற்ற பயனையும் செய்வனவற்றையும் இருபத்தேழாம் பாசுரத்தில் சொல்லுகிறார். ஐந்து தொடக்கம் பதினைந்து பாடல்களில் வரும் உள்ளுறைய குறிப்பாக பத்து ஆழ்வார்களை விளிப்பதாகவும் பெரியோர் கூறுவார்கள்.

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா உந்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள் வளையே கோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவரக்
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்!

பாவை நோன்பின் பயனாக நாட்டில் மழையும் பெய்யும் வள்ளற்பெரும் பசுக்களின் பால் குடம் நிறைக்கும், எல்லோருக்கும் குறைவின்றி உணவு கிடைக்கும். தின்னும் வெற்றிலை பருகும் நீர் எல்லாமே கண்ணனாகவே ஆண்டாள் கருதினாள். மேகங்கள் ஆழிநீரை முகந்து கறுத்து இடியிடித்து மின்னல் வெட்டி மழை பெய்வதை கண்ணனின் தோற்றப் பொலிவோடு ஒப்பிட்டு ஆழிமழைக் கண்ணா... என்னும் நான்காவது பாசுரத்தில் சொல்கிறாள்.

கண்ணனின் நாம சங்கீர்த்தனம் எல்லாப் பாடல்களிலும் சொல்லப்பட்டாலும் மாயனை மன்னு வடமதுரை மைந்தனை..." என்றும் பாடலில் சிறப்பாகச் சொல்லி அவனை வணங்கினால் பாவங்கள் எல்லாம் நெருப்பில் எரிந்து தூசாகிவிடும் என்றும் குறிப்பிடுகிறாள்.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தில் தோன்றும் அணி விளக்கைத்
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோத ரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய்பிழையும் புகுதருவான்நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்!

அதிகாலை நீராடப்புறப்பட்டு, தன்னையொத்த பத்துச் சிறுமியரோடு உட்குறிப்பாகச் சொன்னபடி பத்து ஆழ்வார்கள் பல தேவர் முதலான ஐந்து கண்ணனின் சுற்றத்தார்,

தாய்மார்கள் ஐவரோடு கண்ணனின் பள்ளியறைக்கு வருகிறாள். துரியோதனன் முதலான அரசர்கள் வெளியே நிற்க பார்த்தன் உள்ளே சென்று கண்ணன் காலடியில் சரணடைகிறான். இந்தக் குறிப்பை அங்கண் மாயா வாதத்து அரசர் அபிமான ... என்னும் இருபத்திரண்டாம் பாசுரத்தில் காட்டுகிறாள். இவர்களின் வருகையால் துயிலுணர்ந்த கண்ணனின் கருணைவிழிகள் திங்களும் ஆதித்தியனும்போல திரு நோக்கஞ் செய்தபோது எங்கள் மேல் உள்ள பாவங்களும் சாபங்களும் நீங்கி நாம் தூயோமாவோம்.

பாவை நோன்பிருந்த பயனாக திருமால் தரும் பறையென்னும் வாத்தியக் கருவியை வேண்டி வந்தாரல்லர். மாறாக கண்ணன் மீது தீராத பக்தியும், நாட்டுக்கு வளமும், மக்களுக்குச் செல்வங்களும் கிடைப்பதோடு தமக்கும் நல்ல வாழ்க்கைத் துணையை வேண்டி நிற்பதாகக் கூறுகிறாள். இதனால் இறைவனின் கருணையாகிய மழையும் பக்தியாகிய பயிர் வளமும் இறைவன் திருவடிப் பேறாகிய பேரின்ப வாழ்வும் வேண்டினார் என்றும் பெரியோர் கூறுவர்.

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேய் இழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்!

முப்பதாவது திருப்பாடலில் திருக்கடைக்காப்பு சாத்தி ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையை முழுமை பண்ணுகிறாள். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாக பெரி யாழ்வாரின் தவச் செல்வியாக அவதரித்து உலகம் உய்ய அருமருந்தனய பாசுரங்களைப்பாடி அருளினாள். கண்ணனையே தன் கணவனாக வரித்து திருவேங்கடப்பெருமாளோடு இரண்டறக் கலந்தாள்.

நூற்றெட்டு திவ்ய தேசங்களில் எழுந்தருளி இருக்கும் திருமாலைப் பன்னிரு ஆள்வார்களும் பாடிய நாலாயிர திவ்ய பிரபந்தத்தைப் பாராயணம் செய்பவர்கள், நாராயணனின் வைகுண்டப் பதத்தை அடைந்து, பிறவியில்லாத பேரின்பப் பெரு வாழ்வை அடைவார்கள் என்பது திண்ணம்.

*ஸ்ரீஆண்டாள் திருவடிகளே சரணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மு.சந்திரகுமார்

# மாணவர்கள் சுதந்திரமாகக் கற்க ஆர்வமுறுகின்றனர்

இன்றைய கல்வி சுய கற்றல் செயற்பாட்டுடன் அனுபவங்களினூடு கற்றல், பரிசோதித்துகள ஆய்வு மூலம் கற்றல், தகவல் தொழில்நுட்ப அறிவு மூலம் கற்றல் என்ற வகையில் மாணவர்கள் வகுப்பறையில் கட்டுப்பட்டுப்படிப்பதைவிட சுதந்திரமாகக்கற்க வழிகாட்டுகின்றது. இதனையே மாணவர்கள் விரும்புகின்றார்கள். ஆனால் பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் எப்போதும் கதிரைகளிலே உட்கார்ந்து கரும் பலகையில் எழுதுபவற்றை எழுதுவோராக மாணவர்கள் இன்று காணப்படுகின்றனர். இந்த நிலை பலபாதக விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது என முல்லைத்தீவு அமைதித்தென்றல் இல்லத்தில் நடைபெற்ற மாணவத் தலைவர்களுக்கான பயிற்சிப்பட்டறைக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி பா.தனபாலன் தெரிவித்தார். இந்த நிகழ்வு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி அன்று அருட்தந்தை எஸ்.அமால் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, மாணவர்களிடையே ஆளுமைவிருத்தியை ஏற்படுத்த ஆன்மிக, ஒழுக்கவிழுமிய, கலாசார, பொருளாதார, அரசியல் விழிப்புணர்வுகளை இன்று பல்வேறு கற்றல் நிகழ்வுகளின் ஊடாக ஏற்படுத்த வேண்டும். கிடையாகவும் நிலைக்குத்தாகவும் இவற்றைத் தொடர்புபடுத் திப் பாடசாலை, நிறுவனங்கள், குடும்பங்கள் ஊடாகவும் ஏனைய சமூக நிறுவனங்கள் ஊடாகவும் ஆளுமையைக் கட்டி எழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

வேறுபாடுகள் நிறைந்த சமூக வாழ்க்கை முறைமையுள் ஒரு பிள்ளை பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள், கற்றல் செயற்பாடுகள், கற்றலில் பற்குபற்றுவதற்குள்ள வாய்ப்புக்கள், பெற்றோரின் சமூக பொருளாதார கல்விப் பின்னணி, போர்த் தாக்க விளைவுகள், சுகாதாரக் குறைபாடுகள், போக்குவரத்து வசதியீனங்கள், அடிப்படை மனிதத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குள்ள பிரச்சினைகள் ஆகிய பல்வேறு விடயங்கள் மாணவர்களின் தலைமைத்து ஆளுமை விருத்தியை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பொருத்தமான சுயாதீனமான கற்றல் அனுபவங்களின் மூலமாக மேற்குறிப்பிட்ட சவால்களை வெற்றி கொள்ளமுடியும்.

இதற்குப் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் விரைவான பொருத்தமான மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். பல தரக் கற்பித்தல், செயல்நிலை ஆய்வு, கல்விக்களச் சுற்றுலா, தகவல் தொழில்நுட்பகளப் பயில்வு இன்று நடைபெற்று வருவதைப்போன்ற மாணவர் தலைமைத்துவப் பயில்வு முகாம்கள் வதிவிடப்பயில்வுகள் பல மட்டங்களில் பலபரிமாணங்களில் மேற்கொள்ளப்படவேண்டும்.

எமது மண்ணில் இறுதி வாய்ப்பொன்றைப் பெற்றுப்பெரிய எதிர்பார்ப்புடனேயே பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர்களிடம் வந்துள்ளனர். அவர்களின் இந்தப் பெரிய எதிர்பார்ப்பை நிறைவேற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் உதவினால் மாணவர்கள் தமக்கான வழியைத்தாமே அறிந்து கொள்வர். அந்தச்சமயம் அவர்கள் தமது குடும்பத்துக்கு ஒரு வளங்களாக மிளிர்வர். நாட்டுக்கு நல்வளங்களாகச் செயற்படுவர். அதனால் அதிபர் ஆசிரியர்களுக்குத்தாம் கற்பித்த பயன் கிடைக்கும். பல்வேறு விதங்களில் என்பதை விட கடந்த பல வருடங்களாகப் பாதிக்கப்பட்ட எமது பாடசாலை மாணவர்கள் சுற்றாடலுடன் ஒன்றிய வாழ்வுக்கு இடமளித்தல், வெள்ளையுடை வேலைக்கலாசாரத்துக்குப் பதிலாக உழைப்புக் கலாசாரத்துக்கு மதிப்பளித்தல், உழைப்பின் மகிமையை உணர்தல், அறிவை முகாமை செய்தல், அறிவைப்பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தல், ஆக்கத்திறன்கள் மூலம் அறிவை உருவாக்குதல் என்ற வகையில் பாடசாலைகளைப் பெற்றோரும் சமூகமும் நம்பக்கூடிய வகையில் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

பாடசாலைக்கு உள்ளும் புறமும் எமது மாணவர்களுக்குத் தலைமைத்துவ ஆளுமைகளை விருத்தியாக்கவும் தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளவும் இதுபோன்ற பயிற்சிக் களமுகாம்கள் பயன் தரும் எனவும் தெரிவித்தார்.

**பொருத்தமான சுயாதீனமான கற்றல் அனுபவங்களின் மூலமாக மேற்குறிப்பிட்ட சவால்களை வெற்றி கொள்ளமுடியும். இதற்குப் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் விரைவான பொருத்தமான மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவின் மர்மம் மாயட்டும்

மனிதா!
நீ மது உண்ணும் மாயவனாய்
காசினியில் உதித்தாயோ?
மதுவாக வாழ்ந்தாயோ- அல்லது
மதுவை மதித்தாயோ?

மாதுவின் நிலை அறிந்தாயா?
மாண்ட உயிரை நினைத்தாயா?
மாதங்கள் கடந்து போகிறதா?
மனமும் பறந்து செல்கிறதா?

மிடுக்குடன் வாழ்வது எப்போது?
மிரண்டெழுவதும் எத்தருணம்?
மிண்டு ருசிக்கும் உன் நாவோ?
மிதமாய் சுருங்கிப் போகிறதே!

மீண்டும் மதுவை மறப்பாயா?
மீளும் வாழ்வை நினைப்பாயா?
மீக்கூறல் வேண்டுமே வாழ்வில்!
மீன்போல் துடிப்பதும் எதற்காக?

முதலை இழந்து தெரு அதனில்
முந்தி உயிரை இழந்தாயோ?
முகுளமாக இருக்கும் நொடியில்
முடிவின்றி முடியாதே வாழ்வை!

மெய்மைகள் தளைத்திட
வேண்டுகிறேன்
மெல்லிய உயிரைக் காத்திடவே
மெட்டாய் நீ இருத்தல் ஆகாதே!
மென்னி காத்து வாழ்ந்திடுவாய்!

மேடகம் போல் நீ அலையாதே!
மேதகவும் பெற்று வாழ்ந்திடுவாய்!
மேவார் ஆக உதிர்க்காதே!
மேழியாக உதவிட வா!

மைதிலி போன்ற மங்கைகளை
மையலுடன் சூறையாடாதே!
மைதயில் வாழும் மானிடரோ
மைப்பு போல் செழித்திடுவர்
மௌனம் காப்பது எதற்காக?
மௌலியில் நிம்மதி பேணிடுவாய்!

சுருத்திகா சுதாகரன்,
வயாவிளான் மத்திய கல்லூரி.





# இளங்கன்று பயமறியாது

கருடன்

குறிப்பிட்ட ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான பெற்றோர்கள் தத்தம் குழந்தைகளின் நடவடிக்கைகளிலே கவனம் செலுத்துவதில் அசமந்தப் போக்கையே கைடைப் பிடிக்கிறார்கள். பிள்ளைகள் பொதுவாக எதிலுமே பயம் கொள்வதில்லை படிப்பொன்றைத் தவிர! முன்னொரு காலத்தில் பிள்ளைகள் அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி அவர்கள் வயதுக்கு வரும் வரை ஆபத்தான விடயங்களில் தொடவோ, நெருங்கவோ, உண்ணவுஞா பார்க்கவோ அனுமதிக்க விடமாட்டார்கள். வயதுக்கு மூத்தோர் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள். யாருமே கட்டுப்பாடுகளை மீறிப் போனால் பரிசு கிடைக்கும். இப்போது அப்படி இல்லை!

**விவேகம்**

இலத்திரனியல் ஊடகங்கள் மலிந்தும், பொலிந்தும் இருப்பதனால், கட்புல, செவிப்புல அனுபவங்கள் பிள்ளைகளின் விநோதங்களுக்கு வரம் தருகின்றன. பெற்றோரிலும் பார்க்க அதீத கெட்டித் தனத்துடன் பிள்ளைகள் விவேகிப்பதனால் அவர்களது மொழியாற்றல், புதிய படைப்புக்கள், விஞ்ஞானப் பழக்க வழக்கங்கள், உடைநடை பாவனை யாவுமே முதன்மை பெறுகின்றன. பெற்றோர்கள் - வளர்ந்த சூழல், மிகுந்த கட்டுப்பாடுடைய சமூகக் கட்டமைப்பினைக் கொண்டது. அத்துடன் போர்க்காலக் கலாசாரங்களைக் கொண்டது. தற்போதைய உலகம் பிள்ளைகளை மையமாகக் கொண்டது. அவர்களது சுதந்திரத்திற்கும், பாதுகாப்புக்கும் சமூகமும், உலகமும் அரணாக உள்ளன. சட்டம் அவர்களைத் தன் கையில் எடுத்து வாழ்வளிக்கிறது. அந்த நிலையில் இளங்கன்றாகிய பிள்ளைகளின் வேகம், விவேகம், திறமை, அறிவு, ஆராய்வு, தேடல், தேர்வு, தேர்ச்சி, துணிவு, குறும்பு, சினேகிதம், நட்பு, தோழமை, ஆளுமை, அவதானிப்பு, அழகுடைமை, விளையாட்டு யாவுமே ஏனையவர்களால் வெற்றிகொள்ள முடியாதவையாகும். இவ்வாறான பெருமிதங்களால், சிறுவர்கள் எங்கும், எதிலும், எப்பொழுதும் சுறுசுறுப்பானவர்களாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அல்லாமலும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், இளைஞர் களுக்குப் பெரும் உத்வேகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து வருகிறது. இதன் பேறாகவும், இலத்திரனியல் ஊடகங்களின் வர்ஜ, வக்கிர, வனாந்தர, வானளாவிய ஆசைகளினாலும், பிஞ்சுகள், கன்றுகள், பாலர்கள், சிறுவர்கள், குமருகள் அனைவருமே எதையும், எதிலும், எப்படியும்ஒரு முறை என்னென்று ஆராய முற்படுகிறார்கள். இந்த நிலையில் இளைஞர்கள் பயம் கொள்ளாத பாங்கினை கையில் எடுத்துச் சாதிக்க முற்படுகிறார்கள். இதிலே வேதனை, வெற்றி, தோல்வி, சாதனை, சௌபாக்கியம் எல்லாமே அவர்களைச் சந்திக்க வைக்கும்.



**நீர் விளையாடேல்**

2016 ஆம் ஆண்டு ஆரம்பித்து இன்றுவரை இலங்கையில் சுமார் ஆயிரம் இளஞ்சிறார்கள், நீந்த முடியாதவர்களாக நீரிலே விளையாடி, அறுநூறு பேர் வரை இறந்துள்ளனர். பலரைக் காணவில்லை. சிலர் காயங்களோடு நோய்வாய்ப் பட்டுள்ளனர். மேற்சொல்லப்பட்ட ஆயிரம் சிறார்களும் ஒன்றில் பெற்றோர் கட்டுப்பாட்டை மீறியவர்களாக இல்லாவிட்டாலும், நீர் சம்பந்தமான பயமோ எள்ளளவும் இல்லை. அந்த நீர் சம்பந்தமான அனுபவம் இல்லாத போது அனுபவம் உள்ளவர்களது சொல்வழி கேட்பதற்கும் இளைஞர்கள் தயாராக இல்லை. ஆகவே இளங்கன்று பயமறியாது என்பது நவீன காலத்திற்கு மிகவும் பொருத்தமான பழிமொழியாகும். இளையவர்கள் சினிமாவை மைய மாகக் கொண்டு வாழ்க்கையை வென்றுவிடலாம் என்பது அவர்களது பகல் கனவாகும். பல இளைஞர்கள் எண்ணுவதுபோல சினிமாவில் நடிப்பது போல வாழ்க்கையை ஓட்ட முடியாது. சினிமாவில் மூன்று மணித்தியாலம் ஓர் இல்லற வாழ்வுக்கு பாதையமைக்க முடியுமென்றால், நூறு வயதுடைய ஒரு மனித வாழ்க்கை ஒரு போதும் தோல்வியடைய வாய்ப்பு இருக்காது.

**சவாரி**

பொதுவாகவே இளந்தலைமுறையினர் வாகனங்களில் பயணிக்க அதுவும் வேகமாகப் பயணிக்கவே விரும்புகின்றனர். சட்டதிட்டங்களுக்கு அப்பால், அச்சங்கள் - அபாயங்களுக்குஅப்பால், இறைசிந்தனைக்கு அப்பால் வீதிகளில் மரணபயம் இன்றி சவாரி செய்வது இளைஞர்களுக்கு வாலாயமாகி விட்டது. இதன் பிரகாரம் நாளொன்றுக்கு இரண்டு இளைஞர்கள் வீதம் வாகன விபத்தில் மரணிக்கிறார்கள். வாகனம் ஓடுவதற்கும், வாகனம் வேண்டுவதற்கும் ஒரு காலத்தில் வயதும், தகுதியும், வேலையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்போது பணம் மட்டும் இருந்தால் போதும் அதுவும் இளையவர்களுக்கு அதன் சுகம் தெரிந்து விட்டால் பிறகு சொல்லவும் வேண்டுமா? பிறகென்ன பயம்? இளங்கன்றுகள் தானே!

**ஊடகம்**

சகல ஊடகங்களிலும் தினந்தோறும் விபத்துக்கள், மரணங்கள், அகாலங்கள் தொடர்பாகச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. தயவுசெய்து இளைஞர்களின் வாழ்வுக்கு இறைவன் துணைபுரிய வேண்டும்! இது எமது பிராத்தனையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி யோகலட்சுமி பத்மநாதன்



பிறப்பு 10.09.1952 இறப்பு 07.01.2017

யாழ் பளை, அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கிளிநெச்சி, பரந்தன், 5ஆம் வாய்க்காலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகலட்சுமி பத்மநாதன் 07.01.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் மனைவியும் சுதாகரன் (பிரான்ஸ்) லிங்கேஸ்வரன் (இத்தாலி), அகிலேஸ்வரன்(இத்தாலி), சுவர்ணா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான கைலாய பிள்ளை, சுப்பிரமணியம் மற்றும் திசைவீரசிங்கம் (இலங்கை), யோக நாதன் (இத்தாலி), புனிதவதி (இத்தாலி), கிருஷ்ண வேணி (சுவிஸ்), புஸ்பஞானதேவி (லண்டன்), உதயதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற தங்கராசா மற்றும் செல்வரூபி (இத்தாலி) ஆகியோரின் அன்புச்சகோதரியும். கிருபாழினி (பிரான்ஸ்), தமிழினி (இத்தாலி), ஜெயரூபி (இத்தாலி), சுரோஸ்காந்தன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும். குலமணி(இத்தாலி) காலஞ்சென்ற செல்வமணி மற்றும் திலகவதி (இத்தாலி), தவராசா (இத்தாலி), நாகராஜா (சுவிஸ்), ஜெயபாலசிங்கம் (லண்டன்), குணரஞ்சன்(சுவிஸ்),ஈஸ்வரன் (இத்தாலி), லட்சுமி (இலங்கை), சண்முகராசா (இலங்கை), மணி( இலங்கை), சிவராசா(இலங்கை), மனோகரி (இலங்கை), புஸ்பராணி (இலங்கை), யோகோஸ் வரன்(இலங்கை),அரசரத்னம்(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்லம்மா (சுவிஸ்) காலஞ்சென்ற நாகமுத்து .நாச்சிப்பிள்ளை (இலங்கை) ஆகியோரின் அன்பு பெறாமகளும் சரன்சிகா(பிரான்ஸ்),ஏமா (பிரான்ஸ்), எமிலி (பிரான்ஸ்),கிஷான் (பிரான்ஸ்), யதுர்சன் (இத்தாலி), அபிதர்சன் (இத்தாலி), ராகுல் (இத்தாலி) ஆருஷ் (இத்தாலி), கயலரசி (இலங்கை), தனுயன் (இலங்கை),அஸ்வின் (இலங்கை) ஆகியோரின்அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முரசுமோட்டை கோரக் கண் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

**பரந்தன்,**
**ஐந்தாம் வாய்க்கால்,**
**கிளிநொச்சி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**076 396 7414**
**077 840 0663**

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 11 • 07 • 1987



மறைவு 08 • 01 • 2017

## இராஜகோபால் சாருஜன்

**(பிராந்திய மேற்பார்வையாளர் - பிறிமா நூடில்ஸ்)**

**வசந்தம் வீசும் வாழ்வு பாதையிலே**
**சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து**
**இனிமையாக வாழ்ந்த வேளை**
**இளமையில் முடிவெழுதி கவர்ந்ததேனோ**
**மாறாத சோகமுடன் மனமுருகி புலம்புகின்றோம்.**
**கனத்த இதயத்துடன் கண்ணீரால் அஞ்சலிக்கிறோம்.**
**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**சுப்பசூஸ்**
**உரிமையாளரும், ஊழியர்களும்**

# மரண அறிவித்தல்

## திருமதி சறோசாதேவி (சறோ) தங்கராசா

**பிறப்பு** **10.09.1962** **இறப்பு** **07.01.2017**



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோசாதேவி (சறோ) தங்கராசா கடந்த (07.01.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரவணமுத்து - மரியபவளம் தம்பதியரின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கராசாவின் பாசமிகு மனைவியும் சசிகலாதேவி, சர்மிளாதேவி, நடேசலிங்கம், பவளராஜ், கருணாவதி, சுந்தரலிங்கம், சயந்தினிதேவி, ரகுணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கயல்விழி (லண்டன்), மயூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சர்வநேசன் (லண்டன்), பிரியங்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் திவிஷன், லதுஷன், பானுஷன், ஷான்வி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2017) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரியதம்பிரான் கோயிலடி,**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**க.தங்கராசா (கணவர்)**

**தொடர்புகளுக்கு: 075 040 5634**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைகள்!

(27ஆம் பக்கத் தொடர்ச்சி) செய்வது ஜிசாட்டின் வேலையாகக் காணப்படுகிறது. கடைவாய்ப் பற்களின் பணியைச் செய்ய பறவைகளில் உள்ள விசேட அமைப்பான ஜிசாட் பறவைகள் விழுங்கும் சிறு சிறு கூழாங்கற்களையும், மணற் துகள்களையும் பயன் படுத்தி கடினமான உணவுகளை உடைத்து செரிமானத்துக்கு தயார்படுத்துகிறது. இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு ஒரு முறை தேய்மானமான கற்களைக் கழிவாக கழித்து விடுவதாகவும் புதிதாக கற்களையும், மணலையும் உணவுடன் எடுத்துக் கொள்வதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். முதலை வகையான ஊர்வன, டைனோ சரஸ், மீன்கள், மண் புழுக்களுக்கு இருப் பதுபோல ஜிசாட் அனைத்து வகையான பறவைகளுக்கும் இருப்பதாகத் தெரிகிறது. இது தடிமனான தசை களால் ஆனது. இதன் உட்புறத்தைப் பாதுகாக்கவும் செரிமானத்துக்கும் நொதியப்பூச்சு அதில் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஒரு சில பூச்சியினங்களில் ஜிசாட் கடினமான செதில் களையும் சிறு சிறு பற்கள் போன்ற அமைப்பையும் கொண்டுள்ளது. ஆக,பறவைகளுக்கே உரித்தான மேற்படி விசேட அம்சமானது பல் மருத்துவச் செலவில்லாத உபரிப் பற்கள் போன்றதான விந்தைகள் நிறைந்த உணவுச் செரிமான அசை வியக்கமாக அவற்றினுள் இயைபாக்கமடைந்துள்ளது.


### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தின் 32 ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று 11.01.2017 "முதுகலைமாணி" - தமிழ் (1ஆம் வகுப்பு) பட்டத்தினைப் பெறும் எமது வித்தியாலய ஆசிரியை



**செல்வி சுகந்தினி கந்தையா**

அவர்களை வாழ்த்துவதோடு வாழ்வில் எல்லாச் செல்வங்களையும் பெற்று சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

ஆசிரிய நலன்புரிகழகம்.
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், கைதடி.



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று10.01.2017 நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக 32 ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி (BBA) பட்டம் பெற்ற

**செல்வி த .லோகனா**

கல்வியிலும் தொழிலும் சிறப்புற்று வாழ்வில் எல்லா செல்வங்களையும் பெற்று வளமுடன் வாழ மனதார வாழ்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
மா.கெங்காதரன் குடும்பத்தினர்.






### BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும்

## After AL What Next?

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக்கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?

உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரேவழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

### Spoken English with Grammar 1 1/2 Months

100% பயிற்சி — 100% வெற்றி

சர்வதேசத்தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர் களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவரும் ஆங்கிலத்தில் உரையாட, சரளமாகப் பேசுவதற்கு இது வழிவகுக்கும்.

### Diploma In English 2 1/2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்திற் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்படுகிறது. Spoken English Course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாடநெறி.

* வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பக்கிற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாகவின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
* ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்.

| Spoken English with Grammar | | Diploma in English | |
|---|---|---|---|
| ~~Rs.10,000~~ | Rs.7,500 | ~~Rs.14,000~~ | Rs.10,000 |

**Batches Start on** Saturdays & Mondays

British College of Higher Studies
No.15, 2/1, Chirambiyady Lane (off Stanely Road), (Near Ariyakulam Junction & Above Sathosa SM) Jaffna. Tel : 021 2224550, 077 7304545


### மரண அறிவித்தல்

## ஆறுமுகம் இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், திட்டமிடல்பகுதி, மன்னார் மாவட்டச் செயலகம்)



பிறப்பு 05.02.1932 — இறப்பு 10.01.2017

வடமராட்சி, வதிரி, துலாக்கட்டையைப் பிறப்பிடமாகவும் கைதடி, நாவற்குழியை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாய் தெற்கு மாதாகோயில் லேனில் வசித்தவருமான ஆறுமுகம் இராசரத்தினம் நேற்றுக் காலமானார்.

அன்னார் ஆறுமுகம்-நாகமுத்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான சின்னையா சிவசோதி தம்பதியரின் பாசமிகு மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் ராஜேந்திரமணி (தலைவர், விலங்கியல்துறை விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக் கழகம்), குஷேந்திரமணி(ஆசிரியர், நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), ரூபேந்திரமணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானேஸ்வரன் (பொருளியல்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்), சங்கரப்பிள்ளை (குவைத்), பாலமுகுந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபராஜிதன்(மாணவன், பொறியியல்பீடம் மொரட்டுவ பல்கலைக் கழகம்), பவதாரணி(ஆண்டு-11, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மயூரஹரிஸ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ் சென்றவர்களான கதிராசிப்பிள்ளை, சின்னத்துரை, அன்னம்மா, பொன்னம்பலம், செல்லம்மா, கணபதிப்பிள்ளை மற்றும் இரத்தினம், அருளானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் இந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் குணபாலன் ஆகியோரின் சகலரும் சர்மினி, சதீஸ் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

## திருமதி தவமணி ஸ்ரீரங்கராஜா



கொடிகாமம் மடத்தடியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்து **Luzern** ஐ வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தவமணி ஸ்ரீரங்கராஜா 10.01.2017 செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற முத்துத்தம்பி -மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராஜா - தங்கம்மா தம்பதியரின் அன்புமருமகளும் ஸ்ரீரங்கராஜாவின் (சுவிஸ்) அன்புமனைவியும் ருக்சன் (சுவிஸ்), வேனுசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் நிருஜா (சுவிஸ்) வின் அன்புமாமியும் குலக் கொழுந்து (அச்சுவேலி), நவரட்ணம் (சிறுப்பிட்டி), நவநாதன் (கொடிகாமம்), சிவசோதி (கொடிகாமம்), நவசுதன் (பிரான்ஸ்), சிவகௌரி (ஜேர்மனி), நவசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராணி (கனடா), வசந்தராணி (ஆஸ்திரேலியா), செல்வராணி (உரும்பிராய்) காலஞ்சென்ற அற்புதானந்தராஜா மற்றும் ஜெயலோகராஜா (சுவிஸ்) காலஞ்சென்ற சோதிராணி மற்றும் இந்திரானந்தராஜா (சுவிஸ்), கணேசமூர்த்தி (அச்சுவேலி), சத்தியதேவி (சிறுப்பிட்டி), சிவசோதி (கொடிகாமம்), யோகநாதன் (கொடிகாமம்), பூங்குழலி (பிரான்ஸ்), ரவீந்திரன் (ஜேர்மனி), சுமதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற விஸ்வரட்ணம் மற்றும் சௌரிராஜன் (ஆஸ்திரேலியா), மகாதேவன் (உரும்பிராய்), சறோஜினிதேவி (உரும்பிராய்), பரமேஸ்வரி(சுவிஸ்), சதானந்தராஜா (பிரான்ஸ்), நந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.01.2017 திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் சுவிஸ் **Luzern** இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி,
கண்டி வீதி, கொடிகாமம்.
சுவிஸ் - 0041 774205514
கொடிகாமம் 077 6133 452

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**மேடம்:** பேச்சு, செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானம் தேவை. தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும்.


**இடபம்:** திட்டமிட்ட செயல் விரைவாக நிறைவேறும். குடும்பத்தினர் ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். லாபம் திருப்தியளிக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.


**மிதுனம்:** மனதில் இருந்த குழப்பம் மறையும். தொழில் வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.


**கடகம்:** சமயோசிதமாக செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். நற்செயல்களில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். காணாமல் தேடிய பொருள் கைவந்து சேரும்.


**சிங்கம்:** மனதில் நல்லெண்ணம் நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். தாயின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.






**கன்னி:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை சரியாகும். லாபம் சீராகும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கல்வி வளர்ச்சி பெறுவர்.


**துலாம்:** திட்டமிட்ட பணிகளை நிறைவேற்ற தாமதம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். அரசு வகையில் நன்மை கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர்.


**விருச்சிகம்:** நீண்ட எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் பன்மடங்கு உயரும். அரசியல்வாதிகளுக்கு விவகாரத்தில் அனுகூலத் தீர்வு ஏற்படும்.


**தனுசு:** சிறு செயல் கூட, பல மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் விரிவாக்க முயற்சியில் ஈடுபடுவீர்கள். லாபம் திருப்தியளிக்கும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.


**மகரம்:** உழைப்பால் வாழ்வில் உயர்வு பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் உள்ள தாமதம் விலகும். சேமிக்கும் விதத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.


**கும்பம்:** சிலரது அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறைகளை தவறாமல் பின்பற்றவும்.


**மீனம்:** பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள்.

யாருக்காகவும் எதுக்காகவும்
எப்போதுமே இந்த மூனு
விஷயத்தயும் விட்டுக் கொடுக்காதீங்க...




அன்புக்கும், அடிமைக்கும் நூல்
அளவுதான் வித்தியாசம்...



உப்புமா சொல்லாமல்
செய்தால் அடிமை...
சொல்லிட்டு செய்தால் அன்பு...



ஊரே ஒன்று சேர்ந்து வந்தாகூட ஒரு கை
பாத்திடலாம் என்று தோன்றும்போது...
ஊறப் போட்ட 4 ஜீன்ஸ்
துவைக்கனும்னு நினைச்சாலே மனசு பதறுது..

எல்லா போட்டோ கொப்பி கடைலயும்
பொண்ணுங்கள உட்கார வச்சுருக்காங்க...
அவசரத்துக்கு நிசள்சீட்ட போட்டோ கொப்பி எடுக்க
போனா அந்த பிகர்கூட
நம்ம நிசள்சீட்ட பாத்து சிரிக்குமே...



இப்படி இருந்தா நாடு எப்படி வல்லரசு ஆகும்.
டல்லரசா தான் ஆகும்...

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | | | |
| | | 9 | 6 | | | 7 | | |
| | | 2 | 1 | | | | 5 | 9 |
| | | | | 6 | | | 8 | 5 |
| | | | 9 | | 8 | | | |
| 9 | 6 | | | 4 | | | | |
| 4 | 7 | | | | 2 | 8 | | |
| | | 1 | | | 7 | 6 | | |
| | | | | | | | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 4 | 2 | 5 | 1 | 7 | 9 |
| 5 | 1 | 2 | 7 | 9 | 3 | 8 | 6 | 4 |
| 7 | 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 5 |
| 1 | 7 | 5 | 9 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 4 | 6 | 3 | 1 | 8 | 2 | 9 | 5 | 7 |
| 8 | 2 | 9 | 5 | 3 | 7 | 4 | 1 | 6 |
| 2 | 4 | 6 | 3 | 7 | 9 | 5 | 8 | 1 |
| 9 | 8 | 7 | 2 | 5 | 1 | 6 | 4 | 3 |
| 3 | 5 | 1 | 8 | 4 | 6 | 7 | 9 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

WhatsApp

முருகேசு உயரமான
மரத்திலிருந்து தவறிக் கீழே
விழுந்தார். அவரை வீட்டுக்குத்
தூக்கிச் சென்றனர்.
அங்கு வந்த டாக்டர் அவரைப்
பரிசோதித்துப் பார்த்து விட்டு,
"முருகேசு இறந்து விட்டார்"
என்றார்.
ஆனால் அடிபட்ட
முருகேசோ...
தன் கண்ணை விழித்துப் பார்த்து
"நான் இறக்கவில்லை டாக்டர்,
உயிரோடுதான் இருக்கிறேன்"
என்றார்.
அங்கிருந்த முருகேசுவின்
மனைவி, "வாயை மூடுங்கள்.
டாக்டருக்குத் தெரியாதது
உங்களுக்கு என்ன தெரியும்?"
என்று அதட்டினாள்.

# கோல்டன் குளோப்: 7 விருதுகளை அள்ளி லா லா லேண்ட் படம் புதிய சாதனை




அமெரிக்காவில் நடந்த கோல்டன் குளோப் விருது விழாவில் 7 விருதுகளை அள்ளி லா லா லேண்ட் படம் புதிய சாதனை படைத்துள்ளது.

74ஆவது கோல்டன் குளோப் விருது விழா அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் பெவர்லி ஹில்ஸ் பகுதியில் உள்ள பெவர்லி ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த விருது விழாவில் பொலிவூட் நடிகை பிரியங்கா சோப்ராவும் கலந்துகொண்டார். டேமியன் சேசல் இயக்கத்தில் ரயன் கோஸ்லிங், எம்மா ஸ்டோன் நடிப்பில் வெளியான லா லா லேண்ட் ஹாலிவுட் படம் அதிகபட்சமாக 7 விருதுகள் பெற்றது. சிறந்த படம், சிறந்த நடிகர், நடிகை, இயக்குநர், சிறந்த திரைக்கதை, இசை, பாடல் என 7 பிரிவுகளில் விருதுகளை அள்ளியது.

ஒரு படத்திற்கு 7 கோல்டன் குளோப் விருதுகள் கிடைத்துள்ளது இதுவே முதல் முறை ஆகும். முன்னதாக 1975ஆம் ஆண்டு வெளியான ஒன் ப்ளூ ஓவர் தி குக்கூஸ் நெஸ்ட் மற்றும் 1978ஆம் ஆண்டு வெளியான மிட்நைட் எக்ஸ்பிரஸ் படங்கள் 6 விருதுகள் பெற்றதுதான் சாதனையாக இருந்தது. பொலிவூட்டில் இருந்து ஹொலிவூட் சென்ற நடிகை பிரியங்கா சோப்ரா விருது விழாவில் கலந்து கொண்டு விருதை அறிவித்தார். பிரபல ஹொலிவூட் நடிகை மெரில் ஸ்ட்ரீப்புக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகள்!

**பற்களின்றி உணவு உண்ணல் எப்படிச் சாத்தியம்..?**

பறவைகளுக்குப் பற்கள் என்பது கிடையாது. ஆனாலும் அவை எப்படி தமக்கான உணவை உண்கின்றன என்ற கேள்வி எல்லோரையும் யோசிக்க வைக்கிறது. நீங்கள் எவராவது யோசித்ததுண்டா..? அநேகமாக அனைவருக்கும் குழந்தைகள் உட்பட பறவைகளுக்குப் பற்கள் இல்லை என்பது தெரிந்திருக்கும். கோழி, புறா, குருவி, வாத்து, வான்கோழி போன்ற பறவைகள் விதைகள், தானியங்கள் போன்ற தானகடின ஆகாரங்களை உணவாக உட்கொள்வதைப் பார்த்திருக்கிறோம். அவைகள் பற் களின் உதவி கொண்டு கூழாக்கிச் சாப்பிடாது கடினமான உணவு வகைகளை எப்படி ஜீரணிக்க செய்கிறது..? இதற்கான பதிலாக கிடைப்பது உடற் கூறின் படி பறவைகளின் வயிற் றின் கீழ்ப் பகுதியில் அமைந்துள்ள விசேட அமைப்பான ஜிசாட் என்னும் பகுதியாகும். நாம் உணவை வாயில் இட்டு பற்களின் உதவி கொண்டு கழத்து, அதனை அரைத்து கூழாக்கி விழுங்குவதற்கு இணையான தொழிற்பாட்டையே இவை செய்வதாக ஆய் வாளர்கள் கூறுகின்றனர். உணவைக் கூழாக்கிச் செரிமானத்துக்குரிய தான நிலைக்கு தயார்

(24ஆ ஆம் பக்கம் பார்க்க)


## அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

இன்று (11.01.2017) புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் 32 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி MED பட்டம் பெறும் எமது பாடசாலை ஆசிரியை



**திருமதி கயல்விழி உதயசந்தர்**


பலகலை வாழும் பாரினிலே
முதுகலை பட்டம் பெற்ற பெண்மணியே
கலைஞானம் கவிஞானம் மேலுமே
தமிழ் ஞானம் கூட ஒரு சேரவே சோதனை பல கடக்கும் பெண்களிலே
சாதனை புரியும் மங்கை நீயும் பட்டங்கள் மேலும் பெற்று
பெருமைகள் உனைச் சூழ இனிதே வாழ்க பல்லாண்டு

BEST WISHES

யா/கைதடி, நுணாவில் அ.த.க. பாடசாலை,
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி தனபாக்கிய இலட்சுமி அழகரத்தினம்**



அன்னை மடியில்
16.09.1941

ஆண்டவன் அடியில்
12.12.2016

எமது குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து

எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகை புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா!

19, சிவன் புதுவீதி, நல்லூர். (J7590)(12.16) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி




எமது கழக உறுப்பினர்
**Lion இராஜகோபால் சாருஜன்**
அவர்களின் தீடீர் இழப்பால்
அதிர்ச்சியடைந்தோம்.

அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Lions Club of (Kayts) Theevagam. (ஜே..7575) (13.18)
லயன்ஸ் கழகம், தீவகம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் சச்சிதானந்தம் கஜந்தன்**

மலர்வு 24.02.1985 — உதிர்வு 01.12.2016


கடந்த 01.12.2016 அன்று இயற்கை அனர்த்தத்தினால் உதிர்ந்த எமது அன்புச் செல்வன் அமரர் ச.கஜந்தன் (சுகி) அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (12.01.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சப்பச்சிமாவடி சாவகச்சேரியில் உள்ள அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

அமரரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
49, வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கிருஸ்ணன் இராசலிங்கம்**

மலர்வு 26.04.1955 — உதிர்வு 12.12.2016

வாழ்க்கை என்னும் பாதையினிலே
எம்மோடு பயணித்த அப்பாவே!
இன்றுடன் 31 நாள்கள் முடிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு விலகாது

உம்மையே உலகமென உறுதியாய் நாமிருக்க
எம்மைப் பாதியிலே தவிக்கவிட்டு
ஏன் விண்ணுலகம் நிரந்தரமாய் விரைந்தீரோ?
31 நாள்கள் என்ன 31 வருடங்கள் ஆனாலும்
உம் நினைவாய் வாழ்ந்திடுவோம்
உங்கள் ஆன்மா ஆண்டவனின் திருவடியில்
அமைதி பெற வேண்டுகின்றோம்.

தவசிகுளம், மிருசுவில் (C) 27681)(12.18)
**குடும்பத்தினர்.**
077 004 1456

## உ ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி இராஜரத்தினம்**


| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 21 | 04 |
| 09 | 01 |
| 1948 | 2015 |

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குலப்பண்பு பேணி - நாம்
நலமாய் வாழ்ந்திட
- நல்வழிகாட்டிய
எம் குடும்பத்தின் ஒளிச்சுடரே
- நீங்கள்
எமைவிட்டுப் பிரிந்து
ஈராண்டுகள் சென்ற பின்பும்
இன்னும் உங்கள் நினைவினிலே
தவிக்கின்றோம் இங்கே
காலன் உமை அழைக்கையில்
எமைக் கேளாது நீங்கள்
சென்றிருந்தாலுமே
காலகாலங்கள் முடிவினிலும்
நாம் தோய்ந்திருப்போம்
உங்கள் நினைவினிலே

**குடும்பத்தினர்.**
"விஷ்ணு கோட்டம்"
A9 வீதி, முல்லையடி, பளை.
(J.7556) (13.18)

## உங்கள் பாதக்கமலத்தில் எங்கள் 14 ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

அமரர்
**சபாபதி நாராயணன்**
(இய்வுபெற்ற கிராமசேவகரும் சமாதான நீதவானும்)



அன்னை மடியில்
16.07.1943

ஆண்டவன் அடியில்
11.01.2003

அழகிய நினைவுகள்
அழியவில்லை மனதைவிட்டு அப்பா
வலி நிறைந்த நினைவுகள்
வலிக்க வைக்க மறப்பதில்லை அப்பா

**மனைவி, பிள்ளைகள்**
பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


**Talent Search 2017 - for the Music Lovers of any age**

This competition is open to students & adults of Jaffna peninsula. Entry forms available at SJC library or Jaffna YMCA at 50/= each. Check FB: **www.facebook.com/talentsearch. jaffna** or call **0777292085** A Free Workshop on Thursday 12th January at the Technology Building Auditorium (3rd floor) of St.John's College, Jaffna From 9am onwards.



## மரண அறிவித்தல்

### குணசிங்கம் அம்பிகைச்செல்வன்



யாழ்.ஆனைக்கோட்டை. மானிப்பாயைப் பிறப்பிடமாகவும். 306/7. நாவலர் வீதி. ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட குணசிங்கம் அம்பிகைச்செல்வன் 09.01.2017 அன்று காலமானார்.

அன்னார் குணசிங்கம் - சறோஜினிதேவி தம்பதிகளின் இளைய மகனும். தமிழினியின் (பாரதி) அன்புக் கணவரும், காவியாவின் பாசமிகு தந்தையும்.காலஞ்சென்ற கணேசலிங்கம் - சத்தியபாமா தம்பதிகளின் மருமகனும், சுமித்திரா. நர்மதா, பங்கையச்செல்வன், காலஞ்சென்ற அருந்தவச்செல்வன் ஆகியோரின் அன்புச் சகோதரனும். சிவகுமார். ரவிதாசன். அஜந்தா. தமிழ்ச்செல்வி. தமிழ்மாறன். தமிழ்ச்செல்வன். தமிழரசி ஆகியோரின் மைத்துனரும். ரஜீவ்ஆனந்தின் சகலனும்.சீருஜா. தர்மினி, கீர்த்திகன்.தர்சிகன் ஆகியோரின் மாமனாரும், மதுமிதா, மாதுளன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2017) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.306/7, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.**

**தகவல்: குடும்பத்தினர்.** (J/7578)(11,17,18)

**077 281 8817, 077 962 3745**


# நாராய் நாராய்.!



காலைச் சூரிய உதயத்தின்போதும் மாலையில் விரியும் அந்தியின் போதும் பொன்னை வாரி இறைத்தது போல வானம் தங்க நிறம் தரித்துக் காணப்படும். நகர வாழ்க்கை ஓட்டத்தில் விழுந்துவிட்ட பலரும் சூரிய உதயத்தை ஒரு போதும் பார்ப்பதேயில்லை. அதிகபட்சம் அவர்கள் மாலை நேரத்தை பார்ப்பார்கள் என்று நம்புகிறேன். இப்படி பொன் வாரி இறைக்கப்பட்ட காலை, மாலை நேரங்கள் நமக்குள் சக்தியை ஏற்றி புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் தன்மை கொண்டவை. இப்படிப்பட்ட தருணங்களை மறக்க முடியாத அனுபவமாக மாற்றிவிடும் பண்பு பறவைகளிடம் உண்டு.

உண்மையில் பறவைகளிடம் இருந்து பல விசயங்களை மனித இனம் கற்றுக் கொண்டது."பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்" என்ற திரைப்பாடல் வரிகள் இதனைப் பதிவு செய்துள்ளது. உண்மையில் இயற்கை சீராக இயங்குவதற்கான செயற்பாடுகளில் பறவைகள் பெரும் பங்காற்றுகின்றன. அந்த செயற்பாடுகள் குறித்து இதுவரை அதிக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை.

மக்களின் வாழ்க்கையுடன் பறவைகள் இரண்டறக் கலந்துள்ளன. இயற்கை மீதும் -பறவைகள் மீதும் பண்டைய காலம் முதல் தமிழர்கள் காட்டி வந்த ஆர்வம் பல்வேறு வகைகளில் பதிவாகியுள்ளது. தற்போது உள்ளதைப் போல சுற்றுச்சூழல் விழிப்புணர்வோ, அறிவியல் வளர்ச்சியோ இல்லாத காலமது. தமிழர்களின் வாழ்க்கையில் இருந்து இயற்கைக் கூறுகளை பிரிக்க முடியாத காலங்களாக அவை இருந்து வந்தன.

அதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக சத்திமுற்றப் புலவரின் நாராய், நாராய் என்று தொடங்கும் சங்கப் பாடலை குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியும்.

*"நாராய், நாராய், செங்கால் நாராய்.*
*பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன*
*பவளக் கூர்வாய் செங்கால் நாராய்!*
*நீயும் நின்பெடையும் தென்திசைக் குமரி ஆடி*
*வடதிசைக்கு ஏகுவீர் ஆயின் - எம்மூர்*
*சத்திமுத்தம் வாவியுள் தங்கி.....!"*

என்று அமைகிறது அந்தப் பாடல்.


இந்தச் செய்யுள் வரிகளில் சிவப்பு கால்கள், பவளச்சிவப்பு நிறத்துடன் பனங்கிழங்கைப் பிளந்ததுபோல நீண்டு காணப்படும் அலகைப் பற்றி புலவர் வர்ணிக்கிறார். இந்தக் குறிப்புக்களைக் கொண்டு பார்க்கும்போது, புலவர் குறிப்பிடும் பறவை செங்கால் நாரையாகத்தான் இருக்க வேண்டும். செங்கால் நாரையைத் தெளிவாக வர்ணிப்பது மட்டுமின்றி அப்பறவையின் இடப்பெயர்வு பண்புகளையும் புலவர் காட்சிப்படுத்தியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் குளிரால் பனி போர்த்தப்படும்போது உணவு தேடி பல பறவைகள் இந்தியாவுக்கும்-இலங்கைக்கும் வருகின்றன. ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்தில் பறவைகள் மேற்கொள்ளும் இந்த இடப்பெயர்வு வலசை போதல் என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. இந்த வலசை போதலை மேற்கண்ட செய்யுள் 18 நூற்றாண்டுகளுக்கு முன்பே பதிவு செய்துள்ளது. இயற்கை வரலாற்று குறிப்புகளை புலவர்கள் உவமையாகப் பயன்படுத்தியுள்ளனர். அந்தச் செய்யுளின் முதல் ஆறு வரிகளில் இயற்கையின் வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆக, முன்பே இது பற்றியதாக அந்தச் சமூகத்தில் விழிப்புணர்வு இருந்திருக்க வேண்டும். பறவைகளின் பெயர் முதல் வலசை போகும் பண்பு வரை பல்வேறு அம்சங்களை பண்டைத் தமிழர்கள் கூர்ந்து நோக்கி, பதிவு செய்துள்ளனர் என்பது புலனாகிறது.

மக்கள், பறவைகள் இடையிலான உறவு என்பது பண்டை காலம் தொட்டே தமிழர் பாரம்பரியங்களோடு உறுதியான பிணைப்பாக தொடர்ந்து வந்துள்ளமையும் தெளிவாகிறது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் கந்தன் கிருஷ்ணர்

**தோற்றம்** 30.04.1930

**மறைவு** 12.12.2016

சூரியனை இழந்ததுவோ சுற்றிவரும் இப்பூமி
தெய்வமதை இழந்ததுவோ திருக்கோவில் எம் குடும்பம்
வாரி நிதம் வழங்கி வந்தீர், வாயார உச்சரித்தீர்
வண்ணமயில் வாகனனை வணங்கிநிதம் வாழ்ந்து வந்தீர்
சுந்தரமாய் நின் வதனம் சுடரொழியாய் வழிகாட்ட
சொந்தமெல்லாம் வாழ்ந்து வந்த சொர்க்கம் இங்கு தொலைந்ததையா
ஒன்பது நல் முத்தெடுத்து ஒருநாளும் பிரியாத
அன்றில் இரு பறவைகளை ஆர்பிரித்தார் ஐயையோ
வாழ்வு என்றால் இதுவென்று வழிகாட்டி வைத்துவிட்டு
வானுறையும் தெய்வமதாய் நிறைந்து விட்ட எம் தந்தை
காண்பதினி எந்நாளோ? கலங்குகின்றோம் ஐயா....
குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தில் விளங்கி நின்ற
உங்கள் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

2016.12.12 அன்று எமது குடும்பத் தலைவர் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்த அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (11.01.2017) புதன்கிழமை காலை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

நாவற்காடு.
அச்சுவேலி தெற்கு. அச்சுவேலி.

**குடும்பத்தினர்.**



ICBT CAMPUS JAFFNA

www.icbt.lk



**CIVIL ENGINEERING QUANTITY SURVEYING**

Qualified Lecture Panel | Library, Laborato[...] Modern Lecture Hall facilities
Cafeteria | Recreation Area | Student Friend[...] Environment | Easy Payment

**Accredited by:**
Cardiff Metropolitan University, UK | European Quality Assurance Agency | NAARIC

580,Hospital Rd., Jaffn[...] | Tel: -0214 777 888

0770 746 553 | 0769 289 784


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ரவிராஜ்...

விடுதலை செய்யப்பட்டதற்கு எதிராக, மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுக் காலை மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டத் தரப்புச் சட்டத் தரணியான, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீட்டைச் செய்துள்ளார்.

'விசாரணைத் திகதி குறிக்கப்படவில்லை. சட்டவிரோதத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும்போது மீள் விசாரணையை ஏற்படுத்துமாறு கோரியுள்ளோம்' என்று எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீடு செய்த பின்னர் குறிப்பிட்டார்.

2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பு நகரப் பகுதியில் வைத்து நடராஜா ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். வழக்கு விசாரணை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதமே நடைபெற்றது. கடற்படைப் புலனாய்வாளர்கள் மூவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கில் அரச சாட்சியாக மாறியவர் குற்றவாளிகளை மன்றில் அடையாளப்படுத்தியிருந்தார். இருப்பினும் சிறப்பு அறங்கூறும் சபை (ஜூரி), கடற்படைப் புலனாய்வாளர்கள் குற்றமற்றவர்கள் என் அடையாளப்படுத்தி விடுதலை செய்திருந்தது.

இதற்கு எதிராகவே, நடராஜா ரவிராஜின் மனைவி சார்பில், நேற்று மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. (த-5)

## 2017 நடுப்...

தயாராக வைத்துக்கொள்ளுங்கள். இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்தகமே.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் அரசுக்கு வழங்கிய ஐந்து வருடங்களில் முதல் இரண்டு வருடங்களும் தோல்வியில் முடிவடைந்துள்ளன. இனி வரும் வருடங்களும் அவ்வாறேதான் அமையப் போகின்றன.

கடன்களை அடைக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டு நாட்டின் வளங்கள் அனைத்தையும் அரசு விற்பனை செய்து கொண்டு வருகின்றது. வளங்களை விற்பதன் மூலம் கடன்களை அடைக்க முடியுமா? கொள்ளையடிப்பதன் மூலம் கடன்களை அடைக்க முடியுமா?

இந்த அரசு ஜனவரியில் ஆட்சிபீடமேறி அடுத்த மாதமே ஊழல், மோசடியில் இறங்கி விட்டது. அதுதான் மத்திய வங்கி பிணைமுறி மோசடி. அந்தப் பெரிய மோசடியால் இந்த நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அதன் சுமைகள் இந்த நாட்டு மக்களின்மீது தான் சுமத்தப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து மோசடிகள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் அமைச்சர்கள் வாயைத் திறக்காதிருப்பதற்காக அவர்களுக்கு வாகனங்கள் உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்த அரசால் இனிமேலும் இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாது. இந்த ஆண்டு நடுப் பகுதியில் நடையைக் கட்ட வேண்டியதுதான். இப்போதே பெட்டி, படுக்கைகளை தயார் நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். நடையைக் கட்டுவதற்குத் தயாராக இருங்கள். ஆட்சி கவிழ்வது நிச்சயம் - என்றார். (த-5)

## வீரவன்ச...

விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மகிந்த ஆட்சியின்போது வீடமைப்பு மற்றும் கட்டட நிர்மாணத்துறை அமைச்சுப் பதவி விமல் வீரவன்சவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச் சராக இருந்த காலப் பகுதியில் அரச வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்று முன் வைக்கப்பட் டுள்ள முறைப்பாடு சம்பந்தமாக வாக்கு மூலம் பெறுவதற்காகவே எவ்.சி.ஐ.டிக்கு அவர் நேற்று அழைக்கப்பட்டிருந்தார். விமல் வீரவன்ச விரைவில் கைது செய்யப்படவுள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆரூடம் கூறியிருந்த நிலையில், விமல் விசாரணைக்கு அழைக்கப்பட்டமை மகிந்த அணி யான பொது எதிரணி உறுப்பினர்களுக்கிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது.

விமலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மகந்த அணி உறுப்பினர்களும், விமலின் ஆதரவாளர்களும் நேற்றுக் காலை முதல் எவ்.சி.ஐ.டி. வளாகத்தில் திரண்டிருந்தனர். காலை 9.40 மணியளவில் தனது மனைவி, பிள்ளை சகிதம் காரில் வந்திறங்கினார் விமல். பௌத்த மத வழிபாட்டுடன் பிரித் நூல் கட்டப்பட்ட பின்னர் அவர் விசாரணைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

விசாரணை அறைக்குள் அவர் செல்லும் போது, 'எங்கள் தலைவர் வாழ்க! எங்கள் தலைவர் வாழ்க!!' என்று விமலின் விசுவாசிகள் கோசம் எழுப்பினர்.

வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். இதனால் எவ்.சி.ஐ.டி. முன்பாகப் பெரும் பதற்றம் ஏற்பட்டது. விமலின் ஆதரவாளர்கள் பொலிஸ் வாகனத்தை மறித்துப் பெரும் போராட்டம் நடத்தினர். அந்தப் பகுதியில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. பெரும் சிரமத்துக்கு மத்தியில், விமல் வீரவன்சவைப் பொலிஸார் அங்கிருந்து நீதிமன்றுக்குக் கொண்டு சென்றனர். அவரை எதிர் வரும் 24 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (த-5)

## என்னைப்...

வீரவன்ச தெரிவித்தார். எவ்.சி.ஐ.டியில் விசாரணைக்கு முன்னிலை யாகுவதற்கு முன்பாகத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிரணி உறுப்பினர்களைச் சிறையில் அடைத்து, மக் கள் போராட்டத்தைத் திசை திருப்பலாம் என்று நல்லாட்சி அரசு தப்புக் கணக்குப் போடுகின்றது. எது எப்படியோ, இந்த ஆட்சியை தோற்கடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

என்னை விளக்கமறியலில் வைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தகவல் கிடைத்துள்ளது. இதன் காரணமாகவே ஆதரவாளர்கள் திரண்டுள்ளனர். நான் உள்ளிட்ட சிலரைக்கைதுசெய்யுமாறு ஆலோசனை வழங்கிவிட்டே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றுள்ளார். எதிரணி உறுப்பினர்களை அரசு வேறு கோணத்தில் எடை போட்டுப் பார்க்கின்றது. எம்மை நூறு சிறைச்சாலைகளில் அடைத்தாலும், அரசுக்கு எதிரான மக்கள் எழுச்சியைத் திசை திருப்பமுடியாது. அதைச் செய்வதற்கு அரசு பெரும்பாடு படுகின்றது. எது எப்படியே அரசைத் தோற்கடிக்கும் நாள் தொலைவில் இல்லை - என்றார். (த-5)

## யாழ்.பஸ்...

மையப் பேருந்து நிலையத்துக்கும் இடைப்பட்ட காணி என்பவற்றைப் பெற்றுத் தருமாறு, யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினால் ஜனாதிபதிக்கு நேரடி யாகக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலரால், வைத்திய சாலை விரிவாக்கத்துக்குத் தேவையான காணிகளைச் சுவீகரித்து அதனைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். மாவட்டச் செயலகத்துக்குக்கடிதம்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப் படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய பிரிவுகளை நகருக்கு வெளியே கொண்டு செல்லவேண்டும் என்று தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில், யாழ். நகரின் மையப் பகுதியில் வைத்தியசாலை விரிவாக்கத்துக்குக் காணி கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அரசியல்...

விடுதலையைத் தாமதப்படுத்தவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கொழும்புச் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. 38 தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு நடைபெற்று வந்தன. இந்த வழக்குகளை உடனடியாகக் கோமாகம நீதிமன்றிற்கு மாற்ற முயற்சிகள் நடைபெறுகின்றன. கோமாகம பிரதேசத்துக்கு வழக்குகள் மாற்றப்படுமானல் அரசியல் கைதிகள் பல நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்.

கொழும்பில் இடம்பெறும் வழக்குகளுக்காகப் பிரபல சட்டத்தரணிகள் மிகக் குறைந்த தொகையுடன் முன்னிலையாகின்றனர். கோமாகம நீதிமன்றுக்குச் செல்வதற்கே ஒரு மணிநேரம் போதாது. அங்கு செல்லும் சட்டத்தரணிகள் கொழும்பு வழக்குகளை இழக்க நேரிடும். கோமாகமப் பகுதி தனித்த சிங்களப் பகுதியாகவே காணப்படுவதனால் அரசியல் கைதிகளின் வழக்குகளில் முற்படும் சட்டத்தரணிகளுக்கும் புலி முத்திரையே குத்தப்படும். இதனால் கைதிகளுக்காக முன்னிலையாகச் சட்டத்தரணிகள் பின்னடிப்பர். அரசியல் கைதிகளின் பாதுகாப்பும் கேள்விக்குறிக்குள்ளாகும் நிலமையே கானப்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு 38 கைதிகளினதும் வழக்கு விடயத்தை கோமாகம நீதிமன்றுக்கு மாற்றம் செய்வதைச் சட்டமா அதிபர் மீள்பரிசீலனை செய்யவேண்டும் - என்றார். (த-5-101)

## சந்திரிகாவின்...

பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

எனது ஆட்சியில் வேண்டாமெனக் கூறிய அரசமைப்பு யோசனையையே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இப்போது கொண்டுவரவுள்ளார். அன்று நான் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்து விடுவேன் என்று பயந்தனர். இப்போது அவர்களை ஆட்சிக்கு கொண்டு வரவும், தலைமைப் பதவிக்கு நியமிக்கவும் மற்றும் தலைமை அமைச்சர் பதவியையும் பெற்றுக் கொடுக்கவும் மற்றுமொருவரை ஜனாதிபதியாக்கவும் நான் உதவியுள்ளேன். அன்று நான் கூறியதை இப்போது இவர்கள் கூறுகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் அடங்கலாக அந்தக் கட்சியை சேர்ந்தபலர் இப்போதுகூறுகின்றவிடயம், அன்று எனது அரசியல் தீர்வுக்கு ஆதரவு தெரிவித்திருந்தால் அது நன்றே எனச் சொல்லித் தங்களின் தவறை ஏற்றுக் கொள்கின்றனர். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நல்லிணக்கம் தொடர்பாக நிகழ்ச்சிகளை முன்னெடுத்திருந்தேன். 1994 ஆம் ஆண்டு டிசெம்பர் முதல் இலங்கையில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம். அரசமைப்பு மற்றும் நல்லிணக்க விடயங்கள் தொடர்பாக மக்களிடம், பல்கலைக் கழக மாணவர்களைப் பயன்படுத்திக் கருத்தறிவு நடத்தினேன்.

இதன்போது 23.3 வீதமான சிங்கள மக்களே போரை நிறுத்திப் பேச்சுகள் நடத்தி அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமெனக் கூறியிருந்தனர். மக்களிடையே தெளிவுபடுத்தல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வெண் தாமரை இயக்கத்தை ஆரம்பித்து அதனை முன்னெடுத்தோம். அந்தக் காலப்பகுதியில் எமது அரசமைப்புத் திருத்தத்தின் வரைவும் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது. இதன்பின்னர் 67 வீதத்துக்கும் அதிகமான சிங்கள மக்கள் அதற்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருந்தனர். அதில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது இருப்பதை விடவும் விரிவான அதிகாரப் பகிர்வு இருந்தது. எவ்வாறாயினும் அன்று அடிப்படைவாதிகள் இருக்கவில்லை. பின்னர் அடிப்படைவாதிதலைவரானதால் அந்த நிலமை மாறியுள்ளது. மக்களைச் சரியாகத் தெளிவுபடுத்தினால் எதனையும் முன்னெடுக்க முடியும் - என்றார். (த-5)

## பிளாஸ்ரிக்...

நோயாளர்களைப் பார்வையிட வரும் பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் வைத்தியசாலை வளாகத்துக்குள் பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகள் மற்றும் உணவு பொதியிடப் பயன்படும் பொலித்தீன் வகை (லஞ்சீற்)தாள்கள் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத பைகளை (துணியால் செய்த) பாவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உணவு கொண்டு வருவதற்கு உணவு பொதியிடப் பயன்படும் பொலித்தீன் வகை (லஞ்சீற்) தாள்களுக்கு மாற்றீடாக சாப்பாட்டுப் பெட்டிகள், வாழை இலை, வாழை மடல் போன்ற இயற்கையான சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருள்களைப் பயன்படுத்த வேண்டும்.

பிளாஸ்ரிக் குடிதண்ணீர்ப் போத்தல்கள் வைத்தியசாலைக்கு கொண்டு வருவதை முடியுமானவரை தவிர்க்கவும். வைத்தியசாலையில் சுத்தமான குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்கள், பிளாஸ்ரிக் கோப்பைகள், குடிபானக் குழாய் போன்றவற்றின் பாவனையை முடியுமானவரை குறைத்து நீர் வடிகட்டிகள், மட்பாத்திரங்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், செரமிக் கோப்பைகள் போன்றவற்றைப் பாவிக்கவும்.

மேலே குறிப்பிட்ட விடயங்கள் அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். பொதுமக்களது பொதிகள் யாவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5-ரி)

## விவசாயிகளுக்கு...

நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. எதிர்பாராத வறட்சி காரணமாக பெரும்போக நெற்செய்கை பொய்த்துப் போய்விட்டது. நெல் வயல்கள் பல இடங்களில் கருகிக்கிடக்கின்றன. விவசாயிகள் மீள முடியாத நட்டத்தில் வீழ்ந்திருக்கின்றார்கள். நொந்து போயுள்ள எமது மாகாணத்தின் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு கொழும்பு அரசு நட்ட இழப்பீடு வழங்க வேண்டும் என்று பிரேரணையை முன்மொழிந்தார் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன்.

இதனைக் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை வழிமொழிந்தார்.

வடக்கு மாகாணத்தை மாத்திரம் வறட்சி பாதிக்கவில்லை. எல்லா இடங்களிலும் இதன் பாதிப்பு உணரப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் ஏற்பட்டுள்ள இந்த இடர் நிலமையைக் கவனத்தில் கொண்டு, வறட்சி நிலை இலங்கை முழுவதிலும் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். சில இடங்களில் குடிதண்ணீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று உறுப்பினர் சு.பசுபதிப் பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இது தொடர்பில் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிகின்றேன் என்று சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன் தெரிவித்து, பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படுவதாக அறி வித்தார். (வ-5-8)

## மதில்...

மதில் பாய்ந்து பிறிதொரு வாக னத்தில் சென்றார். அவரது வாகனம் மோதியதால் ஆசிரியர் ஒருவர் காயமடைந்ததாகப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் குற்றஞ் சாட்டினர்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்பாக ஆசிரியர்கள் நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரனைச் சந்தித்துத் தமக்கு உரிய தீர்வைத் தருமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். மாலையாகியும் ஆசிரியர்கள் அமைச்சு அலுவலகத்தை விட்டு வெளியேறவில்லை. மாலை 5 மணியளவில் கல்விச் செயலர் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார். அவரது வாகனத்தை சாரதி நகர்த்தியபோது ஆசி ரியர்கள் தடுத்ததால் ஆசிரியர் மீது வாகனம் முட்டியது. செயலர் நடந்து முதன்மை வாயிலை நோக்கிச் சென்றபோது, அங்கு ஆசிரியர்கள் முதன்மை வாயில் கேற்றைப் பூட்டினர். அதனால் மதில் பாய்ந்து வீதியில் குதித்த செயலர்தான் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுத் தயாராக இருந்த காரில் ஏறிப் புறப்பட்டார். அதனையும் ஆசிரியர் ஒருவர் தடுக்க முற்பட்டபோது அவரது கை காரில் அடிபட்டதாகவும், அதனால் அவர் காயமடைந்ததாகவும் ஆசிரியர்கள் தெரிவித்தனர். அங்கு பொலிஸார் நின்றிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கிருந்து வெளியேறிய செயலாளர் இ.இரவீந்திரன், ஆசிரியர் ஒருவர் தன் னைத் தாக்கியதாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமாலை முறைப்பாடு செய்தார்.

வடக்கு மாகாண பதில் முதலமைச்சர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்று மாலை போராட்டம் இடம்பெற்ற இடத்தில் ஆசிரி யர்களைச் சந்தித்தனர். அவர்களுடன் கலந்துரையாடி மேற்கொண்டு கலந்துரையாடுவதற்காக கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்துக்கு ஆசிரியர்களை இன்று மதியம் வருமாறு கூறப்பட்டதனால் போராட்டத்தைக் கைவிட்டு ஆசிரியர்கள் சென்றனர்.

(மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

(வ-4,101,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

*யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்*

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் மதீனா அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதவுள்ளது.

*பாடசாலைகளின் கால்பந்தாட்டம்*

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 20 வயதுப் பிரிவு அணிகளுக்கான (ஆண்களுக்கான) விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. தொடர்ந்து பி.ப 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டு. மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

*ஆவரங்கால் இந்துவின் அரையிறுதிகள் இன்று*

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 'ஏ', 'பி' என இரு பிரிவாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிகள் இன்று நடைபெறவுள்ளன. 'பி' பிரிவு அணிகளுக்கான முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது.
(ம-23-108-422)



### எவ்.ஏ. கிண்ணத் தொடரில்

# சென். அன்ரனிஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 11
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து புத்தூர் எவெரெஸ்ட் அணி மோதியது. ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் முதற் கோலைப் பதிவுசெய்தார் மதுசன். அஜித்குமார் 16 ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலைப் பதிவு செய்ய முதற் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது சென். அன்ரனிஸ். இரண்டாவது பாதியின் 7 ஆவது, 13 ஆவது நிமிடங் களில் மதுசன் கோல்களை அடுக்கினார். எவரெஸ்ட் அணியால் பதில் கோல் எதையும் பதிவு செய்ய இயலவில்லை. முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# பிங்பொங் அணி வசம் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜன. 11
வடமராட்சி கிழக்கு பிரதேச கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் அம்பன் பிங்பொங் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அம்பன் பிங்பொங் அணியை எதிர்த்து குடத்தனை செல்வா அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய குடத்தனை செல்வா அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாந்தன் 23 ஓட்டங்களையும், நிரேஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிங்பொங் அணியின் சார்பில் சயந்தன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிங்பொங் அணி ஒரு இலக்கை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக சயந்தன் 19 ஓட்டங்களையும், சுதர்சன் ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.
(ம-422)

# அம்பாள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 11
உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் சுன்னாகம் அம்பாள் அணி சம்பியனானது.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுன்னாகம் அம்பாள் அணியை எதிர்த்து மல்லாகம் சிறுமுருகன் அணி மோதியது. இதில் சுன்னாகம் அம்பாள் அணி 12:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

# போராடி வென்றது மனோகரா

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா வெற்றிபெற்றது.
இளைஞரின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், மனோகரா அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. இதில் மனோகரா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பயிற்றுனர்கள் ஆகியோருக்கான வதிவிட பயிற்சி முகாம், யாழ். துரையப்பா [illegible]லிருந்து வருகைதந்த வளவாளர்கள் பயிற்சிகளை வழங்கினர். (ம-23)

# யங்ஹென்றிஸைச் சமன்செய்து அரையிறுதிக்கு விண்மீன் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 11
குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
குறிஞ்சிக்குமரனின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறக்கூடிய நிலை இருந்தது. இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்புத் தன்மையும் இருக்கவே செய்தது.
ஆட்டத்தின் 15ஆவது மற்றும் 22ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸின் மதுசன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்தார். 25 ஆவது நிமிடத்தில் அனோஜனும் கோலொன்றைப் பதிவுசெய்ய 3:0 என்று ஆதிக்கம் செலுத்தியது யங்ஹென்றிஸ். விண்மீனின் றேசிகன் கோலொன்றைப் பதிவுசெய்ய முதற் பாதியின் முடிவில் 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது யங்ஹென்றிஸ்.
இரண்டாம் பாதியில் விண்மீன் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 4 ஆவது நிமிடத்தில் டேமியன் மூலமும் 12ஆவது நிமிடத்தில் உதய சாந் மூலமும் கோல்கள் பதிவாக நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் சரிவில் இருந்து மீண்டு, 3:3 என்று சமன்செய்தது விண்மீன். ஏற்கனவே பெற்றிருந்த புள்ளிகளின் அடிப்படையில் விண்மீன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகிறார் ரூட்

இந்தியாவுக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்கள் கொண்ட தொடரில் ரூட் களமிறங்குவார் என்று அறிவிக்கப்பட்டது.
இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையிலான தொடர்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.
முடிவடைந்த டெஸ்ட் தொடரில் இந்தியா 4:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. அடுத்ததாக இரு அணிகளுக்கும் இடையில் ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது.
ஜனவரி 15 ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தொடரில் ரூட்டின் பங்குபற்றல் சந்தேகத்துக்குள்ளானது. அவரது மனைவி கர்ப்பமாக இருந்தமையால் இந்தியாவுக்கு எதிராக ரூட் களமிறங்கார் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.
ரூட் - கேரி தம்பதிக்கு தற்போது ஆண் குழந்தை பிறந்துள்ளதால் இந்தியாவுக்கு எதிராக ரூட் களமிங்குவது உறுதியானது. இன்று அல்லது நாளை ரூட் இந்தியாவுக்குச் செல்லலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# கங்குலிக்கு மிரட்டல்

இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலிக்கு மர்ம நபர்களால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு கடிதம் ஒன்று நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டது.
கங்குலி எதிர்வரும் 19 ஆம் திகதி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கிறார். குறித்த நிகழ்வில் பங்கேற்றால் கொலை செய்யப்படுவார் என்று குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டது. கடிதத்தை எவர் அனுப்பியது என்பது தொடர்பில் இன்னும் அறியப்படவில்லை. (ம)





# பிபா விருதும் ரொனால்டோ வசப்பட்டது

பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் (பிபா) கடந்த வருடத்துக்கான சிறந்த வீரராக ரொனால்டோ தெரிவு செய்யப்பட்டார்.
மூவரை உள்ளடக்கிய இறுதிப்பட்டியலில் போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ, ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி, பிரான்ஸ் அணியின் நட்சத்திர வீரர் கிரீஸ்மன் ஆகியோர் இருந்தனர். மெஸ்ஸி, கிரீஸ்மன் இருவரையும் பின்தள்ளி விருதை வென்றார் ரொனால்டோ.
ரொனால்டோவுக்கு 34.54 சத்வீத வாக்குகளும், மெஸ்ஸிக்கு 26.42 சதவீத வாக்குகளும், கிரீஸ்மனுக்கு 7.53 வீத வாக்குகளும் கிடைத்தன. கடந்த வருடத்துக்கான தங்கப் பந்து விருதையும் ரொனால்டோவே வென்றார்.
போர்த்துக்கல் அணி கடந்த வருடம் யூரோ கிண்ணத் தொடரைக் கைப்பற்றியது. அந்த அணியின் கால்பந்து வரலாற்றில் ஆகச் சிறந்த அடைவு இதுவே. ரொனால்டோ, கழகங்களைப் பொறுத்தமட்டில் ரியல் மட்ரிட்டுக்காக விளையாடி வருகிறார். அந்த அணி கடந்த வருடம் சம்பியன் லீக் தொடரில் கிண்ணம் வென்றது. இந்த இரு தொடர்களிலும் தனது அணிகளை சம்பியனாக்கிப் பார்ப்பதில் ரொனால்டோ அளப்பெரும் பங்காற்றினார். இதனை அடுத்தே அவருக்கு இந்தக் கௌரவம் கிடைத்தது. (ம)

# டோனியின் சாதனைகள் மகத்தானவை மனம் திறந்தார் அதிரடி வீரர் யுவராஜ்




இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனியின் தலைமைத்துவச் சாதனைகள் மகத்தானவை என்று இந்திய அணியின் சகல துறை வீரரான யுவராஜ் தெரிவித்தார்.
மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைவராக இருந்த டோனி கடந்த 2015 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார். இருப்பினும் ரி-20. மற்றும் ஒருநாள் அணிகளின் தலைவராக அணியில் நீடித்து வந்தார். கடந்த புதன்கிழமை இரவு தனது ஓய்வு முடிவை அறிவித்தார். அவரது தலைமைத்துவம் தொடர்பில் பலரும் பல்வேறு விதமாக கருத்துத் தெரிவித்து வரும் நிலையில் யுவராஜ் தனது கருத்தைப் பகிர்ந்தார்.
டோனியின் தலைமையின் கீழ் தான் நாம் ரி-20 உலகக்கிண்ணத்தையும், ஐ.சி.சி. ஒருநாள் உலகக் கிண்ணத்தையும், சம்பியன்ஸ் கிண்ணத்தையும் கைப்பற்றினோம். எத்தனை தலைவர்கள் இதுபோன்ற சாதனைகளை எட்டியுள்ளனர் என்பது எனக்கு உறுதியாகத் தெரியாது. அவர் ஒரு மகத்தான தலைவர் என யுவராஜ் மேலும் தெரிவித்தார்.
மேற்குறிப்பிட்ட மூன்று வகைக் கிண்ணங்களையும் வென்ற ஒரே தலைவர் டோனி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# வோஸ்னியாக்கி சிறந்த ஆரம்பம்

சிட்னி ரென்னிஸ் தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றிபெற்றார் வோஸ்னியாக்கி.
வோர்ஸ்னியாக்கியை எதிர்த்து மோனிகா மோதினார். முதல் செற்றை 6:3 என்ற அடிப்படையில்வோஸ்னியாக்கி வென்றார். இருப்பினும் இரண்டாவது செற்றை அவர் 2:6 என்ற அடிப்படையில் இழந்தார். சரிவில் இருந்து மீண்ட வோஸ்னியாக்கிஇறுதிச்செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில்கைப்பற்றியதை அடுத்து அவர் 2:1 என்றசெற்கணக்கில் வென்றார். (ம)





# பேராதரவு!

32 அணிகளாக அல்லாமல் 48 அணிகளுடன் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 32 அணிகளுடனேயே கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர்நடைபெற்றுவருகிறது. இந்த எண்ணிக்கை 48 ஆக உயர்வடைய வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் மூன்று அணிகள் வீதம் 16 குழுக்களாக அணிகளைப் பிரித்துவிலகல்முறையில் தொடரை நடத்தி பின்னர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் சிறந்த இரு அணிகளைத்தெரிவுசெய்து லீக் அடிப்படையில் கிண்ணத்துக்கான போட்டி ஆரம்பிக்கும் என இன்பான்ரினோ கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். பிபாவின் நிர்வாகக் குழு இன்பான்ரினோவின் திட்டத்துக்கு தனது ஆதவை நேற்று முன்தினம் வழங்கியது. (ம)

# தெ. ஆபிரிக்காவுக்கு எதிராக இளம் வீரர்கள் களத்தில்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி-20 தொடரில் இளம் வீரர்களைக் களமிறக்க இலங்கை கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது என்று தகவல்கள் வெளியாகின.
தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது இலங்கை. டெஸ்ட் தொடரில் முதல் இரு ஆட்டங்களும் முடிந்துள்ளன. இரண்டிலும் இலங்கை தோல்வியடைந்தது. மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. அடுத்ததாக ரி-20 தொடர் ஜனவரி 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இலங்கை அணியிலேயே இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
சகல துறை வீரரான டி சில்வா, துடுப்பாட்ட வீரர்களான வீரக்கொடி, டிக்வெல்ல ஆகியோரையே அவ்வாறு இலங்கை கிரிக்கெட் சபை களமிறக்கவுள்ளது என்று அறியவருகிறது. எனினும் இலங்கை கிரிக்கெட் சபையால் உத்தியோகபூர்வமாக எந்தக் கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. (ம)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடமாகாண ஆசிரியர்
தெரிவு நேர்முகப்
பரீட்சைக்கான இலவச
வழிகாட்டல் கருத்தரங்கு
வியாழன் 12.01.2017
பி.ப 2.30 மணிக்கு
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்நகர்)
போட்டிப்பரீட்சை
வகுப்புக்கள்
காணிவெளிக்கள
போதனாசிரியர்
வியாழன் (12.01.2017)
10.00 - 3.00
ஞாயிறு 1.00 - 5.00
இலங்கை வங்கி மற்றும்
ஏனைய வங்கிகள்
வியாழன் (12.01.2017)
01.00 - 5.00
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு

# புனேயின் தலைவராக தொடர்வதில் உறுதி

## டோனியின் வெளிப்பாடு

இந்திய அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகியபோதிலும் ஐ.பி.எல். தொடரில் புனே அணியின் தலைவராக நீடிக்கும் நம்பிக்கையை டோனி வெளிப்படுத்தினார். இங்கிலாந்து லெவன் அணிக்கு எதிராக நேற்று இந்திய ஏ அணி பயிற்சி ஆட்டத்தில் விளையாடியது. டோனி, தலைவராக நீலச் சீருடையில் களமிறங்கிய இறுதி ஆட்டம் இதுவே. இந்த ஆட்டத்துக்கு முன்னதாக கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி இவ்வாறு தெரிவித்தார்.

இது எனக்குச் சிறப்பு வாய்ந்த ஆட்டம். இந்தியாவுக்காகத் தலைவராக நான் களமிறங்கும் இறுதி ஆட்டம் இதுவே. ஆனால் ஐ.பி.எல். தொடரில் புனே சுப்பர் ஜெயின்ட் ஸின் தலைவராகத் தொடர்வேன் என்று டோனி மேலும் தெரிவித்தார். (ம)



### உயர்கல்விக்கான புலமைப்பரிசில்

CIMA-UK, CompEngineering(Networking/Web/Software)-USA, BIT_university of Colombo ஆகிய கற்கை நெறிகளிற்கு புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. புலமைப்பரிசிலானது மாணவர்களிற்கு பதிவுக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக்கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணங்களில் வழங்கப்படவுள்ளது. மேலும் இம்மாணவர்களிற்கு மேலதிகமாக Msoffice, English, Accounting Package ஆகிய டிப்ளோமா கற்கை நெறிகளை முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது. கற்கை நெறிகளின் முதலாம் கட்டம் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழ்கள் உரிய நிறுவனங்களினால் வழங்கப்படும். திறமையினை வெளிப்படுத்தும் மாணவர்களிற்கு தொடர்ந்தும் புலமைப்பரிசில் வழங்கப்படும். இடவசதியினை கருதி தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தாம் விரும்பும் கற்கை நெறி, தமது முழுப்பெயர், பிறந்த திகதி முகவரி என்பவற்றை 772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் நேரில் பெற்றுக் கொள்ளலாம். ClosingDate14Jan

### WALK IN INTERVIEW

*Manager (Female)
*Receptionist (Female)
*Data Entry Operators (Female)
*Sales Executive (Male)

தகைமை - A/L சித்தி,
ஆங்கில அறிவு,
சிறந்த பேச்சாற்றல்,
கணினி அறிவு, பட்டதாரிகளும்
விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை - 18 - 30
சம்பளம் 15 000/= - 50 000/=
சுயவிவரக்கோவை, புகைப்படம்,
கல்விச்சான்றிதழ் என்பவற்றுடன்
உடன் நேரில் வரவும்.
Interview Time - 11am - 4pm

WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி,
திருநெல்வேலி.
www.winstarjaffna.com
021 320 2789

Physics (A/L)2019
English & Tamil Medium
Personal &group Classes
Address: 2/1 மருதடி லேன் நல்லூர்
தொடர்பு:- 0777158667
By S.Uiroviyam.B.Sc(spl)

### வழிகாட்டி
VALIKAADDY
நடாத்தும்
உயர்தர பாடத் தெரிவு வழிகாட்டி

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின்
உயர்கல்வித் திட்டமிடலை
சரியாக மேற்கொள்ளுங்கள்.



மாணவர்களே! உங்களுக்கு
வழிகாட்ட கல்வியின்
சிகரங்கள் காத்திருக்கிறார்கள்

O/L பரீட்சைக்கு
தோற்றிய
மாணவர்களுக்கு

அனுமதி இலவசம்

இடம் :- யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் :- 12.01.2017 வியாழக்கிழமை
நேரம் :- காலை 8.30 மணி

முற்பதிவு அவசியம் 071 8 691 691

உயர்தர வழிகாட்டி
கருத்தரங்கை
வழிநடாத்த உள்ள
வளவாளர்கள் விவரம்

உயிரியல் பிரிவு
Biology stream
Dr.P.Sevvel
Senior lecturer
Department of botany.
University of Jaffna.

வணிகவியல் பிரிவு
Commerce stream
Prof.T.Velnampy
Dean,
Faculty of Business Management,
University Of Jaffna

தொழில்நுட்ப பிரிவு
Technology stream
Prof.K.Kandasamy (Rtd.)
Senior Professor of Physics,
Consultant,
Faculty of Technology,
University Of Jaffna

கலைப் பிரிவு
Arts stream
N.Piratheeparajah
Senior Lecturer
Department of Geography
University of Jaffna


கணித பிரிவு
Maths stream
Prof.P.Ravirajan
Professor in Physics
Former Head of Physics
Director-Staff Development Centre,
University of Jaffna

"கல்வியே வாழ்க்கையின் வழிகாட்டி"

பிரதான அனுசரணை: Mobitel We Care. Always.
இணை அனுசரணை: BCAS CAMPUS Jaffna Campus
ஊடக அனுசரணை: உதயன்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (11.01.2017) புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் 32 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளும் எமது கல்லூரியின் ஆசிரியர்களான



திரு. அருள்நந்தி
சியாமளரூபன்
B.Ed in Science, PGDE,
NDT (Science - Distinction)
M.Ed (First Class)

BEST WISHES



திருமதி தயாநிதி
திருக்குமரன்
B.A (Hons) Eco.Spl,
PGDE, M.Ed (2nd Upper)

இவர்களை மேலும் பட்டங்கள், பதவிகள் பெற்று சிறப்புடன் வாழ மனமுவந்து வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றோம்.

Congratulations

நலன்புரிகழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

இம்முறை
தனயோகம்
உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 10.01.2017 | 2081 | நீலம் |

விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்
17 29 35 54

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 6,045,305/=

வெற்றி இலக்கங்கள்
59 80
டபிள் சான்ஸ்

2017.01.13ஆம் திகதி வெள்ளிக்கிழமை
சீவப்பு நிற முக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு
செல்லுபடியாகும்
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
1919 இற்கு அழையுங்கள்

### வேலைவாய்ப்பு

இலகு தவணைமுறையில் வீட்டுக்குத் தேவையான தளபாடங்களை விநியோகிக்கும் Golden Group Company, 2017 இல் புதிதாக ஆரம்பிக்கும் தனது 2 ஆவது கிளைக்கான 4 வகையான பதவி வெற்றிடங்கள்.

1. வெளிக்கள உத்தியோகத்தர்
2. உதவி முகாமையாளர்
3. மேற்பார்வையாளர்
4. அலுவலகப் பெண்

* தகைமை :- குறைந்தபட்சம் G.C.E (O/L)
* வயதெல்லை 18-38

- அடிப்படை சம்பளம் 18500 + உணவுப்படி வழங்கப்படும்.
- 120 - 150 நாள்கள் பயிற்சியளித்து உள்வாங்கப்படுவதோடு நிரந்தரமான வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- முன்பதிவு செய்யும் 20 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :
077 998 7699,
077 884 8188

இல. 38, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
சென். சாள்ஸ் பாடசாலை அருகில்

### Study MBBS

ADMISSIONS ARE OPEN NOW

Approved by Sri Lankan Medical Council
UK, ECFMG-USA, IMED, WHO & UNESCO

* Raiga Strands University - Latvia
* IMU - Malaysia
* Manipal University - India / Malaysia
* Segi University - Malaysia
* Sichuan University - China
* China Medical University - China
* Tongji University - China
* Guangxi University - China
* Zhengzhou University - China
* Ningbo University - China
* Gomel State Medical University - Belarus
* Vitebsk State Medical University - Belarus



Dhaka Medical College
Chittagong Medical College
100% SCHOLARSHIPS**
** Conditions Apply

ICS Study Medicine Abroad
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
107, B-1/1 Galle Road, Colombo 06.
011 4343322, 0214926222
For Appointments, Contact: 0773013060

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org